Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 059 | ஞாயிற்றுக்கிழமை | தை 11 ஆம் நாள் 24 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# இந்தியாவிலிருந்து 6 லட்சம் தடுப்பூசிகள் புதன்கிழமை வரும்

ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 24

இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட்–அஸ்ட்ராஜெனெகா கொரோனா தடுப்பூசிகள் இலங்கைக்கு எதிர்வரும் புதன்கிழமை கிடைக்கும். முதல் கட்டமாக 3 லட்சம் பேருக்கு வழங்குவதற்கு ஏதுவாக 6 லட்சம் தடுப்பூசிகள் கொண்டு வரப்படவுள்ளன என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். 15 ➤

## கொக்குவில் வாசிக்கு கொரோனாத் தொற்று

**பல இடங்களிலும் நடமாடியவராம்!**

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம், கொக்குவிலைச் சேர்ந்தவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப் 15 ➤

## அரச மரத்துடன் கேணி அபகரிக்க முஸ்தீபா?

*கந்தரோடையில் பதற்றம்*

யாழ்ப்பாணம், ஜன. 24

கந்தரோடையிலுள்ள வற்றாக்கை அம்மன் ஆலய கேணியையும் தொல்பொருள் முக்கியத்துவம் 15 ➤

## உள்ளூரில் மற்றொரு கொரோனா மருந்து

***3 நாளில் குணமடையவில்லை என்றால் உயிர்துறப்பேன் என்கிறார் சுதேச மருத்துவர்***

கொழும்பு, ஜன. 24

கொரோனா வைரஸை முற்றிலுமாக அடக்கும் உள்ளூர் மருந்தை உருவாக்கியுள்ளேன் என சுதேச மருத் 15 ➤

## சுரேஸ் கூறுவது பச்சைப் பொய்

*கஜேந்திரகுமார் காட்டம்*

யாழ்ப்பாணம், ஜன. 24

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கு எழுதிய கடிதத்தில் 'இனப்படு 15 ➤



## தமிழக மீனவர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

நெடுந்தீவுக்கும் கச்சதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த 4 மீனவர்களின் சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனை 15 ➤

கொழும்புத் துறைமுக

## முனையத்தை இந்தியாவுக்கு கொடுக்காமல் என்ன செய்வது?

கோத்தாபய கேள்வி

கொழும்பு, ஜன. 24

இந்தியாவுடன் செய்துகொள்ளும் துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டம் முற்றுமுழுதாக முதலீடாகும். அரசு முன்னெடுக்கும் சகல வேலைத்திட்டத்துக் 15 ➤

**முச்சந்தி முரளி**

"ஹார்பர் வித்து ஊசி வாங்கினேன் டும் டும் டும்"
"ஊசி கொடுத்து 'பிணம்' வாங்கினேன் டும் டும் டும்"



## இலங்கையின் கண்துடைப்பை சர்வதேசம் கண்டுகொள்ளக்கூடாது

*மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை*

கொழும்பு, ஜன. 24

போர்க்காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 15 ➤

## தனிமைப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு சுபநேரத்தில் நேற்றுத் திருமணம்!

**பருத்தித்துறையில் சம்பவம்**

யாழ்ப்பாணம், ஜன. 24

கொரோனா தொற்றாளருடன் தொடர்புடைய பெண் ஒருவர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 15 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
Dialog
எதிர்காலம் இன்றே.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வஜன வாக்கெடுப்புக்கு இதுதான் தக்க தருணம்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் உறவுகள் தெரிவிப்பு

**வவுனியா, ஜன. 24**

**தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளும் வகையில், தங்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வு தேவை என்பதற்கு பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கு இதுவே பொருத்தமான தருணம்.**




பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகிடம் நாம் முன்வைக்கின்றோம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் வவுனியாவில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை 2017ஆம் ஆண்டு ஆரம்பித்தனர். தம்மை அலரிமாளிகைக்கு அழைத்து ஏமாற்றிய 4ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

'கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், இரண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது வாக்கெடுப்புக்கு உறுதியளித்தன. ஆனால் இந்தக் கட்சிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் பொது வாக்கெடுப்பை சேர்க்கத் தவறிவிட்டன. நமக்கு என்ன தேவை என்று கேட்க வேண்டுமே தவிர நாம் மற்றவர்களுக்கு செவிசாய்க்கக்கூடாது. எங்களுக்கு வாக்கெடுப்பு தேவை என்று ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுக்குச் சொல்ல இதுவே சிறந்த தருணம். இந்த நேரத்தை நாங்கள் தவறவிட்டால், வாக்கெடுப்பு கோர வேறு எந்த நேரமும் எங்களுக்கு கிடைக்குமா தெரியாது. என்றனர். (ஒ.110)

# சீனி வரி குறைப்பால் வருமானம் யாருக்கு?

## நளின் கேள்வி



**கொழும்பு, ஜன. 24**

சீனிக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் அரசுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எவ்வித பயனும் கிடைக்கவில்லை. அடுத்த மூன்று மாதங்களில் இறக்குமதி செய்யப்படவுள்ள 2 இலட்சம் மெட்ரிக் தொன் சீனி மூலம் அரசுக்கு நெருக்கமானவர்களுக்கு 990 கோடி ரூபா வருமானம் கிடைக்கவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

சீனி இறக்குமதி வரியில் அண்மையில் பெரும் மோசடிகள் இடம்பெற்றன. அரசுக்கு 11 ஆயிரத்து 400 கோடி ரூபா வருமானம் கிடைக்காமல் போயுள்ளதோடு மக்களுக்கும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

திறைசேரியில் நிதி இல்லாத போதிலும் இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரசு அண்மையில் அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3 மாதங்களில் 2 இலட்சம் மெட்ரிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்படவுள்ளதோடு 990 கோடி ரூபா வருமானம் வர்த்தகர்களுக்கு இலாபமாக கிடைக்கும். இது நாட்டுக்கு பேரிழப்பு. என்றார். (ஒ.வ.இ)

# பரிசோதனைக்கு ஒத்துழைக்காது மன்னிப்புக் கோரி தப்பித்த சாரதி

## எழுதுமட்டுவாழில் சம்பவம்

**சாவகச்சேரி, ஜன. 24**

கொரோனா பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்காத காரின் சாரதி, மன்னிப்புக் கோரியதை அடுத்து பொலிஸார் அவரை எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் நடந்துள்ளது.

சாவகச்சேரி சுகாதார பிரிவினர் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் கொரோனா தொற்று அதிகம் காணப்படும் பிரதேசங்களிலிருந்து ஏ 9 வீதி ஊடாக வரும் வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

கொழும்பிலிருந்து வந்த ஓர் குடும்பத்தை பரிசோதனையில் பங்கெடுக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கூறினர். காரில் இருந்து முகக் கவசம் இன்றி சாரதி இறங்கிய தாகவும், அவர் பரிசோதனைக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

அரச அதிகாரிகளைக் கடமை செய்ய விடாமல் தடுத்தார் என்று தெரிவித்து அவரைக் கைது செய்ய முற்பட்ட போது, தனது தவறை உணர்ந்த சாரதி மன்னிப்புக் கோரியதை யடுத்து எச்சரிக்கை செய்து விடுவித்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.ப,9)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை மீளாய்வு செய்யவேண்டும்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை

**கொழும்பு, ஜன. 24**

இலங்கையிலுள்ள குற்றவியல் நீதி அமைப்பு, பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பான விடயத்தை எதிர்கொள்ளும் போது மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலில் சட்டம், பயங்கரவாதத்தின் வரையறை மற்றும் வழக்குகளின் பின்னிணைப்பை நிவர்த்தி செய்வது உள்ளிட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தைத் தடுக்கும் நோக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கு நியாயமான விசாரணை மற்றும் உரிய செயன்முறையை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் பயங்கரவாத குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரின் மீதும் பாகுபாடு காட்டுவது மற்றும் களங்கம் விளைவிப்பது போன்ற விடயங்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக, பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில், குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வை வழங்குவதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# காணி அபகரிப்பு நாளை போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜன. 24**

வேலணை, மண்டைதீவு மற்றும் மண்கும்பான் பிரதேசங்களில் கடற்படையினரினால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை நாளை திங்கட்கிழமை காலை 8 மணியளவில் வேலணை பிரதேச செயலகத்துக்கு முன்பாக நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு பொதுஅமைப்புக்கள், மத குருமார், சமூக நலன்விரும்பிகள், தமிழ் தேசிய அரசியல் செயற்பாட்டாளர்கள் அனைவரையும் ஆதரவு வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ.320)

# பருத்தித்துறை கடலில் சடலம்

**பருத்தித்துறை, ஜன. 24**

பருத்தித்துறை கடற்கரைப் பகுதியிலிருந்து நேற்றுக் காலை மூதாட்டி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிரதான வீதி பருத்தித்துறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் புனிதவதி (வயது 81) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை பதில் நீதிவான் நடராசா ரஜீவன் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பருத்தித்துறை மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரி வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டதுடன், இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ச.சிவராஜா மேற்கொண்டார்.

நோய் நிலைமையால் அவதிப்பட்டிருந்த அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.26,159)

# இளைஞனைத் தேடி வந்த கும்பல் வீட்டுப் பொருள்களை நொருக்கியது

## செட்டிகுளத்தில் பயங்கரம்

**வவுனியா, ஜன. 24**

வவுனியா செட்டிகுளத்தில் இனந்தெரியாத நபர்கள் வீட்டுக்குள் புகுந்து நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். வீட்டுத் தளபாடங்கள், பொருள்கள் கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

செட்டிகுளம் சண்முகபுரம் கிராமத்தில் உள்ள வீட்டுக்குள் 'பட்டா' ரக வாகனத்தில் வாள் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் புகுந்த இனந்தெரியாத கும்பல் தாக்குதலை மேற்கொண்டதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

தனது மகனை தேடி வந்த கும்பல் அவர் இல்லாத காரணத்தால் வீட்டை அடித்து உடைத்து நாசம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஒ.110)

# நேரத்தை வீணடிக்கவே ஜனாதிபதி ஆணைக்குழு

## கோத்தாவைப் போட்டு உலுப்புகிறார் சூக்கா

**ஜெகனஸ்பேர்க், ஜன. 24**

**மோசமான சர்வதேசக் குற்றங்கள் ஏதாவது இலங்கையில் புரியப்பட்டனவா என்பதை ஆராய்வதற்கு இன்னுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது மிகவும் கேலிக்கூத்தானதாகவும், ஏமாற்றுத்தனமானதாகவும், பாதிக்கப்பட்டவர்களை அவமதிப்பதாகவும் உள்ளது. இந்த ஆணைக்குழுவானது தெளிவற்ற மற்றும் நேரத்தை வீணடிக்கும் ஒன்று மாத்திரமே. அத்துடன் அதற்கு நம்பகத்தன்மை வழங்கப்பட்டால் அது ஐ.நாவின் முழு நடவடிக்கையையுமே பலவீனமாக்கும். இவ்வாறு தென்னாபிரிக்காவின் இடைநிலை நீதி அதிகாரியும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் 2015 இல் ஆணையிடப்பட்ட ஒரு விசாரணையானது குற்றவியல் குற்றச்சாட்டுக்களை மேற்கொள்வதற்கான ஒரு போதிய தொடக்க நிலை உள்ளதை உறுதி செய்ததுடன் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவற்றைச் செய்வதில் அரசின் பங்கையும் தெளிவாக எடுத்துக்காட்டியது. இதுவரை விசாரிக்கப்படாத கடுமையான மீறல்கள் மற்றும் குற்றங்கள் புரியப்பட்டதை அரசே குறிப்பாக ஏற்றுக் கொண்டமையால் மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணையின் பரிந்துரைகளைக் கொண்ட 4 பக்கங்களை சாதாரணமாக மீள்பார்வை செய்ய வேண்டிய அதேவேளையில் கடந்தகால ஆணைக் குழுக்களின் கண்டுபிடிப்புக்களை அடையாளம் காண்பதற்கு ஒரு ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும் என்பது கேலிக்கூத்தானதாகும்.

நடைமுறைப்படுத்தல் என்பது இதுவரை இடம் பெறவில்லை என்பது போதியளவுக்கு தெளிவாக உள்ளது. அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகள் தமது சொந்த மக்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட்டவற்றுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஈடுபாடு பற்றி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார்கள்.

தீர்மானம் 30/1 மற்றும் அடுத்து வந்த தீர்மானங்களும் இலங்கை அரசின் உடன்பாட்டுடன் பொறுப்புக்கூறல், தேசிய நல்லிணக்கம் மற்றும் குணப்படுத்தலை ஊக்குவிப்பதற்கு இடைக்கால நீதிக்கான ஒரு விரிவான முழுமையான திட்ட வரைவை உருவாக்கியது.

மீளாய்வு செய்யப்படவேண்டிய மீறல்கள் பற்றிய எந்தக் காலவரையறையும் கொடுக்கப்படாமல் இலங்கையின் இந்தப் புதிய ஆணைக்குழுவின் விதிமுறைகள் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன.

குற்றங்கள் புரியப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராக முக்கிய பணியாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு மனிதராலேயே நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவானது இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் பற்றிய ஒரு வாசிப்பு குழுவைவிட கொஞ்சம் பரவாயில்லை.

இந்த புதிய ஆணைக் குழுவானது ஒரு நீதிபதியால் தலைமை தாங்கப்படுகின்றது. இந்த நீதிபதி ஐக்கிய நாடுகளில் இலங்கையை தற்காத்துக் கொள்வதில் குறைந்தது 4 சந்தர்ப்பங்களில் கடந்த காலத்தில் அவர் ஆற்றிய பணி தொடர்பில் பலநலன் முரண்பாட்டுப்பிரச்சினைகள் உள்ளன.

தான் பகிரங்கமாகவே எதிராக வாதாடிய ஐ.நா. அறிக்கைகளை இந்த ஆணைக் குழுவின் தலைவரால் நடுநிலைமையான முறையில் விசாரிக்க முடியாது. இதை விட அரசைப் பாதுகாக்கும் சட்டத்தரணியாகவும் அத்துடன் சட்டத்தரியாகவும் இரட்டை பணியாற்றுவதாக முற்றிலும் விமர்சிக்கப்படும் அவர் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் அங்கம் வகிக்கின்றார்.

இந்தப் புதிய ஆணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட இன்னுமொருவர் ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ. இவர் அண்மைய காலம் வரை அரசியல் மயமாக்கல் பற்றிய அரசியல் மயமான ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்தார்.

சென்ற அரசின் கீழ் கொண்டவரப்பட்ட அரசியல் மயமாக்கல் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட சம்பவங்கள் பற்றிய அவரது அறிக்கை இன்னமும் வெளியிடப்பட வில்லை.

பெர்னாண்டோ 2004ஆம் ஆண்டு ஜூன் வரை பொலிஸின் தலைவராக இருந்தார் என்பதால் அந்தக் காலப் பகுதியில் பொலிஸ் படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கையில் அவர் பாரபட்சமற்றவராகவும் சுயாதீனமானவராகவும் செயற்படுவது கடினமானதாக இருக்கும்.

இவர் பதவியில் இருந்த போது விசாரணைகளைத் தலைமை தாங்குவதில் அவர் தோல்வி கண்டது பற்றி கடந்த காலங்களில் இலங்கையிலுள்ள செயற்பாட்டாளர்கள் கேள்விகள் எழுப்பியுள்ளார்கள்.

இந்த ஆணைக்குழுவானது தெளிவற்ற மற்றும் நேரத்தை வீணடிக்கும் ஒன்று மாத்திரமே. அத்துடன் அதற்கு நம்பகத்தன்மை வழங்கப்பட்டால் அது ஐ.நாவின் முழு நடவடிக்கையையுமே பலவீனமாக்கும், என்றுள்ளது. (ஒ.22)

**தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டிட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமும் திறமையும் உடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை.
வர்ணம் பூசுபவர் (Painter) தேவை.
தொடர்புகளுக்கு: 077 592 5371, 077 985 1946
Email- careers@decon.lk

**Personal Classes**
Grade 10,11 and A/L Maths Personal Classes
உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
B.Sc (Hons) in Maths பட்டதாரி ஆசிரியர்
Contact Number: 077 166 6297

**வேலையாட்கள் தேவை**
யாழ் கொழும்பு அதிசொகுசு Bus க்கு உதவியாட்கள் தேவை.
தொடர்பு: 076 009 4946

**வேலையாட்கள் தேவை**
மிக்சர் தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ள ஆண், பெண் தேவை.
கிச்சன் வேலைக்கும்/பக்கிங் வேலை
தொடர்பு: 077 546 0028

**GRAPHIC DESIGNER -தேவை**
COREL DRAW, PHOTOSHOP என்பவற்றில் 3-5 வருடத்திற்கு குறையாத முன்னனுபவம், OFFSET PRINTING தொடர்பில் அறிவும் இருக்க வேண்டும்.
அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
077 7111 666

**SALES REP - JOB**
யாழ் பிறவுண் வீதியில் இயங்கும் (TAATAS) உணவு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு SALES REP தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு TAATAS.COM பார்த்துவிட்டு அழைக்கவும்.
தொடர்பு: 077 711 1666

**விற்பனைக்கு**
யாழ் பிறவுண் வீதியில் 4 பரப்புக் காணியும், யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் வீடும், யாழ் கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும், யாழ் நாவலர் வீதியில் 3 பரப்புக் காணியும், யாழ் நல்லூருக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 723 2535

**வேலை வாய்ப்பு**
யாழ்நகரில் இயங்கும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தொழில் திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு: 070 407 7712

**மணமகள் தேவை**
1979.02.07 இல் பிறந்த 5'.6" உயரமுடைய சைவ உயர்குல மிருகசீரிடம், 2ஆம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை.
077 330 1798

**இலவச கணினி, ஆங்கில வகுப்புக்கள்**
புதிய பிரிவுகள் - 31
English Courses
* Certificate in Spoken English
* Foundation Diploma in English
* Diploma in Spoken english
* Diploma in Teaching English
ICT Courses
* Diploma in Ms-Office
* Diploma in Website Development
* Diploma in e-Commerce
* காலம்:3 மாதங்கள் * சான்றிதழ் கற்கைகள்
ஆரம்பம்: 30,31 01-2021, காலை 10 AM
IPS
யாழ். பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Mobile : 076 685 2529

**வேலையாட்கள் தேவை**
எமது நிறுவனத்திற்கு கீழ்க்காணும் நிரந்தர வேலையாட்கள் தேவை.
தங்குமிடவசதி உண்டு.
1. வாகன சாரதி
2. மரஇயந்திர இயக்குபவர்
3. காசாளர்
4. கூலிவேலையாட்கள்
தொடர்பு: ஆர்க் தளபாட நிலையம்
இல: 35, கொட்டைக்காடு ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு. (பஸ் டிப்போ அருகாமை)
T.P:- 077 300 1763

## விளையாட்டு காரில் ஐஸ் போதைப்பொருள்

### வல்வெட்டித்துறையில் சந்தேகத்தில் 3பேர் கைது



யாழ்ப்பாணம், ஜன. 24

வல்வெட்டித்துறையில் வீடொன்றில் விளையாட்டு காரில் ஐஸ் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் மூவரை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

அந்தப் பகுதியில் போதைப் பொருள் வியாபாரம் இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின் போது சிறு பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக் காரின் உட்பாகத்தில் இரகசியமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ.20)

## 280ஆக உயர்ந்தது கொரோனாச் சாவு

கொழும்பு, ஜன. 24

கொரோனா தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

மேலும், 724 பேருக்குக் கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 53 ஆயிரத்து 710 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 57 ஆயிரத்து 587 ஆக அதிகரித்துள்ளது. (ஒ.22)

## வவுனியாவில் மேலும் 12 பேருக்கு தொற்று

வவுனியா, ஜன. 24

வவுனியாவில் 15பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவின் நகரப் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றும் தனிமைப்படுத்தப்பட்ட 12 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

வவுனியாவில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை கடந்த பத்து நாள்களில் 287ஆக அதிகரித்துள்ளது. (ஒ.110)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.02.1953 மறைவு 24.01.2012

அமரர்

## கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)


(உரிமையாளர் ஞானம் பெயின்ற்)

ஆளுமையின் சிகரமாய் - அரவணைத்து
ஆற்றல் உள்ளவராய் - எமை வளர்த்தீர்கள்
அப்பா
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் - என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்

'விஜயமகால்'
பழைய தபாற் கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28 . 12 . 1937 மறைவு 25 . 12 . 2020

அமரர்

## திரு. செல்லத்துரை கணேசலிங்கம்

(இராசா அம்மான்)

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஊற்றாய்
எம்முடன் வாழ்வாய் என இருக்க
கொடிய நோய் கொன்றதேனோ
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை மேற்கு 5 ம் வட்டாரத்தை (சிற்பனைன) பிறப்பிடமாகவும் 141/5. நல்லூரை வதிவிடமாகவம் தற்போது கைதடி வடக்கு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை கணேசலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறதல் கூறியவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
கைதடி வடக்கு, கைதடி.
078 3700 318

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 04 . 1987 இறப்பு 22 . 01 . 2021



## சதீஸ்வரன் கஜந்தி

சாவகச்சேரி, சங்கத்தானை, பொன்னுச்சாமி வீதியினை பிறப்பிடமாகவம் வதிவிடமாகவும் கொண்ட சதீஸ்வரன் கஜந்தி இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் குணபாலசிங்கம்-புனிதவதியின் மகளும், சதீஸ்வரன் (சதீஸ், கோண்டாவில் வடக்கு) மனைவியும், குணரத்தினம்-பேபி ஆகியோரின் மருமகளும், திருசிகா (நவில்ட் பாடசாலை - கைதடி), கிருஸ்பா, தர்மினா (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபாலபிள்ளை, அழகம்மாவின் பேர்த்தியும், புகதீசன் (ஜேர்மனி), விமல தாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், அகிலா (ஜேர்மனி), அமீரா (அலியான்ஸ் இன்சூரன்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சண்முகராசா, கோபாலரட்ணம், பிரேமாவதி, பத்மாவதி, லீலாவதி (சுவீடன்), ரேவதி (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகளும், இராஜரட்ணம் (நோர்வே), ஜெய லட்சுமி, நகுலேஸ்வரி, சறோஜினிதேவி, புஸ்பராணி ஆகியோரின் மருமகளும் கவினா, எப்சிபா ஆகியோரின் அத்தையும் ஆவார்.
அன்னாரன் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 11.00 மணியளவில் இடம்பெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
புகதீசன் (ஜேர்மனி) - 004915212103348
விமலதாசன் (பிரான்ஸ்) - 0033749499208
லீலாவதி - 0046738909812
ரேவதி - 00491794417780
இராசன் - 004740281891

தகவல்:
சதீஸ்வரன் (கணவர்)
077 7579 482

# மரண அறிவித்தல்



## திருமதி சிவப்பிரகாசம் புனிதவதி

ஆவரங்காலினை பிறப்பிடமாகவும் பருத்தித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் புனிதவதி 23.01.2021 அன்று அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் ஆசைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற நாகமணி சிவப்பிரகாசம் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான ஆ.சிவபாதம், ஆ.சண்முகம் ஆ.சர்வானந்தம் மற்றும் த.பூமணி, ஆ.தியாகராஜா ஆகியோரின் சகோதரியும் சிவபாஸ்கரன் (சுவிஸ்), பாலபாஸ்கரன் (பிரான்ஸ்), பகீரதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் செந்தூராணி (சுவிஸ்), தியாகேஸ்வரி(பிரான்ஸ்), குகன் (உரிமையாளர் குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுவர்ணன், ஜஸ்வர்ணன் (சுவிஸ்), டிலானி, நிலானி (பிரான்ஸ்), றஜீன் வேணுகா (லண்டன்), றிசாந் குகரேகா (சிங்கப்பூர்) ஆகியோரின் பேர்த்தியும், றீஷா மற்றும் அனீஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (24.01.2021) 09.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகரத்தினம் குகன் (மருமகன்)
உரிமையாளர்,
குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை

T.P 0777283706


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
வட்டியற்ற மாதங்கள் கூடியது
மாதாந்த கட்டணங்கள் குறைந்தது
இப்போ நோ பொலி அதனால செம்ம ஜொலி
வட்டி இல்லை ஜொலி அதிகம்
முந்துங்கள், இச்சலுகை ஜனவரி 23 - 31 வரை மாத்திரம்!
40 மாதங்கள் Sampath Cards
36 மாதங்கள் COMMERCIAL BANK HNB
24 மாதங்கள் Nations Trust Bank
21 மாதங்கள் HSBC
LG Inverter Air Conditioner
2 YEAR WARRANTY + 3 FREE SERVICES
LGACINQ09JA3BD
ரூ. 119,990
ரூ. 3,000 மாதாந்தம்
LG LED தொலைக்காட்சி
43"
LGTV43LM5500PTA
ரூ. 84,999
ரூ. 2,125 மாதாந்தம்
3 வருட இலவச உத்தரவாதம்
LG LED தொலைக்காட்சி
Bass Blast
CL65D
ரூ. 44,999
ரூ. 1,125 மாதாந்தம்
Authorized Reseller | Authorized Service Provider
Apple Watch SE
ரூ. 79,999 இலிருந்து
ரூ. 2,000 இலிருந்து மாதாந்தம்
Authorized Reseller | Authorized Service Provider
iPhone 12 mini
ரூ. 184,999
ரூ. 4,625 மாதாந்தம்
Available colours : BLACK, WHITE, RED, BLUE, GREEN
ஸ்மார்ட்போன்
oppo
vivo
TRCSL Approved
1 வருட உத்தரவாதம்
F17
ரூ. 54,990
ரூ. 1,375 மாதாந்தம்
V15
ரூ. 59,990
ரூ. 1,500 மாதாந்தம்
JBL by HARMAN
REFLECT FLOW
JBLHPHREFFLOWBLK
ரூ. 30,599
ரூ. 765 மாதாந்தம்
acer LAPTOP
2 வருட இலவச உத்தரவாதம்
ACPCL5151711GI7
ரூ. 176,990
FIRST TIME IN SRI LANKA
• 11th Gen Intel Core i7
• 15.6" FHD
• Windows 10 Home
• 1TB HDD / 8GB DDR4 / 2GB VGA
ரூ. 4,425 மாதாந்தம்
LG குளிர்சாதனப் பெட்டி
258L
ஸ்மார்ட் இன்வர்டர்
GL-K272SLBB
ரூ. 86,990
ரூ. 2,175 மாதாந்தம்
ABSGDH
Haier FREEZER
719L
HRFRCH719HSEP
ரூ. 144,990
ரூ. 3,625 மாதாந்தம்
Abans
பூரண தானியங்கி சலவை இயந்திரம்
7.5KG
10 வருட இலவச உத்தரவாதம்
ABWMFAU-75FAE
ரூ. 49,990
ரூ. 1,250 மாதாந்தம்
Abans
மைக்ரோவேவ் அவன் - 21L
ABOVAMS21SL
ரூ. 12,990
ரூ. 325 மாதாந்தம்
0115 999 000
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்.
Buy Abans.com
Abans

# தமிழில் தேர்ச்சியை விசேட தகைமையாக கருதுவது இஸ்லாமிய அடிப்படைவாதத்தை உருவாக்கும்

## எச்சரிக்கிறார் எல்லே குணவங்க தேரர்

கொழும்பு. ஜன. 24


பொலிஸ் பரிசோதகர் நியமனத்தில் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை அரசமைப்புக்கு முரணானதாகும். மொழி அடிப்படையில் நியமனம் வழங்கினால் முஸ்லிம் இனத்தவர்கள் அதிகளவில் உள்வாங்கப் படுவார்கள். இது அரசமைப்புக்கும், நாட்டு மக்களுக்கும் இழைக்கும் துரோகமாகும். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்டி, தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்க தேரர் 12 பேரின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நீதியமைச்சர் அலிசப்ரி ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கமைய பொலிஸ் திணைக்களத்துக்காக பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 150 சட்டத்தரணிகளை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளமை விசேட தகைமையாக கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு சார்பான அமையும் மற்றுமொரு செயற்பாடாகவே இதனைக் கருத வேண்டும்.

சட்டத்துறையிலும் முஸ்லிம் சமூகத்தினர் அதிகளவில் செயற்பட்டு வருகின்றனர். தமிழ்மொழியில் தேர்ச்சி விசேட தகைமை என்பதை நடைமுறைப்படுத்தினால் முஸ்லிம் சமூகத்தினரில் பெரும்பாலானோர் பொலிஸ் பரிசோதகர்களாக இணைந்துகொள்ள வாய்ப்புண்டு.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுக்கு பொறுப்பான அமைச்சின் ஊடாக இலங்கை நுகர்வோர் அதிகார சபை, துறைமுக அதிகார சபை ஆகி



யவற்றின் தமது இனத்தவர்களுக்கு அதிக தொழில் நியமனங்களை வழங்கியுள்ளார்கள். குறுகிய காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் சட்டக்கல்லூரிக்கு அதிக அளவில் உள்வாங்கப்பட்டமை சந்தேகத்துக் குரியது. நீதிமன்ற சேவை மொழி பெயர்ப்பாளர்களாகவும் முஸ்லிம்கள் பலர் செயற்படுகிறார்கள். இவ்வாறான நிலையில் பொலிஸ் பரிசோதகர்களாக முஸ்லிம் சமூகத்தின் சட்டத்தரணிகளை அதிகம் இணைத்துக் கொள்ள முயற்சிப்பதன் உள்நோக்கம் அவதானத்துக்குரியது.

அரசமைப்பு குறித்து போதிய தெளிவில்லாமல் நீதி அமைச்சர் செயற்படுகிறார். நீதி அமைச்சரால் முன்னெடுக்கப்பட்டுள்ள அரசமைப்புக்கு முரணான மற்றும் மக்களுக்கு துரோகமிழைக்கும் செயற்பாடுகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் ஒருவராக கோரிக்கை விடுக்கிறோம், என்றுள்ளது. (ஒ.இ)

# 2 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கல்!

கொழும்பு. ஜன.24

இலங்கையில் சேவைகளை முன்னெடுக்க அரசாங்கம் மேலும் இரண்டு விமான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. டெய்லி எப்.ரி. வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தற்போதுள்ள சர்வதேச விமான சேவைகளில் சேர எத்தியோப்பியன் எயார்லைன்ஸ் மற்றும் மாலைதீவு எயார்லைன்ஸுக்கு இலங்கை சிவில் ஏவியேஷன் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. இரண்டு புதிய விமான நிறுவனங்களின் ஒப்புதல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையை சுமார் 40 ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி5-இ)

# 10 பொருள்களுக்கு விலை நிர்ணயம்!

கொழும்பு. ஜன. 24

நேரடி இறக்குமதியாளர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் 10 அத்தியாவசிய பொருள்களுக்கு ஒரு நிலையான விலையை விதிக்க உடன்பட்டுள்ளனர் என்றும், அடுத்த மாதம் முதல் இது நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் ஏற்றுமதியாளர்களுக்கும், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட உயர்தர பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் மற்றும் நியாயமான விலையில் பொருள்களை வழங்குவதும் அரசின் நோக்கமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரி5-இ)


# ஓராண்டு நினைவலைகள்



மடி மலர்ந்தாள்
10.09.2000

மண் சரிந்தாள்
05.02.2020



## ஜெயபாலசுந்தரம் சிந்துஜா (சிந்து)

திதி: 24.01.2021

புன்னகை பூ ஒன்று பூக்காமல்
உதிர்ந்தது ஏனம்மா?
சில்லறை சிதறும் சிரிப்பழகி
சிந்துக்குட்டி!
உன் சிரிப்பு மறைத்து மாண்டு
போனாய் ஏனம்மா?
சிந்து இங்க வாம்மா என
கூப்பிட்ட அப்பா அம்மா
ஏனம்மா கைவிட்டாய்
தனிமரமாய் ஆனாள் உன்
உடன் பிறப்புகள் அண்ணா
தம்பி கதறி துடித்திட
கற்றுத் தந்தவள் சிந்து
பாசவலையை வீசியவளும் நீ

இனிய வாழ்வை எமக்களித்து
நீ எங்கயம்மா சென்றாய்
ஒளி வீசிய குடும்பத்தில்
அதில் நீ அற்றுப்போனது
ஏனம்மா சிந்துக்குட்டி
குடி மனையும் தவிக்குதம்மா
குதுகளிக்க சிந்து இல்லையே
நெஞ்சு வலியுடனும் நீங்காத
நினைவோடும் வாழ முடியவில்லை
சிந்துக்குட்டி
புள்ளி மானே கல்லறை
விட்டு எழுந்து வாம்மா
என் வாசலுக்கு அம்மா, அப்பா
புளுவாய் துடித்திட
பூவுலகை விட்டு போனதன்னே
கடவுள் எனக்களித்த ஒரே ஒரு
கண்மணியை கல்லறை வைத்து
விட நினைத்த கடவுள்
உன் ஆத்மா சாந்தியடையட்டும்
சிந்துக்குட்டி
உள் நினைத்து தினம்
தினம் சாகும் உன்
குடும்பம்

அப்பா ஜெயம்,
அம்மா ரஜனி,
அண்ணா மது (சுவிஸ்),
தம்பி சீனு.

அரசடி றோட், நல்லூர்.



# மரண அறிவித்தல்

தோற்றம்
27
12
1988



மறைவு
18
01
2021

## அமரர் மயூரப்பிரியன் தங்கேஸ்வரானந்தம்

யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டி கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் மயூரப்பிரியன் தங்கேஸ்வரானந்தம் அவர்கள் 18.01.2021 அன்று இங்கிலாந்து அயில்ஸ்ப ரியில் காலமானார்.

அன்னார் மார்க்கண்டு தங்கேஸ்வரானந்தம் (மானிப்பாய்), சாவித்திரி அவர்களின் அன்புப் புதல்வனும், சுவந்தினி (இங்கிலாந்து) அவர்களின் அன்புக் கணவரும், துர்கா(இங்கிலாந்து) அவர்களின் பாசமிகு தந்தையும், துவாரகன் அவர்களின் (மானிப்பாய்) அன்பு சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை Angel Funeral Directors services, 267 Allenby road, Southall UB1 2HD இல் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இறுதிக்கிரியைகளுக்காக வைக்கப்பட்டு, Golders Green Crematorium, Hoop lane Golders green, London, NW11 7NL இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

Contact: 152,
Bicester Road,
Aylesbury
HP19 8FR
Shannon - 0044 7961 661961
Suki - 00447446 060451

கௌரி மஹால்,
மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

துவாரகன்-0094 765500092

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு

# உறுப்பினர்களை நியமிக்காமல் காலத்தை கடத்துகிறது அரசு

**கொழும்பு, ஜன.24**

**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இதுவரை உறுப்பினர்கள் நியமிக்கப்படாமை தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சேவையாளர்கள் சங்கம் பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.**

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆணைக்குழு உறுப்பினர்கள் ஐவரும் பதவி விலகல் கடிதங்களை வழங்கி ஒரு மாதத்துக்கும் மேலாகின்றது. அவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கே உண்டு.

ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி விலகி ஒரு மாத காலத்துக்குள் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதுவரை இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காததன் காரணமாகஏற்கனவேதிரவ இயற்கை எரிவாயுவுக்காக வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து விலை மனுக்கோரல் ஊடாக மின்சாரத்தை குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கும் திட்டம் தாமதமாகின்றது.

அனுமதிக்கப்பட்ட மின்சார விலையை மீளப்பரிசீலனை செய்தல், தொகை மின்சார விநியோக உரிமையாளர்களுக்கான விலை தீர்மானிப்பு மற்றும் பொதுமக்களுக்கான மின்சார கட்டணங்கள் தொடர்பான ஆராய்வு போன்ற பல விடயங்கள் தாமதமாகின்றன, எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

# போதைப்பொருள் கடத்தல் மனுக்கள் விசாரணைக்கு

கொழும்பு, ஜன.24

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனுக்களை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்த மனுக்களை ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-இ)














## பிலிப்பைன்ஸ் – இலங்கை நாடுகளிடையே இணக்கம்

கொழும்பு, ஜன.24

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய உத்திகள் தொடர்பில் கவனம் செலுத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அமைச்சர் தியோடோரோ எல். லோக்சினுக்கும் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலொன்றின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (வ-இ)

## தனிமைப்படுத்தலில் 847 பேர்

சாவகச்சேரி.ஜன.24

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் தென்மராட்சி பிரதேசத்தில் 847 பேர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுள்ள பிரதேசங்களிலிருந்து வருகை தந்தவர்கள் ,கொரோனாத் தொற்றாளர்கள், கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 267 பேரும், நவம்பர் மாதம் 240 பேரும், டிசெம்பர் மாதம் 260 பேரும், ஜனவரி 13 ஆம் திகதி வரை 80 பேரும் தனிமைப்படுத்தப்பட்டனர். (சு-9)

## நொதேர்ன் பவர் நிறுவனம் சுன்னாகத்தில் இயங்கக் கூடாது

*வலி. தெற்கு சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஜன.24

நொதேர்ன் பவர் நிறுவனத்தை இயங்க விடக்கூடாது என வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலிகாமம் தெற்கு, பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுன்னாகம் மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியில், மீளவும் இயங்க இருக்கும் நொதேர்ன் பவர் நிறுவனத்தை இயங்க விடக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி சார்பான உறுப்பினர் பாலசிங்கம் சுரேஸ்குமாரால் சபைக்கு கொண்டு வரப்பட்ட பிரேரணையே தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை முத்துலிங்கம் கயேந்திரா முன்மொழிய, இரத்தினசிங்கம் அரிகரன் வழிமொழிந்தார்.

கடந்த காலத்தில் இந்த நொதேர்ன் பவர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மின் உற்பத்தியின்போது கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்தமையால் நிறுவனம் பூட்டப்பட்டதுடன், அது தொடர்பன வழக்கு உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்று, பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (ப)

# தமிழில் தேசிய கீதத்தை இசைத்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துக

## ஜனாதிபதி, பிரதமரிடம் கோரிக்கை

**கொழும்பு, ஜன. 24**

**தமிழில் தேசிய கீதத்தை இந்த முறையேனும் சுதந்திர தினத்தன்று இசைத்து இன நல்லிணக்கத்துக்கான நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு, புதிய ஜனநாயக முன்னணி கடிதம் அனுப்பி வைத்துள்ளது.**

இது குறித்து அந்தக் கட்சியின் உப தலைவரும் ஊடகப் பேச்சாளருமான சமன் குமார் தெரிவிக்கையில்,

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வும் அதற்கான ஏற்பாடுகளும் எந்தவொரு இன மக்களையும் காயப்படுத்தி விடக்கூடாது என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டு பிரஜைகளுக்கான எல்லா உரிமையும் உள்ளது. எனவே இந்த மக்களை தொடர்ந்தும் அந்நியப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாது தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் அரசாங்கத்தை இந்த விடயத்தில் வலியுறுத்த வேண்டும். இந்தக் கோரிக்கையானது தமிழ் பேசும் சமூகத்தின் அனைவரது கோரிக்கையாக இருக்க வேண்டும்.

இதேபோன்று தமிழ் சமூகத்திலும் ஒரு வேண்டுகோளை விடுக்கிறோம். பெப்ரவரி 4 ஆம் திகதி உங்கள் பிரதேசங்களில் ஏற்பாடு செய்திருக்கும் சுதந்திர நிகழ்வுகளில் தமிழிலேயே தேசியகீதத்தை பாடி எமது உரிமையை பாதுகாக்குமாறு குறிப்பிட்டார். (ரி5-இ)



ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழுக்கையாறு குறிகாட்டுவான் பிரதான வீதியிலிருந்து வேலணை சுருவில் வரை உள்ள சுமார் 2.6 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சிற்பனை வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. (ப)

## வீடு உடைத்து நகை திருட்டு

*வவுனியாவில் சம்பவம்*

வவுனியா, ஜன.24

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்த நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பூட்டிவிட்டு கடந்த வெள்ளிக்கிழமை வெளியூருக்குச் சென்ற வீட்டின் உரிமையாளர்கள் மறுநாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்ததுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நான்கரைப் பவுண் நகை என்பன திருடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-110)

## வவுனியா மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளர்

வவுனியா, ஜன. 24

மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகப் பதவி வகித்த ஜெ.ஜெனிஸ்ரன் வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றி வந்த தர்சன பிரவீண குருநாகல மாவட்டத்துக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து குறித்த இடத்துக்கே ஜெனிஸ்ரன் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர் மன்னார் மாவட்ட பதில் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-213)

## டெங்கால் 766 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜன. 24



இந்த மாதத்தின் 20 நாள்களில், 766 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 498 பேர், கொழும்பு மாவட்டத்தில் 62 பேர், கண்டி மாவட்டத்தில் 29 பேர் மற்றும் கொழும்பு நகரசபை பகுதியிலிருந்து 19 பேர் பதிவாகியுள்ளனர் எனத் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி5-இ)

# எக்னெலிகொட சங்சதய விரைவில் உதயமாகும்!

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டு 11 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு, இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய 'எக்னெலிகொட சங்சதய' என்ற இணையப்பக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காணாமலாக்கப்பட்டார். அவர் காணாமலாக்கப்பட்டு நாளை மறுதினத்துடன் 11 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. அதை முன்னிட்டு பிரகீத் எக்னெலிகொட தொடர்பான விபரங்கள், அவரால் எழுதப்பட்ட கட்டுரைகள், அவரால் வரையப்பட்ட கார்ட்டூன்கள் மற்றும் இலங்கையில் காணாமலாக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் கதைகளை சேகரித்து இணையப்பக்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. 'எக்னெலிகொட சங்சதய' என்ற அந்த இணையப்பக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மாலை 4 -6 மணிவரை என்.எம்.பெரேரா கேட்போர் கூடத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோரின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது என்று பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார். தற்போது நிலவும் சுகாதாரப்பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அங்குரார்ப்பண நிகழ்வை தனது பேஸ்புக் பக்கத்தின் ஊடாக நேரடி ஒளிபரப்புச்செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண் துடைப்பும் விசாரணைக்குழுவும்

இம்முறை ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான பேரவை இலங்கை தொடர்பான விவகாரத்தில் ஒரு இறுக்கமானதும், தீர்க்கமானது மான சில முடிவுகளை எடுக்க வேண்டிய சூழல் உருவாகியுள் ளது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் ஒரு கருத்து நிலையும் தோன்றிக் கொண்டிருக்கிறது

முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பல்வேறு தரப்புக ளிடம் இருந்து வரும் கோரிக்கைகளும் அது தொடர்பான அழுத்தங்களும் இந்த மாதிரியான கருதுகோள் ஏற்படக் கார ணமாகியுள்ளது.

இப்படித் தமக்கு எதிரான ஒரு எதிர்மறையான புறச்சூழல் ஏற்படும் என அரசுதரப்பு ஒருபோதும் எதிர்பார்த்திருக்க முடி யாத அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. அந்த மாற்றத்தின் அகோரத்தைச் சமாளிக்க ராஜபக்சக்களின் அரசாங்கம், சில அதிரடி வியூகங்களை அவசர அவசரமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

இரு வாரங்களின் முன்னர் கூட, “இலங்கையில் போர்க்குற்றம் என்று எதுவுமே நடக்கவில்லை .தமிழர் தரப்பின் குற்றச்சாட் டுக்களை சர்வதேசம் தூக்கி எறிய வேண்டும். சர்வதேச நாடுகள் எதுவுமே எங்கள் நாட்டின் இறைமை தொடர்பான விடயங்க ளில் தலையீடு செய்யவோ அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ அனுமதிக்க மாட்டோம்.” என்றெல்லாம் வீராவேசமாகப் பேசியும் அறிக்கைகளை விட்டும் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அனைவரும் திடீரென்று பெட்டிப் பாம்பாக மாறி, அடக்கி வாசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

“கோத்தாபய அரசாங்கத்தின் நகர்வுகளும், செயற்பாடுக ளும்,மனித உரிமை மீறல்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நீதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளை இல்லா மல் செய்துள்ளன”என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளது. இந்த அறிவித்தலானது சர் வதேச மனித உரிமை ஆர்வலர்களையும் அமைப்புக்களையும் தீவிரமாக இலங்கை நிலைவரம் குறித்துச் சிந்திக்கவைத்துள்ளது.

அத்தோடு, இராணுவமயமாகும் இலங்கையால் மனித உரி மைகளுக்கு ஜனநாயகத்துக்கும் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் குறித்து, உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்ட அமையம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையும் முக்கியம் பெறுகின்றது.

#ஐ.நா மனித உரிமைகள் அமைய ஆணையாளர் மிச்செல் பச்செட் அம்மையாரால் 46ஆவது கூட்டத்தொடரில் சமர்ப் பிக்கப்படும் மிகவும் காட்டமான அறிக்கை,

★இலங்கை குறித்து ஆராய்வதற்கு சர்வதேசப் பொறிமுறை யொன்று அவசியம் தேவையெனவும் இதனை ஐ.நா மனித உரிமைப் பேரவை இம்முறை உருவாக்க வேண்டும் எனவும் வற்புறுத்தும் சர்வதேச மன்னிப்புசபையின் வலுவான கோரிக்கை,

★ இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வது அவசியம் என்று பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் கையொப்பமிட்டு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக் ரோனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள்,


★கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சி உருவாக்கப் பட்ட பின்னர் இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பல்வேறு வகையிலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வகையிலான மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்தும் வெளிவந்து கொண்டிருக்கும் ஊடகச் செய்திகள்,

என்பனவெல்லாம் ஆட்சியாளருக்கு உவப்பானவையல்ல. அவர் கள் நினைப்பதைப்போல அளப்பரிய அதிகார பலம் ஆட்சியைத் தக்க வைக்க உதவலாம். ஆனால் அதன் மூலம் சர்வதேசத்தைச் சமாளித்து விடலாம் என்று அவர்கள் எண்ணுவதென்பது அறி வீனத்தின் உச்சமே.

இப்போதும் கூட ஐ.நா மனித உரிமைப் பேரவையைச் சமாளிக்க அரசு எடுத்துள்ள முடிவுகள் அபத்தமானவை. போர்க்குற்றங்களே நடக்கவில்லை எனப் பிரகடனம் செய்தவர்கள், இப்போது நடக் காத போர்க்குற்றங்கள் குறித்து ஆராய மூவரடங்கிய ஆணைக் குழுவை அவசரமாக அமைத்ததன் உள்நோக்கம் தான் என்ன? ஐ.நா மனித உரிமைப் பேரவையை சமாளித்துக் காலத்தை கடத்தும் தந்திரோபாயமே இதுவென்று கூறவேண்டும். “அவ தந்திரம் தனக்கு அந்தரம்” என்ற தொல்மொழியை ஆட்சி பீடத் தவர் புரிந்து கொள்வது அவசியமாகும்.

இது போன்ற சமாளிப்பு நடவடிக்கைகளால் ஒருபோதும் எமது பிரச்சினைக்கு நீதியான, நியாயமான, நிலையான தீர்வையும் எவரும் எட்டி விட முடியாது என்பதே வரலாறு கற்றுத் தந் துள்ள அரசியல் பாடம் .

## இன்றைய கருத்தோவியம்



# ஆட்சிக்கு வந்த பின்னர் தேசப்பற்று மறக்கிறது

## விஜயதாஸ ராஜபக்ச கண்டனம்

கொழும்பு, ஜன.24

**எதிர்க்கட்சியில் இருக்கும்போது தேசப்பற்றுள்ளவர்களாக செயற்படும் அரசியல்வாதிகள் ஆளும் கட்சிக்கு வந்த பிறகு தேசப்பற்றை மறந்து விடுகிறார்கள். அம்பாந்தோட்டை துறை முகம் சீனாவுக்கு வழங்கியதால் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவேண்டும் என்ற கட்டாயம் ஏதும் கிடையாது. இந்த விடயத்தில் அரசாங்கம் சுயா தீனமாக செயற்படலாம்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரி வித்துள்ளதாவது
கடந்த அரசாங்கம் அம்பாந் தோட்டை துறை முகத்தை சீன நிறுவனத் துக்கு வழங்கும் போது அரசியல் மற்றும் சமூ கமட்டத்தில் பல எதிர்ப்புக்கள் காணப்பட்டன. அப்போது ஆளும் தரப்பில் இருந்த தற்போதைய எதிர்க்கட்சியி னர் தற்போது வெளிப்படுத் தும் தேசிய பற்றை வெளிப் படுத்தவில்லை. அரசாங்கம் எடுத்த தீர்மா னத்தை செயற் படுத்தவே ஆதரவு வழங்கி னார்கள்.
அம்பாந்தோட்டைத் துறை முகத்தை சீனாவுக்கு வழங் கினால் எதிர்காலத்தில் ஏற்ப டும் விளைவுகளை பகிரங்கப் படுத்தினேன். நல்லாட்சி அரசாங்கத்தில் முரண்பட்டுக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணியாக அமைந்தது. தேசிய வளங்கள் தொடர்பான எதிர்க்கட்சியினரின் நிலைப் பாடு ஆளும் கட்சிக்கு வந்த பிறகு மறக்கப்படுகிறது.
அம்பாந்தோட்டை துறைமு கம் சீனாவுக்கு வழங்கியுள்ள தால் கொழும்பு துறை முகத்



தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் காணப் படுகிறது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விடயத்தில் அரசாங் கம் சுயாதீனமாக தீர்மானம் எடுக்கலாம். பின்வாங்குவ தற்கான எவ்வித நிபந்தனை களும் இந்த விடயத்தில் கிடையாது - என்றார்.(எ-இ)

# அறிகுறி தெரியாது பரவும் கொரோனா

கொழும்பு, ஜன. 24
இலங்கையில் எந்தவொரு அறிகுறியும் தென்ப டாத மற்றும் கொரோனாத் தொற்று நபர்களுடன் எந்த உறவையும் கொண்டிராத பலருக்கு கொரோ னாத் தொற்று இருப்பது இனங்காணப்பட்டுள் ளது. சுகாதார அமைச்சகத்தால் இந்த உண் மையை மறுக்க முடியவில்லை என சுகாதார சேவைகள் துணை இயக்குநர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
தற்போது, நாட்டில் கொவிட்19 எண்ணிக்கை அதி கரித்து வருகிறது. கட்டுப்பாட்டு விதிமுறைகளை தளர்த்துவதே இதற்குக் காரணம் என்றும் கூற லாம் -என்றார். (ரி5-இ)

# ரூபாவின் பெறுமதி சரிவு!

கொழும்பு, ஜன. 24
அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினம் மேலும் வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க டொலரின் விற்பனை விலை 199.18 ரூபாவாகவும், கொள்வ னவு விலை 194.31 ரூபாவாகவும் இருந்தது. முந்தைய இரண்டு சந்தர்ப்பங்களில், டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 199 ரூபாவாக சரிந்தது.
இதேவேளை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 198.26 ரூபாவாக பதி வாகியமை குறிப்பிடத்தக்கது. (ரி5-இ)

## வேலை வாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு Computer billing செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை.

தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

ஆண்கள் மட்டும்

வயதெல்லை : 20-28

தகைமை : அடிப்படை கணினி அறிவு அவசியம்

**தொடர்பு - 076 0744 784**

## வேலை வாய்ப்பு

இலங்கையின் தலைசிறந்த நிறுவனத்தின் கிளையானது கோண்டாவிலில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்காக உடனடி வேலை வாய்ப்பினை நிறுவனம் கோரியுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் சித்தி அடிப்படை தகைமையாக கருதப்படும்.

**077 337 3157**

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் முன்னணி நிறுவனமொன்றில் விற்பனை முகாமையாளர்கள் மற்றும் விற்பனை பிரதிநிதிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன. சம்பளம் பேசி தீர்மானித்துக் கொள்ள முடியும். நேர்முகத் தேர்வுகளுக்கு பின்வரும் முகவரிக்கு சமூகமளிக்கவும்.



தொடர்புகளுக்கு:

**077 1999 176, 077 293 6655, 021 493 0098**

இரணைமடு சந்தி, கிளிநொச்சி.


## 31ம் நாள் நினைவலைகள்



திருமதி

**செல்லாச்சி பாலசிங்கம்**

எமது கல்லூரியில் 18 ஆண்டுகள் ஆரம்ப கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியை காலமான செய்தி அறிந்து அவரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்
மகளிர் கல்லூரி- சாவகச்சேரி.


## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA**

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.


Hotline: 0777-761 346

**Sponsor Letters** Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 17 . 05 . 1950

உதிர்வு 03 . 02 . 2012

**கந்தப்பு செல்வராசா**

திதி. வளர்பிறை ஏகாதசி
(24.01.2021)

ஆறாத்துயரில் ஒன்பதாண்டுகள் கழிந்தனவே
மீளாத்துயில் கொண்டு எமை ஏன் நீர் பிரிந்தீர்,
நிதம் உனைத் தேடியலைகின்றோம் .......
நிழலும் காணாது நிர்க்கதியானோமே
ஆண்டவன் சந்நிதியில் உங்கள்
ஆத்மா சாந்திபெற வேண்டுதலைத் தவிர
வேறேதும் முடியவில்லை அப்பா.

இடைக்குறிச்சி.
வரணி

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்,


## AMT Group நிறுவனத்துக்கு வேலைக்கு ஆட்கள் தேவை

- A.M.T Marketing & Distributors நிறுவனத்துக்கு கணக்காளர் (Quick Book- தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 25-50).
- A.M.T (Head Office) Colombo (Wolfendhal Street) நிறுவனத் துக்கு Mechanic, Painter Tinker ஆகியோரும் தேவைப் படுகின்றனர்.

நேர்முகத் தேர்வு இல.341, கண்டி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது கிளை நிறுவனத்தில் இடம்பெறும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- T.P :-0212211211 E-Mail :- jaffna@lionagents.lk

Address : A.M.T Marketing & Distributors
No.341, Kandy Road, Ariyalai, Jaffna.


## மரண அறிவித்தல்

உதிப்பு 24 . 03 . 1947



உதிர்வு 20 . 01 . 2021

**வல்லிபுரம் நாகலிங்கம்**

(முன்னாள் ஊழியர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் - முன்னாள் உறுப்பினர் - சாவகச்சேரி நகரசபை ).

மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது சுவிஸில் வசித்தவருமான வல்லிபுரம் நாகலிங்கம் 20.01.2021 சுவிஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் (சுவிஸ் ) அன்புக் க[illegible], இராசம்மா.கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோ[illegible]ரும், ரேணுகா, சுவிஸில் வசிப்பவர்களான விஜயன், சுரேகா, அனுர[illegible] குலேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேந்திரம், [illegible]பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராசம்மா. - கமலாதேவி.
(சகோதரிகள் )

மீசாலை. கிழக்கு.
மீசாலை.

## நெஞ்சுவலியால் வர்த்தகர் சாவு

சாவ., ஜன. 24

நெஞ்சுவலி ஏற்பட்ட வர்த்தகர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கச்சாயில் நேற்று இடம்பெற்றது.

கச்சாய் பாடசாலைக்கு அருகில் கடை வைத்துள்ள ரூஞ்சன் என்று அழைக்கப்படும் வினாசித்தம்பி புஷ்பநேசன் (வயது 54) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று 3 மணியளவில் நெஞ்சு வலிப்பதாக கூறியதையடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் பரிசோதனை செய்த மருத்துவர் ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டார் என்று கூறியதாகவும் உறவினர்கள் குறிப்பிட்டனர்.

(ஓ.9)


## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Ice Cream தொழில்சாலைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

பொதி செய்பவர், மேற்பார்வையாளர், காசாளர், துப்பரவு பணியாளர்.

**077 386 6250**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய தோட்டம் ஒன்று பராமரிப்பதற்கு வேலையாள் தேவை. உணவு சமைத்து சாப்பிடக்கூடிய வசதியும், தங்குமிடவசதியும் தரப்படும்

குறிப்பு: இரவு, பகல் வேலை என்பதால் தங்கி நின்று வேலைபுரிபவர்.

**076 546 3553**

## வெள்ளவத்தை

தொடர் மாடி வீடு விற்பனைக்கு

இரண்டு அறை, சமையலறை, Hall, இரண்டு குளியலறை COC, Deed, உடைய தொடர் மாடி வீடு விற்பனைக்கு முற்றிலும், குளிரூட்டப்பட்டது (சமையலறை தவிர்த்து) தனிப்பட ஒதுக்கப்பட முற்றிலும் அடைக்கப்பட்ட வாகன தரிப்பிடம்.

விலை 20.5 மில்லியன் வங்கி கடன் எடுக்க முடியும் உடன் காசு விஷேட விலைக்கழிவு

தொடர்பு: 0772 647 426

## வீடு காணி விற்பனைக்கு

வெள்ளவத்தை 37 லேனில் 12 வருடமான 3 அறை 2 குளியலறை நல்ல நிலையிலுள்ள 1200 SQ தொடர்மாடி வீடு 17.5 மில்லியன், வங்கிக் கடன் செல்ல முடியாது. ஆறு மாதங்களில் COC, Deed நிச்சயம் கிடைக்கும்.

**S.P.KARAN - 077 343 4005**

(தரகர் வேண்டாம்)

## திருமண இணைப்புச் சேவை

அரசாங்க உத்தியோகம் பின்வரும் மணமகள் களுக்கும் (1990,1992,1993,1989 ஆசிரியை) 1990, 1993 (டொக்டர்) 1989,1992 (பொறியியலாளர் ) 1995 கிறிஸ்தவ உத்தியோக மணமகன் தேவை. 1990, 1980, 1982,1984,1992 (ஆசிரியர்) 1992,1990, 1986 (டொக்டர்) 1989,1985,1984 (D.O) மணமகன்மார்களுக்கும் 1982, 1988, 1990, 1985, 1983 (லண்டன், பிரான்ஸ், அமெரிக்க) பொருத்தமான மணமகள் தேவை.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா 0740352940,

**0740352940 , Viber 0779464287.**

**வீடு வாடகைக்கு வழங்கப்படும்**

இலக்கம் 106 பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு: ரமேஸ்-077 925 23 70

**தனி மற்றும் குழு வகுப்புகள்**

வணிகக் கல்வியும் கணக்கீடும் (O/L) தரம் - 10 & தரம் 11

வணிகக்கல்வி, பொருளியல் (உயர்தரம் A/L)

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல

தனி மற்றும் குழு வகுப்புக்கள்

நியாயமான கட்டணத்தல்

077 372 1260

**கார் விற்பனைக்கு**

Toyota Allion 260 2007, Wine Red, Np Ku xxxx 2012 ம் ஆண்டு பதிவுடைய கார் விற்பனைக்கு

தொடர்பு:

076 0980 715, 077 3000 299

**அனெக்ஸ் வாடகைக்கு**

யாழ்ப்பாணம் அத்தியடி அம்பலவாணர் வீதியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 959 9527

**காணி உடன் தேவை**

A9 வீதியில் கிளிநொச்சி - பரந்தன் இடைப்பட்ட பகுதியில் உறுதியுடன் கூடிய 1/2 ஏக்கருக்கு மேற்பட்ட அளவில் காணி உடன் தேவை விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

024 2224960 / 0763881819


## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 01 . 1935



மறைவு 22 . 01 . 2021

### திருமதி சின்னக்கண்ணு நாகம்மா

கொழும்பை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உதயநகர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னக்கண்ணு நாகம்மா நேற்று முன்தினம் (22.01.2021) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்கண்ணு அவர்களின் அன்பு மனைவியும், விஜயலட்சுமி (பளை), செல்வமணி, முத்துலட்சுமி (யாழ்), பஞ்சவர்ணம் (முருகண்டி), இராஜேஸ்வரி (உதயநகர்), காலஞ்சென்றவர்களான சின்னக்கண்ணு, இராமச்சந்திரன், மனோன்மணி மற்றும் இரவிச்சந்திரன் (பொருளாளர்-உதயநகர் மேற்கு, கிராம அபிவிருத்திச் சங்கம், உரிமையாளர்- ஜெயந்தி யாட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலு, செல்வராஜா, தங்கராஜா, நடராஜா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், இவாஞ்சலின், றவின்சன், வெஸ்லின், பிளே, விக்னேஸ்வரி, விஜயகுமாரி, சதானந்தன், ஜெயந்தன் (குட்டி), தர்ஷினி, செல்வக்குமார், விக்னேஸ்வரன், செல்வராணி, கலைச்செல்வி, தேவகுமார், கிஷாந்தன், ஜீவகரன், டிமலன், விதுசன், நிறோசி, காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், சாந்த குமாரி, யதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உதயநகர் மேற்கு, கிறிநொச்சி.
077 676 3409

தகவல்: குட்டி (பேரன்)
(Sai Real Estate)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 03 . 1942



இறப்பு 20 . 01 . 2021

### பொன்னுத்துரை கிருபாகரன்

(ஓய்வுபெற்ற நிவாரண உத்தியோகத்தர்-கொழும்பு மாநகர சபை)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னுத்துரை கிருபாகரன் அவர்கள் 20.01.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசபிள்ளை-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், தேம்பாமலர் (முன்னாள் ஆசிரியர்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், துர்க்காதாஸ், சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரணிதரன் அவர்களின் அன்பு மாமனாரும், தவிஷ், வித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவபாக்கியம் (அமரர்), லிங்கேஸ்வரி, சிவநேஸ்வரி (அமரர்), நாமகள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா (அமரர்), சச்சிதானந்தம் (அமரர்), சத்தியவான் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2021 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1929



மறைவு 21 . 01 . 2021

### செல்லத்துரை பத்மநாதன்

(ஓய்வுபெற்ற P.W.D உத்தியோகத்தர்)

15/5. சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத் துரை பத்மநாதன் கடந்த 21.01.2021 கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்லையாவின் சகோதரரும், காலஞ்சென்ற தங்கச்சியம் மாவின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, விசாலாட்சிதேவி ஆகியோரின் அன்புக் கணவரும், அனுராதேவி, இந்திராதேவி, ரவீந்திரநாதன், ரகுநாதன், பிறேமநாதன், மிதிலாதேவி, உஷாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமச்சந்திரன், நித்தியானந்தன், சேதா, அனிஷா, சுகந்தி மாலன், ரவிகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனிபர் Drew, ஜெசிக்கா Jonathan, தருத்திக்கா Bryan நிரோஜன் மிதுனா, டிலக்சன், அசியந்தி, கணேஸ், சேயோன், அரவிந், சிவசங்கரி, அஞ்சலி, நிலா, ஈத்தன், டிலன், கிந்தியா, கிஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும், Elizabeth, Brookiya, Breeze, Ariya, Ammaya ஆகியோரின் பூட்டனும், தனலட்சுமி, சந்திரிகா, மனோகரன், ரதிதேவி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.01.2021) திங்கட்கிழமை Chapel Ridge, Funeral Home & Cremation Centre, 8911 Wood bine Ave, Markham, ON LOH/GO, Canada இல் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு Higbland Hills Crematorium, 12492 Wood bine Avenue, Gomley,Ontario, LOHIGO, Canadh வில் 26.01.2021 அன்று தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/6, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

தகவல்:
இ.ஜெகதீசன் குடும்பத்தினர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரவி | (மகன்) | 416 209 8480 | | | |
| மிதிலா | (மகள்) | 416 804 6564 | உஷா | (பிரித்தானியா) | 447 581 167410 |
| அனுரா | (கனடா) | 647 929 0719 | ரகு | (USA) | 916 540 9931 |
| இந்திரா | (கனடா) | 647 236 2622 | பிரேம் | (கனடா) | 905 407 6611 |

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1932



மறைவு 21 . 01 . 2021

### திருமதி லூர்த்தம்மா மரியாம்பிள்ளை

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்தம்மா மரியாம்பிள்ளை கடந்த 21.01.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், அன்ரன் (கனடா), வனஜா, கிரிஜா, றூபா, Sr. சுதர்ஷினி, ஸ்ரெலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபத்திரா (கனடா), ஜெயசீலன், தவநாதன், ஜேண்சன், பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற முடியப்பு மற்றும் கத்தரீன், காலஞ்சென்ற ஆரோக்கியநாதன் மற்றும் Sr. தேவநேசம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், மொணிக்கா, கல்லாண ராமையர், குணமணி ஆகியோரின் மைத்துனியும், டேவிட்சன், சாம்சன், றொபின்சன், ஆன்றோஸ், சுபா, ஷீபா, தீபா, நிறோ ஆகியோரின் அன்பு பூ மாமியும், அகிலன், சுஜீவன், நிஷாந்தி, நிஷாந்தன், சாங்கர், பிரசாந், றொணி, டிலான், ஏறல், றொஷ்னி, ஏரன், அலெக்ஸ், அல்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுடிக்சன், ஜான்சன் ஆகியோரின் பெரிய தாயும், ஐசயா, ஜெய்லன், ஜெறுசிகா, சாஷினி, செல்வா, யோசுவா, ஆதிரா, ஆணியா, எய்டன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இறுதி வழிபாட்டின் பின் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் திருப்பலியின் பின்பு நவாலி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென் பீற்றர்ஸ் றோட்,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

அவுஸ்திரேலியா வயது 35
கிறிஸ்தவம் (NRC)
எவ்வித தீய பழக்கவழக்கங்கள் அற்ற
நற்குணமுள்ள மணமகனுக்கு
நற்குணமுள்ள மணமகள் தேவை.
அண்மையில் எடுத்த புகைப்படம்
தொலைபேசி இலக்கத்துடன்
கீழ்காணும் Email Address
தொடர்புகொள்ளவும்
kane85joshua@yahoo.com

## மணமகள் தேவை

புனர்பூசம் 3 ஆம் கால்.
1983 இல் பிறந்தவர் தனியார்
துறையில் வேலைபார்க்கும்
உயர்குல மகனுக்கு மணமகள்
தேவை. மணமகள் அரச
உத்தியோகம் பார்ப்பவராக
இருக்கவேண்டும் தொடர்புகளுக்கு
077 790 5438 மற்றும்
021 222 7246
உடன் தொடர்புகொள்ளவும்.

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு
1. Accountant (HND or Diploma in Accounting)
2. Farm Manager or Farm Maintainance
CV ஐ பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
தொடர்பு:
58, நல்லூர், Cross Road. யாழ்ப்பாணம்.
021 222 6806

## வேலையாட்கள் தேவை

சமையல் வேலை தெரிந்த பெண்கள், Fresh Juice, Ice cream, குளிர்பாணங்கள் தயாரிக்க தெரிந்த ஆண்கள் தொடர்பு கொள்ளவும்
RICHO Coffee & Kitchen 077 623 8129
282 B, ஆஸ்பத்திரி வீதி,
சத்திரசந்தி, யாழ்ப்பாணம். 021 222 2054

## பணிப்பெண்கள் தேவை

3 வயது, 2 வயது, 1½ வயது ஆண்
பிள்ளைகளை பராமரிக்க பணிப்
பெண்கள் தேவை. உணவு தங்குமிடம்
மற்றும் இதர சலுகைகள் வழங்கப்படும்.
077 760 6256

## வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலை வீதியில்
1ஆம் மாடிக் கட்டடம்
வாடகைக் உண்டு. கடைகளுக்கும்
அலுவலகங்களுக்கும் ஏற்றது.
077 828 1956

## வேலை வாய்ப்பு

**மன்னாரில் ஆரம்பிக்கப்படவுள்ள**
**தனியார் கம்பனிக்கு** தகுதியானவர்களிடமிருந்து
**முகாமையாளர் பதவிக்கு**
விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமை:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியலை பிரதான பாடமாக கொண்ட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்:**
தனியார் கம்பனி / நிறுவனத்தில் கணக்கீடு தொடர்பில் அனுபவம் இருந்தல் வேண்டும்.

**சம்பளம் :**
ரூ. 45,000 - 60,000

**தங்குமிடம்:**
தங்குமிட வசதி கம்பனியில் இலவசமாக வழங்கப்படும்.

**அல்பாலீடென் ஜீ எம் (Pvt) Ltd**
**எழுத்தூர் மன்னார்.**
**T.P: 077 394 4653**
E-mail: alphaleaden@gmail.com

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை,
பிரப்பங்குளம் றோட்டில் 4 அறைகள்
கொண்ட பெரிய வீடு, நல்ல
தண்ணீர்க்கிணறு, 20 தென்னை மரங்கள்
மற்றும் மா, பலா மரங்களுடன் கூடிய
மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு
011 252 0158, 077 645 8542

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான
மணமக்கள் ஜாதகங்கள்
உடன் தரப்படும்.
**இல.5, ஐந்தாம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
021 222 9306, 077 138 7596

## மணமகள் தேவை

**யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 அனுஷம் கனடா பிரஜா உரிமை உள்ள இன்ஜினியர் உயரம் 5' 7". 7இல் செவ்வாயுள்ள அழகிய நற்குணமுள்ள மணமகனுக்கு உயர் கல்வித் தகைமையுடைய நற்குணமுடைய அழகிய மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். உள்நாடு விரும்பத்தக்கது.**
நேரடித் தொடர்புகளுக்கு:
076 400 7724, 077 318 0918

## வயற்காணி தேவை


முரசுமோட்டை, கிளிநொச்சி
பகுதிகளில் இருபோகம்
செய்யக்கூடிய வயற்காணி
தேவை. உறுதிக்காணியாக
இருக்கவேண்டும்.
உரிமையாளர்கள் நேரடியாக
தொடர்புகொள்ளவும்.
076 863 7930

## வீடு வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை, புலோலி, 1ம்
கட்டையில் புதிதாக திருத்தி அமைக்
கப்பட்ட 4 அறை கொண்ட விசாலமான
வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தனியார் அலுவலகம் அலவலர்கள்
தங்குமிடம் (Quaters) உகந்தது.
முற்பணம், வாடகை பேசி தீர்க்கப்படும்.
*தரகர் தேவையில்லை*
077 796 8805

## மணமகள் தேவை

யாழ். ஆதி சைவக் குருமார் 1985 இல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த மாநிற 5 அடி 8 அங் உயரமான உயர்தரம் படித்த இலங்கைப் பிரஜையான பிரான்சில் வதித்து வேலைசெய்யும் மண மகனுக்கு சைவபோசன அல்லது சைவ போசனமாக வாழக்கூடிய உயர்கல்வி கற்பதற்கான தகுதியுள்ள 1993 - 1986 இற்கிடையில் பிறந்த பிரான்சில் சென்று வாழக்கூடிய அழகிய மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.
077 959 3393



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த
நகைகள் அறுதியாக
போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில்
அடகு வைத்த நகைகளுக்கு
**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**
**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**
உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0777 947120** இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாளைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |

## வணக்கம் Doctor "வணக்கம் Doctor மருத்துவ சேவை

- தொலைபேசி மூலம் அனைத்து மருத்துவ ஆலோசனைகள் போசனை, உடற்பருமன் பற்றிய ஆலோசனை, உளவள ஆலோசனைகள் மற்றும் பாலியல் பிரச்சினைக்ள் சம்பந்தமாண ஆலேசானைகள்
- இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட MBBS மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகள்
- மிகக்குறைந்த கட்டணங்கள்
- மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள் 074 133 6678
- வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு மேலதிக வசதிகளுடன் கூடிய சேவை. +9474 133 6678

**Precise Medicine International Health care Solutions (Pvt) Ltd**
**Hotline - 077 727 7394**
No.59/1, Maruthady Road, Nallur, Jaffna.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நடராசா இரங்கநாதன்**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 04 . 1951 | 15 . 01 . 2011 |

குடும்ப குல விளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

29/21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி
இ.சாரதாதேவி

## Spoken English, சிங்களம் T.P: 077 725 4627

அடிப்படை அலகிலிருந்து எழுத,வாசிக்க பேச்சுப்பயிற்சியுடன் பூரண தமிழ் விளக்கத்துடன் மிகக் குறுகிய காலத்தில் தனியாக / சிறு குழுவாக கற்பிக்க புதிய வகுப்புகள் சுகாதார நடைமுறைக்கேற்ப ஆரம்பிக்கப்படுகிறது. ஆரம்பம்: 28.01.2021 5 p.m

Lect.By Skb - மனோகரன் - ஆசிரியர், அச்சுவேலி.

## நோயாளர் பராமரிப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கி வரும் யாழ் பொது அரசினர் நலன்புரிச் சங்கத்தின் நோயாளர் பராமரிப்பு சேவைக்காக நோயாளர் பராமரிப்பில் ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப் படுகின்றது.

**வயது :- 30 - 50**

**கல்வி தகமை :- தரம் - 8**

விண்ணப்படிவம் யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் பராமரிப்பு சேவை அலுவலகத்தில் 25.01.2021 முதல் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 08.02.2021**

தொடர்புக்கு :- 0761000046

தகவல் :- தலைவர்

யாழ் பொது அரசினர் நலன்புரிச் சங்கம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 22.01.1932 உதிர்வு 25.12.2020

கடந்த 25.12.2020 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லத்துரை கணேசரட்ணம்**

(இளைப்பாறிய பிரதம இலிகிதர்- நல்லூர் பிரதேச செயலகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆன்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

செருக்கப்புலம் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 23.02.1974 உதிர்வு 30.01.2015

அமரர்

**பாலசுப்பிரமணியம் தர்மசீலன்**

(பௌதீகவியல் ஆசான் யா/அருணோதயாக் கல்லூரி, B.S.C Dip in Edu)

ஆண்டுகள் ஆறாக உருண்டடினும்
ஆறிடுமோ எம் துயரம் - அவனியிலுள்ளவரை
அழியாது உம் நிறைவு
அன்னாரின் ஆத்மா, இறைபாதத்தில் அமைதி பெறுவதாக.

டச்சு வீதி,
அளவெட்டி மத்தி. குடும்பத்தினர்.

## உடல் எடை குறைய வேண்டுமா?

- ◎ எடை கூடுகிறதா?
- ◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- ◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு

வேலணை, வங்களாவடி சந்தியிலிருந்து சாட்டி றோட்டில், 1 km தூரத்தில் $14\frac{1}{2}$ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 302 4222**



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 ஆம் ஆண்டு சிம்மம், உத்தரம் முதலாம் பாதம் கனடா பிரஜா உரிமை உள்ள (இரட்டை பிரஜா உரிமை) விவாகரத்துப் பெற்ற தற்போது யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவர்க்கு மணமகள் தேவை.

**072 619 2526**

## ஆண் பராமரிப்பாளர் தேவை

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற வல்வை**

**முதியோர் இல்லத்திற்கு**

ஆண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
எமது இல்லத்தில் **புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்.**
**கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.**

தொடர்புகளுக்கு-

**0778106857, 0771542067**
**0212265551**

## பிரத்தியேக வகுப்பு

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்கள் தரம் 06- தரம் 11 வரை தமிழ் மொழிமூலம், ஆங்கில மொழிமூலம், தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

**தொடர்பு:077 618 4524**

## வேலைவாய்ப்பு

Pharmacy ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

**071 415 0995**

**245, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.**

## கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் பலாலி, K.K.S வீதியை, அண்டிய பகுதியில் சைவ உணவகம் நடத்துவதற்கு கடை வாடகைக்கு தேவை.

தொடர்பு: **076 5359 985**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி- 45ரூபாய்

தொடர்புகளுக்கு: **077 334 1281**

## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை

**AAA Gold Center**
**076 658 4346**

## வேலையாட்கள் தேவை

கொழும்பு கொட்டாஞ்சேனையில் வெல்டிங், Stanastin (வெள்ளி இரும்பு வேலை) அலுமினிய வேலைக்கு ஆட்கள் தேவை. (Contract) ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்பு: **077 8987 390, 077 999 6753**

## வீடு காணி விற்பனைக்கு

கல்கிசை Land side புத்தம் புதிய 2 அறை, 2 குளியலறை, 910 Sq (உறுதியுடன்) 18 மில்லியன் தொடர்மாடி விற்பனைக்கு.

(தரகர் வேண்டாம்)

**S.P.KARAN - 077 3434 005**

## மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு

பிரதான வீதி சங்கானை (வர்த்தக வங்கிக்கு முன்)

**1st மாடி**

**நீளம் 55' அகலம் 50' = 2250 சதுரஅடி**

**2nd மாடி**

**நீளம் 55'அகலம் 25' = 1125 சதுரஅடி**

கீழ்த்தளத்தில் களஞ்சிய அறை, வாகனத்தரிப்பிடம் மற்றும் இதர வசதிகள் உண்டு. அலுவலகங்கள், வைத்தியசாலை, Food City போன்றவற்றிற்கு பொருத்தமானது.

**TP No: 077 958 7081**

## புதிய பிரிவுகள் ஆரம்பம் 30,31-01 2021

# IELTS

Academic & General Training Individual Online Classes

100% Success

**Life Skill-UK Visa-A1, B1**

- *Learn IELTS from well experienced IELTS lecturer
- *30% Discount Available for January registration.
- *IELTS band 7.5 assured

**SAT,SUN 3 - 5 pm**

**IPS** யாழ்.பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

No-01, IELTS Education Mobile : 076 685 2529

# P.P.T நிறுவனத்தின் விசேட சலுகை



ups sky cargo solutions DHL

உள்நாட்டு / வெளிநாட்டு பார்சல் சேவை **UK 1000/-**

300க்கு மேற்பட்ட நாடுகளுக்கான **வெளிநாட்டு** பார்சல் சேவை நடைபெறுகிறது. நியந்தனைக்கு உட்பட்டது.

| A/C 1000/- | Non A/C 900/- |
| --- | --- |
| பருத்தித்துறை/நெல்லியடி யாழ்ப்பாணம்-கொழும்பு | பண்டத்தரிப்பு/சித்தங்கேணி சங்கானை/மானிப்பாய் யாழ்ப்பாணம்-கொழும்பு. |

| யாழ்ப்பாணம் | புறக்கோட்டை | வெள்ளவத்தை |
| --- | --- | --- |
| 0764408947 | 0764408954 | 0764408951 |
| 0775731318 | 0112320336 | 0775755175 |

# துயர் பகிர்தல்



வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி கமலாதேவி வேலாயுதபிள்ளை

லண்டனில் கடந்த (15.01.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நாமும் துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மைத்துனி**
**திருமதி யோகேஸ்வரி - இராசலிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

# மரண அறிவித்தல்

## இராஜேஸ்வரன் மனோரஞ்சிதம்



இராஜேஸ்வரனி மனோரஞ்சிதம் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற த.தாமோதரம் பிள்ளை நல்லம்மா ஆகியோரின் அன்பு இளைய மகளும், காலஞ்சென்ற வைரமுத்து சுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரன் (கிளி) அவர்களின் அன்பு மனைவியாரும், நிசாந்தன் (லண்டன்) பிரசன்னா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான திருமதி அன்ன பூரணம், திரு. கனகலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு இளைய சகோதரியாரும், வி.ராஜினி (சுவிஸ்) V.பாமதி (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சித்தியாரும், விஜயானந்தன் (இத்தாலி) விக்னேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுசா, வினோஜன் (இத்தாலி) இலக்கியா அஞ்சலி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் முற்பகல் 10மணிக்கு வீட்டில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.36, யாழ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 203 7754**

# மரண அறிவித்தல்



## திருமதி இராசமணி சிவசுப்பிரமணியம்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட இராசமணி சிவசுப்பிரமணியம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிர மணியம் அவர்களின் அன்பு மனைவியும், நமசகுமார் (கனடா), அமரர் ஸ்கந்தகுமார் (ஆசிரியர்) அகியோரின் பாசமிகு தாயாரும், சிவரஞ்சினி (கனடா), பேபிறோஜா (வட்டுக்கோட்டை) ஆகியோரிஜன் அன்பு மாமியாரும், அபிநாத், (கனடா), அபிநயா (கனடா), குகதர்சினி (சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கானை) எழிலரசி (கனடா), அனுறோஜினி (கனடா) ஆகியோரின் பாசத்துக்குரிய பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூளாய் வீதி (மாவடி)**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 660 4523**

# வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பான்சி, அழகு கலை நிலையத்திற்கு முகாமையாளர், அழகுகலை பயிற்சி பெற்றவர்கள், விற்பனையாளர் போன்ற வெற்றிடங்களுக்கு பணியாளர் தேவை.
**தொடர்புகளுக்கு: 077 2105 286, 077 366 0917**

# உடனடி வேலை வாய்ப்பு

1. முகாமையாளர், மேற்பார்வையாளர், விற்பனை உதவியாளர்
2. வயதெல்லை:-- ஆண் / பெண் 20 - 35
3. சம்பள விபரம் :- 15000/- 35000/- வரை
4. நேர்முகத் தேர்வு :- 25.01.2021 - 30.01.2021
   அலுவலக நேரம்
   9.00 - 15.00 வரை
5. இடம்: 175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
6. தொடர்புகள் :-
   **077 477 3481**

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராணி பாலேந்திரகுமார்



அராலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி தங்கராணி பாலேந்திரகுமார் நேற்று (23.01.2021) சனிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தவரட்ணத்தின் மகளும், திரு.திருமதி பாலசிங்கத்தின் மரு மகளும், பாலேந்திரகுமாரின் பாச மிகு மனைவியும் கிருசாந்தி, சந்திரசேகர், பிரசாந்தி, சாமினி, ஜெயந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளங்கோ, மரீனா, இரட்ணகுமார், மாதேவன், பிரதீபா ஆகியோரின் மாமியாரும், நித்தியானந்தன், ராஜினி அஸ்பரி, தயாளினி நவக்குமார், மோகன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதி ஆராதனை அன்னாரது வீட்டில் 24.01. 2021 மதியம் 2 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவஇல்லம், அராலி வடக்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்: பாலேந்திரகுமார்**
**(கணவர்)**

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

## வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனு தாக்கலும்

### வருடாந்த பொதுக்கூட்டம் - 2021 / 2022

**காலம் :- 2021.02.28 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி**
**இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி. பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்**
**தலைமை :- திரு.ஆ.சத்தியமூர்த்தி**
பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 2021.02.10 ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது மின்னஞ்சலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.
**தபால் முகவரி :- செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி,**
**கொக்குவில்.**
**மின்னஞ்சல் முகவரி :-** khcosajf@gmail.com

### 2021/2022 காலப்பகுதிக்கான நிர்வாகசபை தெரிவிற்கான வேட்புமனு தாக்கல் செய்தல்

சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.
2021/2022 ஆம் ஆண்டு நிர்வாக சபை தெரிவானது சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.2 இன் பிரகாரம் தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதால் சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.1 உள்ளவாறான பதவிகள் அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்புமனுவை பாடசாலை அலுவலகத்தில் 25.01.2021ம் திகதி திங்கட்கிழமை முதல் 07.02.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 10.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்ள முடிவதுடன் அவ் வேட்புமனு வினை எதிர்வரும் 07.02.2021 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் கையளித்தல் வேண்டும்.
தங்கள் வேட்புமனுவினை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல் கடிதத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
நிர்வாகசபை தெரிவிற்கான வாக்கெடுப்பு
**காலம் :- 2021.02.28 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- காலை 8 மணி முதல் காலை 10 மணி வரை**
**இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி**

**வி.தயாபரன்,**
**செயலாளர்.**
**077 – 6080926**

# சாவடைந்த கைதிக்கு கொரோனா

காலி, ஜன.24
காலி சிறைச்சாலையில் உயிரிழந்த கைதிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கைதி திடீர் சுகயீனம் காரணமாக கராபிட்டிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (வ-இ)

## இந்தியாவிலிருந்து...

கிராமத்துடனான கலந்துரையாடல் என்ற வேலைத்திட்டத்தின் ஏழாவது கட்டம் களுத்துறை மாவட்டத்தின் வல்லல்லாவிதாவில் உள்ள யத்தபத கிராமத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

'இந்திய அரசால் இலவசமாக வழங்கப்படும் கொவிட் தடுப்பூசியின் முதல் தொகுதி எதிர்வரும் புதன்கிழமை இலங்கைக்கு கொண்டு வரப்படும். சுகாதார மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு அவை மறுநாள் வியாழக்கிழமையிலிருந்து போடப்படும். இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவுடன் ஏற்கனவே கலந்துரையாடியதற்கு அமைவாக தேவையான எண்ணிக்கையிலான தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதை விரைவுபடுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன' என்றும் கோத்தபாய குறிப்பிட்டார். (ஒ.5)

## கொக்குவில்...

பட்டுள்ளார்.

பிரான்ஸ் குடியுரிமையை கொண்ட 60 வயதான நபரொருவர் கடந்த ஒரு வருடமாக தனது சொந்த இடமான கொக்குவிலில் தங்கியிருந்துள்ளார். அவர் மீளவும் பிரான்ஸ் செல்வதற்காக கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் வாகனம் ஒன்றில் கொழும்பு சென்றுள்ளார்.

விமானத்தில் பயணிப்பதற்கு பி.சி.ஆர். அறிக்கை தேவைப்பட்டதால், 21ஆம் திகதி தனியார் மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டார். அதன் முடிவு நேற்றுமுன்தினம் வெளியானது. அதில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அவர் யாழ். நகரம், திருநெல்வேலி பகுதிகளில் பல இடங்களுக்கும் சென்று வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. இதையடுத்து, அவர் சென்று வந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை வடக்கில் நேற்று 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியாவில் 3பேருக்கும், முல்லைத்தீவில் ஒருவருக்கும், மன்னாரில் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ.26)

## அரச மரத்துடன்...

வாய்ந்த இடமென்ற போர்வையில் சீருடையினர் தலையீடு செய்வதற்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வற்றாக்கை அம்மன் ஆலயத்துக்கு எதிரில் தொன்மையான கேணியொன்று உள்ளது. அதனருகில் அரச மரம் உள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு சென்ற சீருடையினர் அந்தப் பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டனர். பின்னர் அந்தப் பகுதிகளை படம் பிடித்தனர். ஆலய பூசகரை தொடர்பு கொண்டு, அந்தக் காணி தனியார் காணியா? அல்லது அரச காணியா? என வினவினர். அது தனியார் காணியென பூசகர் பதிலளித்த பின்னரும், அது தொடர்பில் அவரை துருவிதுருவி சீருடையினர் விசாரணை நடத்தினர். இதனால் பிரதேச மக்களிடையே அச்ச நிலைமை தோன்றியுள்ளது.

இது குறித்து பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனிடம் முறையிட்டதன் அடிப்படையில், அந்த பகுதிக்கு நேற்றுக் காலை சென்று நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார். அவருடன் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சுன்னாகம் பிரதேசசபை தவிசாளர் தர்சன் ஆகியோரும் சென்றிருந்தனர். (ஒ.319)

## உள்ளூரில்...

வர் கலுதரேஜ் சம்பத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். "பாதிக்கப்பட்ட நபர் மருந்து உட்கொண்டு மூன்று நாள்களுக்குள் குணமடையவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே தம்மிக்க என்ற ஆயுள்வேத மருத்துவர் தயாரித்த கொரோனா எதிர்ப்பு பாணியை அருந்திய, சுகாதார அமைச்சர் பவித்திரா உள்ளிட்ட பலர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இது ஏற்கனவே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், பெர்னாண்டோ இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டாரநாயக்க ஆராய்ச்சி நிறுவனம் இதை ஆய்வு செய்து அதற்கான சான்றிதழை வெளியிட்டுள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்ட 150 பேர் இந்த மருந்தை பயன்படுத்திய பின்னர் குணமாகியுள்ளனர். இந்த மருந்தை மக்கள் ஏற்கனவே உலகின் பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் சென்றுள்ளனர், என்றும் குறிப்பிட்டார். (ஒ.இ)

## சுரேஸ்...

கொலை' என்ற சொல்லாடலை புகுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதே நாங்கள்தான். வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் இதனைத் தெளிவாகவே கூறியிருந்தோம். அதனை மறைத்து சுரேஸ் பிரேமசந்திரன் பொய் கூறுகின்றார். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு எழுதிய கடிதத்தின் வரைவு தயாரிக்கும்போது 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை' என்ற சொல்லாடலைப் பயன்படுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எதிர்ப்பு வெளியிட்டார். பின்னரே இணங்கினார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, சுரேஸ் பிரேமசந்திரன் கூறுவது பச்சைப் பொய். அவர் ஏன் அவ்வாறு கூறுகின்றார் என்று தெரியவில்லை.

வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவரது கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் 'இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை' என்ற சொல்லாடலை வரைவில் சேர்க்கவேண்டும் என்று கூறினார். அந்தச் சொல்லாடல் இல்லாமல் எந்தக் கடிதமுமே வராது. அந்தச் சொல்லாடல் கட்டாயம் இருக்கும் என்று நாம் கூறினோம். அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களிடம் நீங்கள் கேட்டுப் பார்க்கலாம்.

இந்த விவகாரம் தொடர்பில் நாம் மூன்று கடிதங்கள் அனுப்புவதற்கு முடிவு எடுத்துள்ளோம். அதில் முதலாவது கடிதத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பியுள்ளோம். இரண்டாவது கடிதம், சர்வதேச பொறிமுறையைக் கோரும் கடிதம். அதனை ஐ.நா. பொதுச் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பவுள்ளோம். மூன்றாவது இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவது தொடர்பான கடிதம். சுரேஸ் பிரேமசந்திரனின் குற்றச்சாட்டு தொடர்பில் விரிவான விளக்கத்தை யாழ்ப்பாணத்தில் நாளை நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிப்பேன், என்றார். (ஒ,5)

## தனிமைப்படுத்தப்பட்ட...

நிலையில் அவருக்கு நேற்றைய தினம் சுப நேரத்தில் திட்டமிட்டபடி திருமணம் இடம்பெற்றது. திருமணம் முடிந்ததும் புதுமணத் தம்பதிகள் சுகாதாரத் தரப்பினரால் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனாத் தொற்றாளர் அண்மையில் அடையாளம் காணப்பட்டார். அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களில் பெண் ஒருவருக்கு நேற்றைய தினம் திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. சில தினங்களுக்கு முன்பு பொன் உருக்கு வைபவமும் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றைய திருமண நிகழ்வு தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் ஆலய முன்றலில் மணமக்களுடன் நெருங்கிய உறவினர்கள் ஐந்து பேரின் பங்கேற்புடன் திருமண நிகழ்வு நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

பொதுச் சுகாதார பரிசோதகர், பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் சிவாச்சாரியார் ஒருவரால் இந்த திருமண நிகழ்வு இந்து சமய முறைப்படி நடத்திவைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதுமணத் தம்பதி சுயதனிமைப்படுத்தப்படனர். எதிர்வரும் 28ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரியால் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். (ஒ,26)

## இலங்கையின்...

நீதியை நிலைநாட்டும் விடயத்தில் இலங்கையின் அலட்சிய செயற்பாடுகள் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடுமையான அவதானத்தைப் பெற்றுள்ள நிலையில் ஜனாதிபதி கோத்தாபய அரசு மற்றுமொரு உள்ள விசாரணை ஆணைக்குழுவை நியமித்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிரிவு பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த அர்ப்பணிப்பற்ற கண்துடைப்பு நடவடிக்கையால் வெளிநாட்டு அரசுகள் ஏமாந்துவிடாமல் உடனடியாக சர்வதேச நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கையில் ஆகக்குறைந்த பட்சம் 12 ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டியிருக்கும் மீனாட்சி கங்குலி மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசத்தின் அழுத்தத்தை தணிக்கும் வகையிலேயே இவ்வாறான ஆணைக்குழுக்கள் கண்துடைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் ஒருபோதும் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு வழிவகுக்கவில்லை. காணாமல்போன உறவினரைத் தேடுவதற்கு அவர்தம் உறவினர்களுக்கு உதவவில்லை. அவர்கள் கண்டுபிடித்த விடயங்கள் அநேகமாக வெளிப்படுத்தப்படவில்லை. பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.இ)

## முனையத்தை...

கும் நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். முன்னைய அரசு இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையை நான் நினைத்தால் போல் நிராகரிக்க முடியாது. அவ்வாறு செய்தால் நாம் சீனாவை சார்ந்துள்ளோம் என்ற தவறான நிலைப்பாடு உருவாகும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

'எம்.சி.சி. ஒப்பந்தம் குறித்த சிக்கல்கள் எழுந்தபோது குழுவொன்றை அமைத்து ஒப்பந்தத்தின் நன்மை, தீமைகளை ஆராயவும் எனக்கு அறிவிக்கவும் வலியுறுத்தினேன்.

எம்.சி.சி. ஒப்பந்தம் மோசமானது, அரசமைப்புக்கு முரணானது என்று அந்தக் குழு அறிக்கையிட்டது. அமெரிக்காவுக்கு அறிவித்து ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிவிட்டோம். தற்போது எழுந்துள்ள கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறித்த உடன்படிக்கை, முன்னைய ஆட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால, இந்திய பிரதமர் மோடி இருவருக்கும் முன்பாக அப்போதைய அமைச்சர் சாகல ரத்நாயக இந்திய பிரதிநிதிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்று உள்ளது. நான் ஆட்சிக்கு வந்ததும் இந்த உடன்படிக்கைகளை செய்ய மாட்டேன் என்று தூக்கி எறிய முடியாது. அவ்வாறு செய்தால் தவறான எண்ணக்கருவொன்று உருவாகும். ராஜபக்சக்கள் அனைத்தையும் சீனாவுக்கே கொடுப்பார்கள் என கூறப்படும். இது முறையானது அல்ல. நாம் எந்த நாட்டுடனும் தொடர்புபட்டு செயற்படவில்லை' என்றார். (ஒ.இ)

## தமிழக..

யின் பின்னர் இந்திய கரையோர காவற் படையினரிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டன. சர்வதேச கடல் எல்லையில் வைத்து நான்கு சடலங்களையும் இலங்கை கடற்படையினர், இந்திய கரையோர காவற் படையினரிடம் ஒப்படைத்தனர். கடந்த 18ஆம் திகதி கச்சதீவுக்கு அண்மித்த பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த, தமிழக மீனவர்களின் படகு மூழ்கியது.

இலங்கை கடற்படையினரின் படகு மோதியதாலேயே அந்தப் படகு மூழ்கியது என்றும் அதிலிருந்தவர்கள் உயிரிழந்தனர் என்றும் தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இலங்கை கடற்படையினர், தமது டோறா படகுடன் கடற்கொந்தளிப்பால் தமிழக மீனவர்களின் படகு மோதியது எனவும் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் உயிரிழந்த 4 பேரில் ஒருவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர். அவர் 2009ஆம் ஆண்டு அகதியாக இந்தியாவுக்குச் சென்றவர். கடந்த மாதம் 29ஆம் திகதியே அவருக்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது. இந்த நிலையில் அவரும், ஏனைய மூன்று தமிழக மீனவர்களுடன் சேர்ந்து இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இலங்கை அகதியின் உடலை ஒப்படைக்க ஆரம்பத்தில் மறுப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவரது மனைவி மண்டபம் அகதி முகாமில் இருப்பதாலும், தனது கணவனது உடலை ஒப்படைக்கவேண்டும் என்று கோரியதற்கு அமைவாக அவரது உடலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலங்களின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ.5,26)

# துப்பாக்கி முனையில் கழுத்தறுத்து கொள்ளை

செம்பியன்பற்றில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 24

செம்பியன்பற்று வடக்கு முனைப் பகுதியில் துப்பாக்கி முனையில் பெண்ணின் கழுத்தை அறுத்து, வீட்டிலிருந்த பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. கழுத்து அறுக்கப்பட்ட பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுஅதிகாலை இரவு 2.30 மணியளவில், 8பேர் கொண்ட கும்பல் பொலிஸார் எனத் தெரிவித்து வீடு புகுந்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி கொள்ளையிட்டுள்ளது.

சு.டேனுஜா (வயது 21) என்ற குடும்ப பெண்ணே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்த 25 பவுண் நகை மற்றும் 83 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த 42 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ.106)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ராச வீதியில் ராசவீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை.**

**2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.**

தொடர்பு - குரு
077 8051 655
077 5963 845
077 4683 354

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
**நகை ஸ்தாபனத்துக்கு** பணியாளர்கள் தேவை.

- 18 தொடக்கம் 25 வயதுடைய ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- கல்வித் தகைமை: O/L சித்தி. A/L படித்திருக்க வேண்டும்
- ஆங்கில. கணினி அறிவு வேண்டும்.
- 25 தொடக்கம் 30 ஆம் திகதி வரை முற்பகல் 10.30 மணி முதல் 3.00 மணிக்குள் உங்களுடைய சுய விவரக்கோவையுடன் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 5511

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
நகை காட்சியறைக்கு அனுபவம் உள்ள
நகை விற்பனையாளர் மற்றும்
கல்வியறிவு உடைய கணக்கு எழுதக்கூடிய வியாபாரம் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தகுதிக் கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**நேர்முகத்தேர்வு:**
நாளையும் நாளைமறுதினமும் 25, 26 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிமுதல் 11.30 மணிக்குள் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

**சந்தோஷ் ஜுவலர்ஸ்**
இல.97 A, 99V மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## நீங்களும் பட்டதாரியாகலாம்

BA, BCOM, BSc, BEng, MA, MSc, MBA,PhD

- நீங்கள் தொழில்புரியும் துறையில் அனுபவம் மற்றும் கல்வித்தகைமை இருந்தும் ஒரு Degree இல்லையா?
- நீங்கள் ஒரு அரச உத்தியோகத்தை எதிர்பார்ப்பவரா?
- குறுகிய காலத்தில் பட்டப்படிப்பை முடிக்க ஆவலாக உள்ளீர்களா?
- இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழும் சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்றது.

UGC APPROVED

உடன் பதிவு செய்யுங்கள்

•BA (General) •BA in Media/Journalism • BA in English
•BA in Tamil | •BCOM. • BBA
•BA in Psychology •MA Programes & PHD Programs • BA in Social Work
• Bachelor of Education

உள்நாட்டில் / சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழக பட்டமளிப்பு

FEBRUARY Intake
-Register
SMS Your Name & Address

1Year Top Up Degree (ஒரு வருடகால பட்டப்படிப்பு) வகுப்புக்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இலகு கொடுப்பனவு முறைகள் உயர்தரம் வாய்ந்த பட்டமளிப்பு விழா ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் நடைபெறும் தகைமை வாய்ந்த பயிற்று விப்பாளர்கள்

**AUSTRALIAN BUSINESS CAMPUS**
NO, 160 2 nd CROSS STREET, JAFFNA.
Contact no
0777 302224 0777 128633 021 4366676
web: www.abcedu.lk Email: abcedu171@gmail.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம், 1987 ஆண்டு, உயரம் 5'6". பூரட்டாதி - 2 ஆம் பாதம், கி.பா 39, சூரி - செவ் - 11 இல். B.Sc,M.Sc (Computer Science) அரச தொழில் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. எதிர்பார்ப்பு - பட்டதாரி, அரச தொழில்
077 693 6744

## வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் உள்ள
**மிக்சர் கம்பனிக்கு**
பெண் வேலையாள்கள் தேவை.
077 920 9507

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

யாழ் - மானிப்பாய் வீதியில் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டேகால் பரப்புக்காணியும் அதனுடன் சேர்ந்த வீடும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்.
077 328 8279

## கட்டிடம் வாடகைக்கு

யாழ் மின்சார நிலைய வீதியில், யாழ் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் 3 மாடிக் கட்டிடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0772718186, 0774373786

## அகரம்

உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
கே.கே.எஸ் வீதி, மல்லாகம் | கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

தரம் 06 - O/L வரையான
தமிழ் மொழி மூலம், English Medium
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

புதிய கல்வி ஆண்டு-2021
இயல்புநிலை வகுப்புக்கள்
ஆரம்பம்- 25.01.2021 அன்று
மாலை 03:20 இல் இருந்து
வழமையான நேரசூசிக்கு அமைவாக...

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# JOB VACANCIES



**Photo Copier & Computer Technician(Male)**
(Age 19 - 28) * நிறுவனத்தினால் பயிற்சியளிக்கப்படும்
Jaffna District - 05
Killinochi District -02
Mullaitivu District - 02
Mannar District - 02
* Should be Motobike license

**Accounting Assistant (Female)**
(Age 22 - 30) Jaffna District - 02
* கணக்கியல் துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

**Management Assistant (Female)**
(Age 20 - 25) Jaffna District - 02
Killinochchi District - 02

**Marketing Staff (Male)**
(Age 20 - 28) Northern Province - 02
Killinochchi District - 02
Jaffna District - 02
* Should be Motobike license

**Technical Coordinator (Male)**
(Age 25 - 30) Northern Province - 02
* Should be Motobike license

Should be Sent Bio Data Within 7 Days

**North Link Engineering**
IT Product Sales & Technical Services

NORTHERN PROVINCE HEAD OFFICE
North Link Engineering
360/3, Main Street, Jaffna.
email: financenorthlink@gmail.com

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரில் 04 பேர் கொண்ட சிறிய குடும்பமொன்றிற்கு வீடு வாடகைக்குத்தேவை.
074 166 8479

## அன்பொளி கல்வியகம்
புதிய கல்வியாண்டு-2021

**தரம் 1, 2, 3, 4, 5 நேரடி வகுப்புகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன**
புதன் (27.01.2021) தொடக்கம் பி.ப 2.30-5.30 மணி வரை அனுமதிக்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
**தரம் 3, 4, 5 ZOOM வகுப்புக்களும் நடைபெறுகின்றன.**
விரும்பியவற்றில் இணைந்து கொள்ளலாம்
**இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ் நகரில் IELTS (Academic and General), A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
Guarnteed to 7.5 in IELTS Exam

Group and Indivual Classes
Jaffna College
Ungraduate Department
Please Contact 077 780 3970 /074 007 1970




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
தை : 11
ஞாயிற்றுக்கிழமை 24.01.2021
சிகரம் : 32

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

கல்கண்ட இடமெல்லாம் காலைத் தூக்கும் ஞமலியாக
தொல் பொருள் இடமெங்கும் முளைப்பாராம் புத்தர் – கொல்லும்
விஷமாக கௌதமப் போதனைகளை திரித்து திரிபிடகமாக்கி
வசமாக்கத் துடிக்கின்றார் நம்நிலமென அறி!

– கொரோனாச் சித்தர்

# எம் பிள்ளைகள் எப்போது மீள்வர்?

இன்னமும் தீர்க்கப்படாமல் நீள்கின்ற பிரச்சினைகளில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் முதன்மையானது. பல வருடங்களாக, எப்போது விடுதலையாவோம் என்பது தெரியாமல், குற்றமே செய்யாமலும்கூட, ஏராளமான தமிழ் இளைஞர், யுவதிகள் சிறைப்பறவைகளாக உள்ளனர். தமது பதின்ம வயதில் சிறைப்பிடிக்கப்பட்ட இவர்கள், இப்போது நடுத்தர வயதைக் கூட தாண்டிவிட்டார்கள். ஆனால் விடுதலை மாத்திரம் கிட்டவேயில்லை. மரண தண்டனைக் கைதிகளும், போதைப்பொருள் கடத்துபவர்களும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையாகும் ஒரு நாட்டில், செய்யாத குற்றங்களுக்காக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை அரசாங்கம் ஏனென்று கூட எட்டியும் பார்க்கவில்லை. இத்தகைய கையறுநிலையில், தங்கள் பிள்ளைகளின் விடுத லைக்காக இரு தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ச் சியாக அகிம்சை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் போராடிவரும் இரு பெற்றோரின் கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

நேர்காணல்:
பொ.சோபிகா



ஆரூரன்



## ஆழ்வான் சிவலிங்கம்

(வயது 75, அல்வாய் வடமேற்கு, அல்வாய்)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் படித்து பொறியியலாளரான எனது மகன் ஆரூரன் மேற்படிப்பை தொடர்வதற்காக கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்புக்கு சென்றிருந்தார்.

அங்கு சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பில் வைத்து, 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிசாரின் விசாரணையின் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு ,விசாரணைக்காக இன்றுவரைபுதிய மகசின்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். என் மகனுடன் 4 பேர் கைதுசெய்யப்பட்டார்கள், அதில் 2பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் எனது மகனுக்கும் இன்னுமொருவருக்கும் இன்னும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. தற்போது நாட்டில் கொரோனாப் பரவல் என்பதால் விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களுக்கு பிணை இல்லை. ஆனால் எனது மகனுடைய வழக்கை விரைவாக விசாரணை செய்திருந்தால் விரைவில் எமக்குத் தீர்வு கிடைத்திருக்கும். அதைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்யாததால், இவ்வளவு காலமாக நாம் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறோம். இவ்வளவு காலம் எனது மகனை விளக்கமறியலில் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை. விளக்கமறியலில் வைத்தால் நீதியின்படி அவரை விசாரணை செய்து குற்றவாளி என்றால் தண்டனை கொடுத்திருக்கலாம், நிரபராதி என்றால் விடுதலை செய்திருக்கலாம். ஆனால் இரண்டும் நடைபெறவில்லை என்பது எவ்வளவு கொடுமையானது. அரசு எமது பிள்ளைகள் விடயத்தைக் கவனத்திலே எடுக்கவில்லை. அதுதான் உண்மை.

28 வயதில் சிறை சென்ற என் மகனுக்கு தற்போது 41 வயதாகிறது. பல கனவுகளுடன் தனது எதிர்காலத்தை நோக்கிச் சென்றவர், தற்போது தனது இளமையைத் தொலைத்துக்கொண்டு இருக்கிறார். தற்போது அவர் ஒரு இலக்கியவாதியாக மாறிவிட்டார். சிறைக்குள் இருந்து பல நூல்களை வாசிக்கத் தொடங்கினார். 3 நாவல்கள், சிறுகதை தொகுப்பு அத்துடன் ஆங்கில நாவல் ஒன்றும் எழுதியுள்ளார். அதற்கு விருதும் பெற்றுள்ளார்.

எனது மகனின் விடுதலைக்காக பலஅரசியல் தலைவர்களைச் சந்தித்தோம். எந்தப் பயனும் இல்லை இப்போது மதத்தலைவர்களை நாடியுள்ளோம். அவர்களால் தான்ஏதும் நல்ல முடிவுகள் கிடைக்குமென நினைக்கிறேன். கடந்த அரசாங்கங்கள் எமது பிள்ளைகளை விடுதலை செய்யவில்லை, எமது அரசியல் தலைவர்களும் இதை ஒரு முக்கிய விடயமாகப் பார்க்கவில்லை. கடந்த அரசோடு எமது அரசியல் தலை வர்கள் மிக நெருக்கமாக இருந்தார்கள். அப்போது கூட எமது அரசியல் தலைவர்களின் அணுகுமுறை பிழை என்பதால் எமது பிள்ளைகளை விடுதலை செய்ய அவர்களால் முடியவில்லை. அவர்கள் நினைத்திருந்தால் எமது பிள்ளைகளை விடுவித்தி ருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. அரசியல் கைதிகளுக்காக அடையாள உணவு தவிர்ப்புக்கு நாம் ஒரு முறை முயற்சி செய்தபோது 50 பேருடைய ஒத்துழைப்புத் தான் எனக்கு கிடைத்தது.

ஒருவேளை அன்றைக்கு 50 ஆயிரம் பேர் வந்திருந்தால் எமது பிள்ளைகளுக்கு விடுதலை சாத்தியமாக இருந்திருக்கும். ஆனால் பல வருடங்களாகச் சிறையில் வாடும் கைதிகளின் விடுதலைக்காக மக்கள் கூட ஒத்துழைக்கவில்லை என்பது வேதனையளிக்கிறது.

அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என அரசதரப்பினர் கூறுகிறார்கள். இது என்ன கதை என எமக்குத் தெரியவில்லை. அரசியல் கைதிகளை பயங்கரவாதிகளாகப் பார்க்கிறார்கள். குற்றம் சாட்டப்படாதவர்களை யும் குற்றவாளிகளாக நடத்துகிறார்கள். அதுதான் எமக்கு வேதனை. அரசு இதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது எமது கோரிக்கை. முதலில் அரசு பயங்கரவாதத்தையும் அரசியல் கைதிகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். பயங்கரவாதம் என்றால் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். எமது பிள்ளைகள் அரசியல் கைதிகள் தான் . அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. நாம் இப்போது கருணை மனுவை முன்வைக்கிறோம். எனது குடும்பத்தில் எனது மகனைத்தான் நம்பியிருந்தோம். ஆனால்அவருடைய வாழ்க்கை சிறைக்குள்ளே கழிவதால், நானும் எனது மனைவியும் உடலாலும் மனதாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது வேதனை எமக்குத்தான் தெரியும் .

குற்றம் செய்தவர்களுக்கு மன்னிப்பும்,குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நல்லெண்ண விடுதலையும் வேண்டும் எனக்கோருகிறோம். எமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் பெரும்பான்மையின மக்களும் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.



## தேவராசா தேவராணி

(வயது : 63 , கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்)



தே. சிவபாலன்

தொழில் நிமித்தம் கொழும்புக்கு சென்ற எனது மகனான தேவராசா சிவபாலனை கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வத்தளையில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள். அப்போது அவருக்கு 30 வயது. இன்னமும் அவர் சிறையில் தான் உள்ளார் .


தற்போது அவரை நீர்கொழும்புச் சிறையில் அடைத்து வைத்துள்ளனர். வழக்கு விசாரணை இன்னமும் முடிவில்லாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.பல சிரமங்களுக்கு மத்தியில் எனது மகனின் விடுதலைக்காக அலைந்து திரிகிறேன். ஜனாதிபதி தொடக்கம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் முயற்சிசெய்தேன். இதுவரை பயன் கிடைக்கவில்லை.

எனதுமகன் ஏற்கனவே ஒரு கால் வலுவிழந்தவர். அத்தோடு மேலும் பலநோய்கள் அவருக்கு உள்ளன. இந்தக் கைது அவருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதால் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்.

04

# தமிழ்க் கட்சிகள் ஜெனிவாவுக்கு அனுப்பிய ஒரு பொது ஆவணம்

○ நிலாந்தன்



2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ் .திருமறைக் கலாமன்றத்தில் தமிழ் சிவில் சமூக அமையத்தால் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பின்போது மாற்று அணிகளைச் சேர்ந்த கட்சிகள் ஐக்கியப்பட்டால் வாக்குச்சிதறலைத் தடுக்கலாம் என்று பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அப்படி ஒரு இணைப்பு அப்போதைக்கு சாத்தியமில்லை என்றும் சுட்டிக்காட் டப்பட்டது.சந்திப்பின் முடிவில் யாழ்.பல்கலைக்கழக புலமை சாரா ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் பின்வருமாறு சொன்னார்."இவர்களை இப்போதைக்கு ஒற்றுமைப்படுத்த முடியாது. ஒற்றுமைப்படுத்த வெளிக்கிட்டால் அவர்கள் எங்களைத்தான் விரோதமாகப் பார்ப்பார்கள்.எனவே அவர்களை அவர்களின் போக்கில் விடுவோம்.அவர்கள் சிதறிப் போய் தேர்தலை எதிர்கொள்ளட்டும். அதில் வெல்பவர் வெல்லட்டும் தோற்பவர் தோற்கட்டும்.அதற்குப்பின் அவர்கள் ஏதோ ஒரு வழிக்கு வருவார்கள். அப்பொழுது அவர்களை ஐக்கியப்படுத்தலாம்" என்று.

அவர் அவ்வாறு கூறி இரண்டு ஆண்டுகளின்பின்னரே ஒரு தற்காலிக ஐக்கியத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. கடந்த 2ஆண்டுகள் காலப்பகுதிக்குள் மூன்று தேர்தல்கள் நடந்துவிட்டன. இதில் கடைசியாக நடந்த பொதுத்தேர்தலின்போது தமிழ் வாக்குகள் முன்னெப்பொழு தையும் விட அதிகரித்த அளவில் சிதறின. இதன் விளைவாக கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது. ஆனால் கூட்டமைப்பு இழந்த 6 ஆசனங்களையும் மாற்று அணி பெறவில்லை.மாற்று அணி 3 ஆசனங்களையேபெற்றது.இவ்வாறு கடந்த பொதுத்தேர்தலின்போது வாக்களிப்புக் கோலம் மாறியதன் விளைவாக உருவாகிய ஒரு புதிய சூழலே கடந்த வாரம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளுக்கிடையில் ஒரு விவகார மையக்கூட்டை உருவாக்கக்கூடிய நிலைகளைத் தோற்றுவித்தது.

கொள்கைக்கூட்டு உடனடிக்கு சாத்தியம் இல்லை. அப்படி ஒரு கொள்கைக் கூட்டு உருவாகும் வரையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறிக்கிடந்தால் அது தென்னிலங்கை மையக் கட்சிகளுக்கும் அவற்றின் சேவகர்களுக்குமே வாய்ப்பாகி விடும். எனவே ஒரு கொள்கைக்கூட்டு ஏற்படும் வரையிலும் காத்துக்கொண்டிருக்காமல், தற்காலிகமாக, சமயோசிதமாக, கட்சிகளை, பிரச்சினைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் தற்காலிக, கூட்டுக்குள் கட்டிப்போட வேண்டும். இதன் மூலம் தனியோட்டம் ஓடக்கூடிய கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை உண்டு.

இந்த அடிப்படையில்தான் மூன்று வாரங்களுக்கு மேலாக மூன்று கட்சிகளையும் ஜெனிவாவை நோக்கி ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு மூன்று சந்திப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டன.தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தச்சந்திப்புகளில் முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் நடந்தது. திருமலை ஆயரும் மத குருக்களும் உட்பட குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இந்த ச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை.விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக அருந்தவபாலன் பங்குபற்றினார்.கூட்டமைப்பின் சார்பாக சுமந்திரன் வந்திருந்தார். சிவாஜிலிங்கமும் அனந்தியும் வந்திருந்தார்கள்.

இந்தக்கூட்டத்தில் பேசிய சுமந்திரன் பெருமளவுக்கு ஜெனிவாவோடு அதாவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையோடு ஏதோ ஒரு விகிதத்திலாவது 'எங்கேஜ்' பண்ணவேண்டும் என்ற தொனிப்பட பேசினார்.ஜெனிவாவுக்கு வெளியே போவதில் இருக்கக்கூடிய சவால்களையும் சுட்டிக்காட்டிக் கதைத்தார். சந்திப்பில் கலந்துகொண்ட சிவாஜிலிங்கம் தாம் அங்கம் வகிக்கும் விக்னேஸ்வரனின் கூட்டணி ஜெனிவாவுக்கு அனுப்புவதற்கு என்று தயாரித்து வைத்திருக்கும் ஓர் ஆவணத்தை முன்வைத்துப் பேசினார்.அதில் அவர் ஜெனிவாவை முழுவதுமாகக் கைவிடாமல் அதில் ஏதோ ஒரு விகிதமளவுக்கு 'எங்கேஜ்' பண்ணிக்கொண்டு ஜெனிவாவை கடந்து போக வேண்டும் என்று சொன்னார்.அவருடைய வார்த்தைகளில் சொன்னால், யாரையாவது உதைவது என்றால் ஒரு காலை நிலத்தில் ஊன்ற வேண்டும். சிவாஜிலிங்கமும் சுமந்திரனும் சில இடங்களில் பொருந்திப் போவது போல் இருந்தது. எனவே இரண்டு கட்சிகளும் தங்களுக்கிடையில் ஒரு பொது முடிவுக்கு வந்தால் என்ன என்ற தொனிப்பட சுமந்திரன் கேட்டார். ஆனால் அதற்கு அங்கு கூடியிருந்த குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகள் உடன்படவில்லை. அது ஒரு பொதுத்தீர்மானத்துக்கு வருவதற்குரிய பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கிலான சந்திப்பின் தொடக்கமே தவிர அங்கே உடனடியாக ஒரு பொதுத் தீர்மானத்துக்கு வரவேண்டிய தேவை இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அருந்தவபாலன் அதை வலியுறுத்தினார். கடந்த ஆறாண்டு கால நிலைமாறுகால நீதிப் பயிலின் தோல்விகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் உச்சமான கோரிக்கைகளை ஐ.நா.வில் முன்வைக்க வேண்டும் என்று குடிமக்கள் சமூகங்களும் மதகுரு மாரும் கேட்டுக் கொண்டார்கள்.

> கொள்கைக்கூட்டு உடனடிக்கு சாத்தியம் இல்லை. அப்படி ஒரு கொள்கைக் கூட்டு உருவாகும் வரையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறிக்கிடந்தால் அது தென்னிலங்கை மையக் கட்சிகளுக்கும் அவற்றின் சேவகர்களுக்குமே வாய்ப்பாகி விடும்.

ஐ.நா.வில் என்ன கிடைக்கும் என்று சிந்திக்காமல் பாதிக்கப்பட்ட மக்கள் எதைக் கேட்கிறார்கள் என்பதை கூர்மையாக வெளிப்படுத்தும் விதத்தில் ஐ.நா.வுக்கான கோரிக்கை அமைய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். சந்திப்பின் முடிவில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அடுத்த சந்திப்பு வவுனியாவில் என்று தீர்மானிக்கப் பட்டது.

வவுனியா சந்திப்புக்கு கஜேந்திரகுமார் வந்திருந்தார். அங்கே அவர் ஜெனிவாவை குறித்து விமர்சனபூர்வமாக உரையாற்றினார். குறிப்பாக பொறுப்புக் கூறலை ஜெனிவாவுக்கு வெளியே எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பில் பேசிய சுமந்திரனும் ஜெனிவாவை கையாள்வதில் அதாவது கடந்த 6 ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையோடு தமது கட்சி முன்னெடுத்த நிலைமாறுகால நீதிச்செயற்பாடுகள் என்ற பரிசோதனை முயற்சி வெற்றிபெறவில்லை என்பதை ஏற்றுக்கொண்டார். எனவே ஜெனிவாவை கடந்து போவது என்பதில் மூன்று தரப்புகளுக்கும் இடையில் ஒரு பொது நிலைப்பாடு காணப்பட்டது.

அவ்வாறு ஜெனிவாவைக் கடந்து போவது வரையிலும் ஜெனிவாவில் அதாவது மனித உரிமைகள் பேரவையில் எவ்வளவு விகிதத்துக்கு என்கேஜ் பண்ணுவது என்பதில் மூன்று கட்சிகளுக்கும் இடையில் விகிதவேறுபாடுகள் இருந்தன. குறிப்பாக 'ட்ரிபிள் ஐஎம்' என்றழைக்கப்பட்ட ஒரு பொறிமுறையை சிவாஜிலிங்கம் தொடர்ந்து வலியுறுத்தினார்.ஆனால் கஜேந்திரகுமார் அதை ஆவணத்தில் இணைப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. "அந்தப் பொறிமுறை மியான்மாருக்குரியது. ஒரு நாட்டுக்கென்று விசேஷமாக உருவாக்கப்பட்டது. அப்படி ஒரு பொறிமுறையைக் கேட்டால் அந்தப் பொறிமுறையை உருவாக்குவதோடு ஐ.நா. நின்றுவிடும்" என்றும் அவர் சொன்னார்.

'ட்ரிபிள்ஜஎம்' எனப்படுவது பர்மாவுக்காக உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறை.நீதி விசாரணை ஒன்றுக்கான அடிப்படைத் தகவல்களை திரட்டும் ஒரு பொறிமுறை. இந்தப் பொறிமுறையை நாங்கள் கேட்டால் ஐ.நா.அதையொத்த ஏதோ ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்திவிட்டு பிரச்சினைக்கு தீர்வாக அறிக்கைகளையே வெளியிட்டுக் கொண்டிருக்கும். ம்றாக, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு போக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்போம்' என்று அவர் கேட்டுக்கொண்டார். அனைத்துலககுற்றவியல் நீதிமன்றம் ஒரு நீதி விசாரணையை முன்னெடுத்தால் அதற்கென்று சாட்சிகளையும் ஆதாரங்களையும்திரட்டும் ஒரு பொறிமுறையை அந்த நீதிமன்றமே உருவாக்கும் .எனவே அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கைக்குள் ; 'ட்ரிபிள்ஜஎம்' போன்ற ஒரு பொறிமுறைக்கான கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று கஜேந்திரகுமார் வாதிட்டார். அத்தோடு அண்மைய ஆண்டுகளில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளை சுட்டிக் காட்டி புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார். இவை அரசற்ற தரப்புக்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சாதகமானவை என்றும் அவர்கூறினார். இதனிடையே,இந்தச்சந்திப்புக்கு சில நாள்கள் கழித்து அதாவது 6 ஆம் திகதி கொழும்பில் ஒரு சந்திப்பு நடந்தது. மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்துவால்ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட அந்தச்சந்திப்பில் மூன்று கட்சிகளின் தலைவர்களும் பங்குபற்றினார்கள்.அதில் மூவரும் ஒன்றாக இணைந்து ஒரு பொது அணுகுமுறைக்கு வருவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆறாம் திகதி நடந்த சந்திப்பின் விளைவாக ஏழாம் திகதியும் ஒரு சந்திப்பு கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் அது வெற்றி பெறவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்புகளின் தொடர்ச்சியாக மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில் ஒழுங்கு செய்யப்பட்டது. சந்திப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா போன்றோரும் பங்குபற்றினர். பலத்த வாதப்பிரதிவாதங்களின் முடிவில் ஒரு பொது ஆவணத்தை தயாரிப்பது என்று மூன்று கட்சிகளும் ஒத்துக்கொண்டன. மூன்று மணித்தியாலங்களுக்கு மேலான சந்திப்பில் கட்சிகள் தங்களுக்கிடையே பலமான வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டன. அந்தச் சந்திப்பில் பங்குபற்றிய திருமலை ஆயர் இரண்டு தடவைகள் கண்டிப்பான குரலில் இடையீடு செய்யவேண்டியிருந்தது.

விக்னேஸ்வரனின் கூட்டணி சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோரிக்கையை குறிப்பிட்ட ஆவணத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தற்காலிகமாகத் தளர்த்தியது.அதேசமயம் கூட்டமைப்பு நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக் கொண்டது. எனவே இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியைக் கேட்டு அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்வது என்ற ஒரு முடிவுக்கு மூன்று கட்சிகளும் ஒன்றாக வந்தன.விக்னேஸ்வரனின் கூட்டு வலியுறுத்திய 'ட்ரிப்பில்.ஐ.எம்' என்ற பொறிமுறையை கஜேந்திரகுமார் காலவரையறையோடு ஏற்றுக்கொள்வது என்று சம்மதித்தார். இதன்பின்னர் ஒரு பொது ஆவணத்தை இறுதியாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. இப்படித்தான் மூன்று கட்சிகளும் ஒரு பொது இணக்கத்துக்கு வந்தன. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்தமை; மாற்று அணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்தமை; புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலையீடு; கஜேந்திரகுமாரின் கட்சிக்குள் ஏற்பட்ட உடைவு போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாகவே இப்படி ஒரு தேவை கருதிய கூட்டை உருவாக்க வேண்டிய நிலைமைகள் கனிந்தன .

(04ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவாவும் தேர்தலும்!







○ அ.நிக்ஸன்

ஜெனீவா மனித உரிமைச் சபையின் அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில், தென்னிலங்கை அரசியல் சூழலில் இரண்டு வகையான செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. முதலாவது, மாகாணசபைத் தேர்தலை நடத்துவது பற்றிய ஏற்பாடுகள். இரண்டாவது, பிரதான சிங்கள அரசியல் கட்சிகளிடையேயான பனிப்போர் மற்றும் குழப்பங்கள். இங்கு மாகாணசபைத் தேர்தலைப் பயன்படுத்தியே ஆளும் கட்சியும் பிரதான சிங்கள எதிர்க்கட்சிகளும் தத்தமது அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கின்றன.

மாகாணசபை முறை நீக்கம் செய்யப்பட வேண்டுமெனவும், அதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலாக வேறொரு சட்டம் உருவாக்கப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் என்ற போர்வையில் இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பை மேலும் உறுதிப்படுத்திப் பாதுகாக்க வேண்டுமென்பது பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் நோக்கம். இது 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் சிங்கள ஆட்சியாளர்களிடையே இருக்கின்ற பிரதான எதிர்பார்ப்பு. தன்னை மாற்று அரசியல் கட்சி என்றும், மாக்சியக் கட்சியெனவும் மார்தட்டுகின்ற ஜே.வி.பிகூட 13ஆவது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டால் குறைந்தபட்ச எதிர்ப்போடு அமைதியாகிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

## தேடப்படும் மாகாண சபை

ஆனால், தற்போதைய தென்னிலங்கை அரசியல் சூழலில், கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகளுக்கும் மற்றும் இந்தக் கட்சிகள் சார்ந்த பொது அமைப்புகளுக்கும் உண்டு. இதனால் மாகாண சபைத் தேர்தலை சாதகமாகப் பயன்படுத்த இந்தத் தரப்புக்கள் முற்படுகின்றன. மாகாணசபையும், அதற்கான 13ஆவது திருத்தச் சட்டமும் ரத்துச் செய்யப்படால் நல்லது என்று எதிர்பார்க்கின்ற இந்தக் கட்சிகள், தங்கள் பலத்தை நிரூபிக்கவே தற்போதைக்கு மாகாணசபைத் தேர்தல்களை விரும்புகின்றன போலும். இந்தக் கட்சிகளின் நோக்கம் ராஜபக்ச அரசாங்கத்துக்கும் தெரியாததல்ல. ஆனால் தங்கள் பலத்தை மேலும் நிரூபிக்கவும், தமது அரசாங்கம் பலமாக இருக்கின்றது என்பதை சர்வதேச அரங்குக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முற்படுகின்றனர். அதுவும் ஜெனீவா மனித உரிமைச் சபையின் 30/1 தீர்மானத்துக்கு அமைவாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்தினால், கொஞ்சமேனும் அழுத்தங்களைக் குறைக்க முடியுமென்ற நோக்கமும் ராஜபக்ச அரசாங்கத்துக்கு உண்டு. அதேநேரம் மாகாண சபைத் தேர்தல் தேவையில்லை என்று சொல்லும் தரப்புக்களும் கோத்தாபய அரசில் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் ஆளும் பெரமுனவுக்குள்ளேயே தற்போது பனிப்போர் மூண்டுள்ளமை அவதானிப்பு. ஆளும் ராஜபக்ச அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கில் செயற்படுகின்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள், அரசாங்கத்தின் உள்ளகப் பனிப்போரை அறிந்துகொண்ட நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்தித் தங்கள் பலத்தையும் செல்வாக்கையும் நிரூபிக்க முற்படுகின்றன.

## குழம்பி நிற்கும் ஐ.தே.க

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஐ.தே.கவுக்குள் பிளவு ஏற்பட்டு உதயமாகிய ஐக்கிய மக்கள் சக்தியில் ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள் பலரை இணைக்கும் நகர்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரான கரு ஜயசூரிய புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார் என தற்போது தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட வேண்டுமென்ற அழுத்தங்களும், அதனைச் செயற்படுத்த முடியாத நிலையும்.

இரண்டாவது சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பொறுப்பை பாட்டாலி சம்பிக்க ரணவக்க கோரியதால், எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கு அது ஆபத்தாக இருக்கலாமென மூத்த உறுப்பினர்கள் பலர் கருதுகின்றமை. இந்த இரு காரணங்களால் புதிய கட்சி ஒன்றை அமைத்து ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளில் இருந்து மூத்த உறுப்பினர்களை அழைத்துச் செயற்பட முடியுமென கருஜயசூரிய நம்புகின்றார் போலும்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கரு ஜயசூரியவின் புதிய கட்சியோடு கூட்டுச் சேர்ந்து பயணிக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை. அத்துடன் குறித்த இந்த இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் இணைந்து செயற்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொது அரசியல் அணி ஒன்றை உருவாக்கித் தேர்தல்களை எதிர்கொள்ளக்கூடிய வாய்ப்புகளும் இல்லை. இங்கே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சந்திரிக்காவுடன் இணைந்து செயற்பட முற்பட்டாலும், மைத்திரிபால சிறிசேனவுடன் கூட்டுச் சேருவதற்கான சந்தர்ப்பங்களும் இல்லையெனலாம்.

> முரண்பாடுகள், பனிப்போர் மற்றும் பிளவுகள் மத்தியிலேயே மாகாணசபை தேர்தலை தென் இலங்கையில் உள்ள பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் எதிர்கொள்ளப் போகின்றன என்பது வெளிப்படை.

ஆகவே, கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கத்துக்கு எதிரான புதிய அரசியல் கூட்டு எங்கிருந்து யாரால் உருவாக்கப்படப் போகின்றது என்பதே தற்போதைய கேள்வி. ஆளும் ராஜபக்ச அரசாங்கத்தின் உள்ளக முரண்பாடுகளை எதிர்க்கட்சிகள் அறிந்து செயற்பட முற்படுவதுபோன்று எதிர்க்கட்சிகளின் முரண்பாடுகளையும் அவர்கள் ஒன்று சேர முடியாத ஒவ்வாமைகளையும் தெரிந்துகொண்டவொரு சூழலில் ராஜபக்ச அரசாங்கமும் காய் நகர்த்துகின்றது.

## இடியப்பச் சிக்கல்நிலை

இவ்வாறான முரண்பாடுகள், பனிப்போர் மற்றும் பிளவுகள் மத்தியிலேயே மாகாண சபைத் தேர்தலை தென் இலங்கையில் உள்ள பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் எதிர்கொள்ளப் போகின்றன என்பது வெளிப்படை. பௌத்த குருமாரைப் பொறுத்தவரை ஆளும் தரப்பையும் எதிர்த்தரப்பையும் வெவ்வேறு பிரிவுகளாகக் கையாண்டு இணக்கத்தை ஏற்படுத்த முற்படுகின்றனர். குறிப்பாக ஆளும் ராஜபக்ச அரசாங்கத்துக்குள் நடக்கும் பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து பொதுஜன பெரமுன தலைமையிலான ராஜபக்ச அரசாங்கத்தைப் பலப்படுத்த வேண்டுமென்பதே பௌத்த குருமார் பலரின் எதிர்பார்ப்பு. அதற்குரிய முறையில் மாகாநாயக்க தேரர்கள் ராஜபக்ச அரசாங்கத்துடன் உள்ளக ரீதியாகப் பேச்சு நடத்துகின்றனர் எனவும் நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. குறிப்பாக 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட சூழலில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை அரசியல் ரீதியாக சர்வதேச அரங்கில் இருந்து நீக்கம்செய்ய ராஜபக்ச அரசாங்கமே சிறந்தது என்ற எண்ணம் மகாநாயக்க தேரர்களுக்கு உண்டு.

வேறு பௌத்த குருமார் கரு ஜயசூரியவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஆதரித்தாலும் பெரும்பான்மையான பௌத்த குருமார் ராஜபக்ச அரசாங்கத்தையே விரும்புகின்றனர்.

இதனால் ராஜபக்ச அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்ற ஏனைய எதிர்க்கட்சிகளினுடைய நகர்வுகளுக்கு பௌத்த குருமாரின் ஆதரவு பெருமளவில் கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆனால் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்தினால், பௌத்த குருமாரில் பலரும், பிரதான கட்சிகளில் உள்ள மூத்த உறுப்பினர்கள் பலரும் ஆதரவு கொடுக்கக்கூடிய ஏதுநிலையும் உண்டு.

எதுவானாலும் ராஜபக்ச அரசாங்கத்தைக் கவிழ்க்கப் புறப்படவுள்ள பிரதான சிங்கள அரசியல் தலைவர்களுக்கோ, அவர்கள் சார்ந்த கட்சிகளுக்கோ 2015ஆம் ஆண்டு ஒத்துழைத்தது போன்றதொரு நகர்வை இம்முறை சர்வதேசம் செய்யுமா? என்பதும் சந்தேகமே. ஏனெனில், பலம் உள்ளவர்களை ஆதரிப்பதன் மூலமே இலங்கையில் எதனையும் சாதிக்கலாமென்பதை 2019ஆம் ஆண்டு ஜனாதி பதித் தேர்தல் முடிவுகளோடு அமெரிக்காவும் இந்தியாவும் உணர்ந்துகொண்டுள்ளன.

■



# தீராப்பகை!

○ ஆர்.பிரகாஷ்

இஸ்ரேல் என்னும் நாட்டை இல்லாது செய்யவேண்டும் என்று தன் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது ஈரான். வழமையாகவே போர்மேகம் சூழ்ந்து உச்சக்கட்டப் போர்முனையாக விளங்கும் மத்திய கிழக்கில் ஓர் நாடாளுமன்றத்தில் இன்னொரு நாட்டை அழிக்கும்படியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நிலைமை எவ்வளவு பாரதூரமாகும்?. இதுவரை மத்திய கிழக்கு எவ்வாறு இருந்ததோ, இனியும் அவ்வாறுதான் இருக்கப்போகின்றது. சில வேளைகளில் இதுவரை இல்லாததைவிட பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம் என்பதையே ஈரானின் இந்தத் தீர்மானம் வெளிப்படுத்துகின்றது.

### பரம விரோதிகள்

இஸ்ரேல் ஒரு யூத நாடு. ஈரான் ஒரு இஸ்லாமிய தேசம். இவை இரண்டும் பாம்பும் கீரியும் போல காலாதிகாலமாகப் பரம விரோதிகள். இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு என்பது இம்மியும் சாத்தியம் இல்லாதது. மத்திய கிழக்கின் வல்லரசு யார் என்ற அதிகாரப் போட்டியில் இரு நாடுகளும் தீர்மானம் மிக்கவை. இந்த அதிகாரப் போட்டியும் பலஸ்தீன விவகாரமும் அமெரிக்கத் தலையீடும்தான் ஈரான், இஸ்ரேல் இரண்டையும் தீண்டத்தகாத நிலைமைக்கு ஆட்படுத்திவிட்டுள்ளன. அத்துடன் எரிகின்ற நெருப்பில் அவ்வப்போது எண்ணெயும் ஊற்றிக்கொண்டுள்ளன. காலாதிகாலமாக இந்த மோதல் இருந்துவரும் நிலையில் தற்போது நிலைமையை மேலும் பாரதூரமாக்கி விட்டது வேறுயாருமல்ல, சாட்சாத் அமெரிக்காவேதான்.



கடந்த வருடம் ஜனவரி மாதம் ஈரானின் இராணுவத் தளபதியான காசீம் சுலைமானி அமெரிக்காவின் ஆளில்லா வான் தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலின் பின்புலத்தில் முழுக்கமுழுக்க இஸ்ரேல்தான் இருந்தது. இஸ்ரேலின் உளவுப்படை அனுப்பிய தகவல்களை வைத்தே சுலைமானியின் பயண விவரங்கள், பயண வழித்தடங்கள் அமெரிக்காவால் பெறப்பட்டன என்று ஈரான் தெரிவித்தது. அதன் பின்னர் அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் நேரடி மோதல்களை ஆரம்பித்தது ஈரான்.

உலக் இலரீ

### அணுவாயுத தேசங்கள்

இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் இருக்கலாம் என்பது உலகின் பொதுமைப்பாடான கணிப்பு. அணுத் தொழில்நுட்பத்தில் கைதேர்ந்த அந்த நாடு அமெரிக்காவிடம் இருந்து எந்நேரத்திலும் தேவையான அளவு அணுவாயுதங்களைப் பெற்றுக்கொள்ளும் என்பதும் அனைவரும் அறிந்ததே. அமெரிக்காவில் அணுவாயுதங்களுக்குப் பஞ்சம் இல்லை. அதேநேரம் இந்த இரு நாடுகளுக்கும் இணையாக தன்னைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈரானும் இறங்கியுள்ளது. அமெரிக்காவுடனான அணு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியுள்ள ஈரான், தற்போது யுரேனியத்தைச் செறிவூட்டும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் மத்திய கிழக்குக்கோ அல்லது உலகுக்கோ நல்ல செய்திகளாகப்படவேயில்லை.

### மாறாத காட்சிகள்

ஈராக், சிரியா ஆகிய இரண்டு நாடுகளும் அமெரிக்காவாலும் அதன் கொள்கைகளாலும் மீண்டெழ முடியாத அளவுக்குச் சல்லடையாக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் தற்போது ஈரானும் இணைந்துவிடுமோ என்பதுதான் தன்னார்வ அமைப்புக்கள் பலவற்றின் அங்கலாய்ப்பு. அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ட்ரம்ப் வெளியேற்றப்பட்டு பைடன் ஆட்சியமைத்துள்ள போதிலும் 'அமெரிக்கா நினைக்காத நேரத்தில் அது தாக்கப்படும். சுலைமானியின் கொலைக்குப் பதிலடி கொடுக்கப்படும்' என்று ஈரான் தெரிவித்துள்ளமையானது ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பதையே கட்டியம் கூறி நிற்கிறது.

# எம் பிள்ளைகள்...





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்துள்ள போதும், மகனின் விடுதலைக்காக பல வழக்குகள் தொடுத்தும் பார்த்தேன். அதற்கும் பயனில்லை. எனது மகனை சென்று பார்வையிட்டு வருவதுதான் எனக்கு சிறு ஆறுதலாக இருந்தது.

இப்போது கொரோனா தொற்று காரணமாக அப்படிப் பார்க்கவும் முடியாதநிலை.

சிறையில் கைதிகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டேன். எனது மகனின் நிலை என்னவென்பது குறித்துத் தெரியவில்லை. நான் சென்று பார்க்கவும் முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். எனது இறுதிக் காலத்திலாவது எனது மகன் என்னுடன் இருக்கவேண்டும் என்பதே எனது ஆசை. கடைசி மூச்சு இருக்கும் வரை எனது முயற்சியை நான் கைவிடப்போவதில்லை. எனது மகன் விடுதலையாவார் என்ற நம்பிக்கையில் தான் தற்போது மதத்தலைவர்களுடன் இணைந்து விடுதலைக்காக முயற்சிகளைச் செய்கிறோம். எமது பிள்ளைகளின் விடுதலைக்காக எத்தனையோ போரட்டங்களை ஏராளமான தாய்மார்களும் மனைவிமார்களும் மேற்கொள்கிறார்கள். அதை அரசு கொஞ்சமாவது கணக்கிலெடுக்க வேண்டும்.

கணவர் சிறையில் உள்ள குடும்பத்தலைவிகள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சமூகத்தில் பெரும் அசௌளகரியங்களுக்குள்ளாகிறார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. கூலி வேலைக்கு சென்றே தங்கள் வாழ்க்கையை கொண்டு செல்கிறார்கள். நாமும் இந்த சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ விரும்புகிறோம். எனது மகனுக்காக நான் எனது உறவுகளிடம் இருந்து விலகி வாழ்ந்து வருகிறேன். அரசியல் கைதியின் தாய் என என்னுடன் பேசுவதற்கும் சிலர் அச்சப்படுகிறர்கள். எனது மகனை மீட்டெடுப்பதற்காகவே நான் தனியாக இருக்கிறேன்.

எமது பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றுவதும் எம்மை வாழவைக்க வேண்டிய பொறுப்பும் நாட்டின் ஜனாதிபதியின் கையில் தான் உள்ளன. அவர் இதை விரைவில் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கிறேன். மேலும் அரசியல் கைதிகளை விடுவிக்க இன, மத ,அரசியல் பேதங்களை மறந்து எல்லோரும் எங்கள் பிள்ளை களுக்காக குரல் கொடுக்க வேண்டும். எமது பிள்ளைகளை விடுவிக்க நாம் நடத்தும் போராட்டங்களுக்கு ஒத்துழைக்கவேண்டும். ■

# தமிழ்க் கட்சிகள்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆறாண்டு காலமாக ஜெனிவாவை உத்தியோகபூர்வமாக கூட்டமைப்பு கையாண்டு வந்தது . இது விடயத்தில் சுமந்திரன் தொடக்கத்தில் தனியோட்டம் ஓட முயற்சித்தார் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. எனினும் டயஸ்போரா அமைப்புகளின் முன்முயற்சி காரணமாகவும், உள்நாட்டில் குடிமக்கள் சமூகங்களின் தலையீடு காரணமாகவும் ஒரு பொது அணுகுமுறைக்குப் போக வேண்டிய நிலைமைகள் கனிந்தன. ஆனால் இந்த உடன்படிக்கை ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. நடந்தது இனப்படுகொலை என்பதனை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டிருப்பதும் அதற்குரிய பரிகார நீதியைக்கேட்பது என்பதில் அது ஏனைய கட்சிகளுடன் உடன்பட்டமையும் ஒரு திருப்பகரமான மாற்றம். கூட்டமைப்புபொதுத் தேர்தலில் பெற்ற தோல்விகளில் இருந்து பாடம் கற்கத் தயாராகிவிட்டது. எனவே அது புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக் கொள்கிறது. ஆனால் நிச்சயமாக இது ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. இது ஒரு சமயோசிதக்கூட்டு. தேவைகருதிய விவகாரமையக்கூட்டு. இனிமேலும் உடனடிக்கு இதுபோன்ற கூட்டுக்களே சாத்தியப்படும். இவ்வாறான கூட்டுகளின் திரட்டப்பட்ட விளைவாக சில சமயம் எதிர்காலத்தில் ஏதும் கொள்கை கூட்டு ஏற்படலாம். ஆனால்இங்கு முக்கியமாகச்சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு மாற்றம் உண்டு. 2013ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயரின் தலைமையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தச்சந்திப்பில் மன்னார் ஆயர் உட்பட கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளும் சம்பந்தரின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். இந்தச்சந்திப்பில்தான் ஒரு தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்குவது என்றும் யோசிக்கப்பட்டது. சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரைப் பார்த்து பின்வரும் தொனிப்பட சொன்னார்.... “பிஷப், நீங்கள் சொல்லுங்கோ. ஆனால் இறுதி முடிவை நான்தான் எடுப்பேன்” என்று. ஆனால் 8 ஆண்டுகளின் பின் கிளிநொச்சி செண்.திரேசாள் மண்டபத்தில் நடந்த சந்திப்பில் திருமலை ஆயர் கண்டிப்பான, சன்னமான குரலில் இடையீடு செய்தபொழுது எந்த ஒரு கட்சித் தலைவரும் அவரைப் பார்த்து சம்பந்தர் சொன்னதைப்போல சொல்லத் துணியவில்லை. தமிழ்த்தரப்பு இறந்த காலத்திலிருந்து பெற்ற படிப்பினைகளின் விளைவா இது? குறிப்பாக தமிழ் அரசியலின் மீது தமிழ் குடிமக்கள் சமூகங்கள் செல்வாக்கு செலுத்தலாம் என்ற ஒரு நம்பிக்கையை இது அதிகப்படுத்தியுள்ளதா? ■



தயான் ஜெயதிலக

# போனால் வராது: பொழுதுபட்டால் கிடைக்காது

○ ந.பரமேஸ்வரன்

அடுத்த மாதம் ஜெனீவாத் திருவிழா ஆரம்பமாகப்போகிறது. வழமை போல் இவ் வருடமும் இலங்கையிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் தமிழர்கள் ஜெனீவாவை நோக்கிப் படையெடுக்கப் போகின்றனர். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலை என தமிழ்த் தேசியவாதிகள் அறிக்கையிடுவது போன்று இலங்கை அரசாங்கம் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் அனைத்தையும் திகதிவாரியாக ஒன்றுவிடாமல் எடுத்துச்சென்று ஜெனீவாவில் சமர்ப்பிக்கிறது. ஆனால் ஜெனீவா செல்லும் தமிழர்களிடம் முள்ளிவாய்க்கால் தொடர்பான ஆவணங்கள் எதுவுமேயில்லை. தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பான தரவுகள், புள்ளிவிபரங்கள் எதையுமே இவர்கள் எடுத்துச் செல்வதில்லை. இவர்கள் இதுவரை முள்ளிவாய்க்கால் தொடர்பான ஆவணங்கள் எதையுமே ஜெனீவாவில் சமர்ப்பித்ததாகவும் தெரியவில்லை. ஏனென்றால் இவர்கள் எவருக்குமே உண்மையான அக்கறையில்லை என்பதை ஈழத்தமிழர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

"கைவீசம்மா கைவீசு "என்றவாறு வெறுங்கையை வீசிக் கொண்டு சென்று வருகின்றனர் .அதுவும் புலம்பெயர் தமிழர்களின் பணத்தில் தான்.

தனது சொந்தப் பணத்திலேயே தான் ஜெனீவாவுக்கு சென்று வருவதாக சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார் இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. இப்படிப்பட்ட தலைமைகள் தமிழர்களுக்கு கிடைத்தமைக்காக தமிழர்கள் பெருமைப்பட வேண்டும். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கும் சுமந்திரன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மூவரிடமும் அல்லது சிவாஜிலிங்கம், அனந்தி போன்றவர்களிடம் கூட முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இனப்படுகொலை தொடர்பான தரவுகள் எவையுமே இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதி யுத்தகளத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் எவையுமே தங்களிடம் இல்லையென்பதை சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் ஊடகவியாளர்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளனர். அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தும் முயற்சியிலும் இதுவரை இவர்கள் ஈடுபட்டதாகவும் தெரியவில்லை. அண்மையில் நடைபெற்ற "அழிக்கப்படும் சாட்சியங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் தமிழர்களிடம் ஆவணப்படுத்தும் வழக்கம் இல்லையெனக் கவலைப்பட்டிருந்தார். ஐயா , நீதியரசரே, வடமாகாண மக்கள் எதற்காக உங்களிடம் மாகாணசபையை ஒப்படைத்தனர். நீங்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கூட ஆவணப்படுத்தும் வேலையை ஏன் உங்களால் செய்ய முடியாமல் போனது? ஸ்ரீலங்கா அரசு உங்களை ஆவணப்படுத்தக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பித்ததா? வடமாகாண சபையின் பதவிக்காலத்தில் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றுமாறு சபை நடுவே அமர்ந்து போராட்டம் நடத்திய சிவாஜிலிங்கமோ அல்லது அதி தீவிர தமிழ்த் தேசியம் பேசும் அனந்தியோ கூட இந்த விடயம் பற்றி ஏன் சிந்திக்கவில்லை.

சிங்கள பௌத்த பேரினவாதம் போடும் பிச்சைகளை போராடிப் பெற்றுக்கொள்ளும் இவர்களால் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்கள் பற்றிய விபரங்களை திரட்ட முடியாமல் போனது துரதிர்ஷ்டமே. நான் பிளேனில் தான் கொழும்புக்குபோவேன் என ஆளுநரிடம் கெஞ்சி விமானப்பயணம் மேற்கொண்ட முதலமைச்சருக்கும், வாகன அனுமதிப்பத்திரத்துக்காக போராடிப் பெற்று வியாபாரம் செய்யும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும், முள்ளிவாய்க்கால் படுகொலைகளை ஆவணப்படுத்த நேரமில்லாமல் போனது "இலங்கை செய்த புண்ணியம்".

சரிஉங்களால் ஆவணப்படுத்த முடியா விட்டாலும், நவநீதம்பிள்ளையும் ,யஸ்மின் சூகாவும் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் விபரங்களை அனுப்புமாறு கோரியபோதாவது யாராவது இதைப்பற்றி சிந்தித்தீர்களா? தமிழ் ஊடகங்களோ அல்லது இணையத்தளங்களோ இவ்வாறு நவநீதம்பிள்ளையும் யஸ்மின் சூகாவும் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் விபரங்களை அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்ற செய்தியையாவது பிரசுரித்தனவா?

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பது சர்வதேசத்துக்குத்தெரியும். திரும்பத்திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருப்பதை விடுத்து ,யுத்தம் முடிந்த பின்னர் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விபரங்களை ஐ,நா,மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பிக்க வேண்டுமென கலாநிதி தயான் ஜெயதிலக கூறியுள்ளார்.

ஒரு சிங்களவராக இருந்து கொண்டு தயான் ஜெயதிலக இவ்வாறு தமிழ்த் தேசியவாதிகளுக்கு ஆலோசனை கூறியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். மிருசுவில் படுகொலை வழக்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலை வழக்கு ஆகியவற்றில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டமை, ஜோசப் பராஜசிங்கம் கொலை வழக்கு தீர்ப்பு போன்ற யுத்தம் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற விபரங்களை, ஜெனீவாவில் முன்வைத்தால் பிரயோசனமாக இருக்குமென தயான் ஜயதிலக சுட்டிக்காட்டியுள்ளார். அதே போல் கன்னியா வெந்நீரூற்று விவகாரம், வெடுக்குநாறி மலை ஆக்கிரமிப்பு, குருந்தூர்மலை விவகாரம் போன்றவற்றையும் ஜெனீவாவில் முன்வைக்கலாம். இந்த விடயங்களை முன்வைத்து, யுத்தம் முடிவடைந்த பின்னரும் இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிட்டவில்லை என்பதை வலியுறுத்தினால் அது பிரயோசனமாக இருக்குமென தயான் ஜயதிலக சுட்டிக்காட்டி யுள்ளார்.

"போனால் வராது; பொழுதுபட்டால் கிடைக்காது" என்று நடைபாதைக் கடைகளில் கூவுவார்கள். அப்படி பொழுதுபட்டால் கிடைக்காத,போனால் வராத இறுதிச்சந்தர்ப்பம் இது. இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை .தயான் ஜெயதிலகாவின் கருத்துக்களையும் ஜெனீவா செல்வோர் கருத்திலெடுப்பார்களா?

■




○ அன்றாடங்காய்ச்சி

# பெஞ்சனியர்களின் அரசியல்

நவீன உலக அரசுகளின் அனுதாபத்தைப் பாருங்கோ. யார் யாரெல்லாம் அரசியல்வாதிகளாக வரலாம் என்பதற்கு எந்த வரையறையும் கிடையாது.(ஒரு சில நாடுகளைத் தவிர) கிரிமினல் குற்றச்சாட்டுக்குள்ளானவர்களில் இருந்து மதகுருமார்கள் வரை தேர்தல்களில் போட்டியிட்டு மக்களின் பிரதிநிதிகளாக வரும் நிலையுள் ளது.

இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் தொடக்கம் சகல தேர்தர்களிலும் பதவியிலிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எவ்வாறு போட்டியிடலாம் என்பது பற்றிய சட்டவிதிமுறைகள் சகல தேர்தல் சட்டங்களிலும் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக, அரசாங்க கந்தோர் ஒன்றில் 'கிளார்க்' வேலை பார்த்தவரோ அரசாங்கப் பாடசாலையொன்றில் 'உபாத்தியாராக' இருந்தவரோ ஏதாவது தேர்தலில் போட்டியிட்டு வென்றால் மாகாண அமைச்சராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ வரலாம். ஆனால் அதற்காக உரிய முறையில் விதிக்கப்பட்ட லீவுகளையோ அல்லது பதவி விலகலையோ அவ்வாறானவர்கள் எடுக்கவேண்டிவரும். ஆனால் அரசசேவையிலிருந்து 'பென்சன்' எடுத்தவர்கள் இவ்வித சட்டவிதிமுறைகள் எதற்கும் உட்படாமல் இலகுவாகத் தேர்தல்களில் போட்டியிடலாம். வென்றால் வயதான முதுமைக்காலத்தில் தெரிவான பதவிக்குரிய கொடுப்பனவுகள் 'ஆளணி, வாகனம், சலுகைகள், செல்வாக்குகள் முதலியவற்றை இந்தப் பென்சன் பேர்வழிகள் அனுபவிக்கலாம்.

முப்பது முப்பத்தைந்து வருடங்களாக 'வெறும் சுற்றுநிருப' நிர்வாகிகளாக, கடிவாளக் குதிரைகளாக "ஒரே பழைய நிர்வாக வண்டில்களை" இழுத்த இவர்களுக்கு- இந்த பெஞ்சனியர்களுக்கு-நிர்வாக இயந்திரத்தில் உள்ள 'பழுதுகளைத்' திருத்தும் புத்தாக்கச் சிந்தனைகள் எழுவதில்லை.

தூரநோக்கு (vision) மற்றும் அதனை அடைவதற்கான பணிப்பாதை நெறிமுறை (misson) இருக்காது. இருந்தாலும் "வெறும் சுற்றுநிருப' நிர்வாகத்துக்குள் அடைபட்டு அடைக்கோழிகளாக வெறும் கூழ்முட்டைகள் மீது உட்கார்ந்து அடைகாத்துக் கொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிடுத்து வெவ்வேறு சுற்றுநிருபங்கள் பிரமாணங்கள் மூலம் 'ரெக்னிக்காக' வெறும் 'சமாளிப்புக்கேஷன்'செய்த முப்பது அல்லது நாற்பது வருடங்கள் 'திருவிளையாடல்களையே அரங்கேற்றுவார்கள்.

அத்துடன் இந்தப் பெஞ்சனியர்களின் முதுமையும், முதுமைக்கால நோய்களும் முற்போக்காக புத்தாக்கச் சிந்தனைகளுடன் இவர்களை இயங்கவிடாது. அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் 'துறைசார் நிபுணர்கள்' என்ற போர்வை போர்த்தி சில பெஞ்சனியர்களை தேர்தல் களத்தில் இறக்க பிரதான கட்சியொன்று முயற்சிக்கின்றதாம். வடக்கில் 'பென்சனியர்களை' தேர்தல்களில் இறக்கிய பின்பு தெரிவாகிய பின்பு அவர்கள் தமது சுயநலங்களையும் சுகபோகங்களையும் நிலைநிறுத்தி வாழ்வதையே மக்கள் கசப்பான அனுபவமாகக் கண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் இளைஞர்கள் போல நடித்து தீவிர வாக்கு வேட்டைக்காக எதையும் முழங்குவார்கள். சொல்லி வேலையில்லை.

# சின்னம்மாவுக்கு என்னாச்சு?




○ மயூ

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நண்பியும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய புள்ளியாக இருந்தவரும், அந்தக் கட்சியின் தொண்டர்களால் 'சின்னம்மா' என்று அழைக்கப்படுபவருமான சசிகலாவுக்கு கொரோனா தொற்றியுள்ளமைதான் தமிழகத்தில் இப்போது பரபர தகவல்.

எதிர்வரும் 27ஆம் திகதி சிறையில் இருந்து சசிகலா மீள்வார் என்ற எதிர்பார்ப்பில் இருந்த அவரது ஆதரவாளர்களுக்கும், குடும்பத்தினருக்கும் இது பெரும் அதிர்ச்சிதான். இதற்குப் பின்னால் சதித் திட்டங்கள் ஏதும் இருக்கலாமோ என்றும் அவர்கள் சந்தேகங்களைக் கிளப்புகின்றனர். உயிர்காக்கும் இடங்களாக இருந்த மருத்துவமனைகளை, அதிகாரத் தரப்புக்கள் இப்போது தங்கள் கொலைத் திட்டங்களை செயற்படுத்தும் இடமாக மாற்றிக் கொண்டுள்ளார்களா என்ற சந்தேகம் இப்போது தமிழக மக்கள் மத்தியில் இருக்கின்றது.

தமிழக முன்னாள் முதலமைச்சர்களான ஜெயலலிதா, மு.கருணாநிதி ஆகியோரின் மருத்துவமனை மறைவுகள் மக்களின் இந்தச் சந்தேகத்துக்கு உரமேற்றுகின்றன. அதிலும்



ஜெயலலிதாவின் மரணத்தில், ஏதோ மர்மம் இருக்கின்றது என்று இப்போதுவரை அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றுச் சிறையில் இருந்த சசிகலா, எதிர்வரும் 27ஆம் திகதி விடுதலையாகவிருந்தார். தமிழகத்தின் சட்டமன்றத் தேர்தல் எதிர்வரும் மாதங்களில் நடக்கவிருந்த நிலையில் அவரது விடுதலை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

அ.தி.மு.கவின் இப்போதைய போக்குக்கு மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பு இல்லை. மத்தியில் உள்ள பா.ஜ.கவுக்கு ஒத்தோடும் போக்கையே முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு கைக்கொண்டு வருகின்றது. ஆனால் ஜெயலலிதா இருந்தபோது கட்சிக்குத் தலைமை தாங்கியபோது இருந்த நிலைமை வேறு. அவர் யாருக்கும் அடிபணியாது இரும்புப் பெண்மணியாகக் கட்சியை தன் கைக்குள் வைத்து வழிநடத்தியிருந்தார். அவர் மறைவுக்குப் பின்னர் கட்சி விடயங்களைக் கையில் எடுத்த சசிகலாவும், ஜெயலலிதாவின் தடத்தில்தான் பயணித்தார். ஆனால் சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு, அவரது அந்தப் பயணத்துக்கு முட்டுக்கட்டை போட்டது. சசிகலா அகற்றப்பட்ட பின்னர், அ.தி.மு.கவின் அடுத்த கட்டத் தலைவர்களான ஓ.பன்னீர்ச்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருக்கு இடையில் பிடுங்கல் ஏற்பட்டு, இப்போது எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருக்கின்றார். ஆனால் இவர்கள் இருவரிடமும், ஜெயலலிதாவிடம் இருந்த கெத்தான தலைமைத்துவப்பண்பு அறவே இல்லை.

நீட் தேர்வு, ஹிந்திக்கு முதலிடம் என்னும் பா.ஜ.க. அரசின் கொள்கைகளால் தமிழக மக்களிடம் இருந்து பா.ஜ.க. வெகுதொலைவில் இருக்கின்றது. பா.ஜ.க. அரசுக்கு பக்கப்பாட்டு பாடுவதையே தமிழகத்தின் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு செய்துகொண்டு இருக்கின்றது என்று விமர்சனங்கள் தமிழக மக்களிடம் இருக்கின்றன.

விரைவில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில்அ.தி.மு.கவின் தாளம் போடும் போக்கு வாக்கு கட்சிக்கான வங்கியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கருதப்படுகின்றது.

இந்த மாதம் சசிகலா விடுதலையாகவிருந்த நிலையில், அவரது வருகையின் பின்னர் அ.தி.மு.க கட்சியின் போக்கில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று அ.தி.மு.க. ஆதரவாளர்கள் நம்பியிருந்தனர். தற்போது பிளவடைந்திருக்கும் அ.தி.மு.க. ஒன்றுபடும் என்றும் அவர்கள் நினைத்தனர். ஆனால் சசிகலாவுக்கு கொரோனாத் தொற்று என்று திடீரென வந்துள்ள தகவல் அவர்களுக்கு ஏமாற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சசிகலாவின் வருகை தங்கள் இருப்புக்கு ஆபத்து என்றுணர்ந்த தரப்புகளால் மேற்கொள்ளப்படும் சதித் திட்டமாகக் கூட இது இருக்கலாம் என்று கூறுகின்றனர் சசிகலாவின் ஆதரவாளர்கள். காலையில் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனா தொற்று இனங்காணப்படாத நிலையில், மாலையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் சசிகலாவுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை பற்றியும் அவர்கள் சந்தேகத்துடனேயே பார்க்கின்றனர்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு கடும் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்கின்றது அவர் சிகிச்சை பெறும் மருத்துவமனையின் நிர்வாகம். அவர் மருத்துவக் கண்காணிப்பில் இருக்கின்றார் என்ற தகவலையும் தந்திருக்கின்றது. ஆனால் இத்தனைக்கும் அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்து அரச மருத்துவமனையிலேயே சிகிச்சை வழங்கப்பட்டு வருவதும் சசிகலாவின் ஆதரவாளர்களிடம் எழுந்த சந்தேகத்தை கொளுந்துவிட்டெரியப் பண்ணியுள்ளது. சசிகலாவின் உடல்நிலையில் ஏற்பட்ட பின்னடைவு இயல்பாக நடந்த திருப்பமா? அல்லது திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட திருப்பமா? என்பது இன்னும் ஓரிரு நாள்களில் தெரிந்துவிடும். ■

# எல்லாம் துறந்த புத்த பிரானுக்கு...



என்ரை எழுபது வருச அனுபவத்திலை ஒரு மனுசனை ஒழுக்க சீலரா வாழ வழிகாட்டின் தேவதூதரிலை எனக்குப் பிடிச்ச 'நம்பர் வண்' ஆள் நீங்கள்தான்.

வெள்ளைக்காரன் எங்கடை நாட்டைக் கைவிட்டிட்டுப் போன அண்டைக்கு உங்களை வைச்சு அரசியல் செய்யச் சிலர் துவங்கினவங்கள். இண்டுவரை அவங்கள் அதைக் கைவிடேல்லை. இன்னும் கூடக் கூடச் செய்யிறாங்களே ஒழியக் குறையேல்லை. சில பிக்குகள் ஒரு பக்கம் எண்டால் வேறை சில அரசியல்வாதியள் மற்றப் பக்கம். சமயத்தை வைச்சு அரசியல் செய்யிற அரசியல்வாதியளின்ரை கூத்துக்கள் தாங்கேலாமல் கிடக்கு.

இந்தத் தொற்று நோய் அமளிக்குள்ளையும் அரசியல் வாதியள் உங்கடை பேரைச் சொல்லித் தமிழ்ச் சனத்தைப் போட்டு, படுத்தாத பாடு படுத்திறாங்கள் எண்டு நினைக்க வயிறு எரியிது. இதை நான் ஆரிட்டைச் சொல்லி அழ?

இந்துக் கோயில் குளங்கள் இருக்கிற சன சந்தடி இல்லாத இடங்களைத் தேடிப்பிடிச்சுப் போய் அங்கை இருக்கிற சிலையளைத் தூக்கி எறிஞ்சுபோட்டு உங்கடை சிலையை வைச்சு பூசை புனஸ்காரம் எல்லாத்தையும் செய்து, அதுக்கை புத்த சமய எச்சங்கள் இருக்கெண்டு சொல்லி ஒரு புதுச் சரித்திரம் எழுத வெளிக்கிடுகினம் எண்டால் பாருங்கோவன்.

அன்பா இரு. பிற உயிரினங்களையும் உனக்குச் சமமா நேசி எண்ட அர்த்தத்தோடை நீங்கள் சொன்ன பெரும் போதனையள் எல்லாத்தையும் செவிமடுக்காமல், நீங்கள் சொன்னதுக்கு விரோதமான செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிற ஒரு சிலராலைதான் உங்களுக்குக் கெட்ட பேர் எண்டு நான் நினைக்கிறன்.

**அவசரமா ஒரு கடுதாசி**

ஆதி சிவன் ஐயனார் கோயில் இருக்கிற இடம் தமிழற்றை எண்டு எல்லாருக்கும் தெரியும். அந்தக் கோயிலைச் சுத்தி வயல் நிலங்களும் காணிகளும் நிரம்பின குமுழமுனை, தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை, மணலாறு, படலைக்கல்லு எண்டு பலகிராமங்கள் இருக்குது. முற்காலத்திலை அந்த இடங்களிலை இரண்டு பழைய புத்த விகாரைகள் இருந்தன எண்டும், அதற்கான ஆதாரம் தங்களிட்டை இருக்கிது எண்டும் சொல்லிக் கொண்டு தொல்லியல் திணைக்களத்தாலை வந்து இப்ப அகழ்வு ஆராய்ச்சியளைச் செய்யத் துவங்கியிருக்கினம். அதுக்கு ஆமிதான் முழு சப்போர்ட்டாம் எண்டும் பேப்பரிலை பாத்தனான். அவையளோடை தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ,படை பரிவாரங்களோட வந்து புத்தசமய விதிப்படி பிரித் ஓதித்தான் விளையாட்டைத் துவங்கி இருக்கினமாம்.


சின்ன வயதுதொட்டு உங்களைப் பாக்கேக்கை எனக்குள்ளை ஒரு கேள்வி வரும்.

ஞானம் கிடைச்ச நாள் தொட்டுக் கண்ணைத் திறந்து பாத்துத் தர்மத்தைப் போதிச்சவரை ஏன் கண்ணை மூடின மாதிரிச் சிலை செய்து வைச்சுக் கும்பிடுகினம் எண்டு .

ஆனால், 1983 ஜுலை மாசம் நடந்த இனக்கலவரத்திலண்டு வீடுகள், கடை கண்ணியளை மண்ணெண்ணையை ஊத்தி எரிக்கிறதையும், தமிழற்றை வீடுகளையும் உடமையளையும் அடிச்சுச் சேதாரப்படுத்திறதையும், இந்துகள் வழிபடுகிற சுவாமி சிலையளை அடிச்சு உடைச்சுத் தூக்கி எறியிறதையும் பாத்த அண்டுதான் நீங்கள் ஏன் நிரந்தரமாக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறியள் எண்டு எனக்கு விளங்கிச்சிது." எண்டைக்கோ ஒருநாள் என்ரை ஆக்கள் என்ரை பேரைப் பாவிச்சு இப்பிடியெல்லாம் அநியாயம் செய்வாங்கள். அந்தண்டு கண்களை மூடி அதை யெல்லாத்தையும் பாக்காமல் இருக்கிறதைவிட அதுக்கு முன்னமே கண்ணை மூடினால் நல்லது. அதாலை பல அநியாயங்களைப் பாக்காமல் தப்பலாம் "எண்டும் நினைச்சிட்டுத் தான் நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறியள் போல..

படிக்காதவங்கள் இப்பிடிச் செய்தால் பரவாயில்லை. மன்னிக்கலாம்.இது படிச்சவையளையும் தங்களைச் சுத்தி வைச்சுக்கொண்டு அமைச்சர்மாரும் சேர்ந்து செய்யினம் எண்டது தான் என்ரை கவலை. இப்பிடியான அராஜகங்களைத் தடுத்து நிறுத்தி உங்களை நம்பிற மக்களை அவையளிட்டை இருந்து மீட்டு அவைக்கு விமோசனம் கொடுக்க வேணும் எண்டதுதான் இந்த அப்பாவி அன்னமுத்துவின்ரை பக்திபூர்வமான வேண்டுகோள்...

அதிபட்சமுள்ள
**அன்னமுத்து.**



மரபுரிமைகளைப் பறைதல்


- வேண்டான் நம்பி

# இலங்கையில் அகழ்வாய்வு ஒரு அறிவியல் ஒழுக்கமா?

2016 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், 'இலங்கையில் பௌத்த தாதுகோபங்களைப் பாதுகாத்தலும் மதத்தேசியவாதமும்' (**Conserving Buddhist Stupas and religious nationalism in Sri Lanka**) எனும் தலைப்பில் சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை ஆற்றிய பேராசிரியர் ஜெகத் வீரசிங்க, எவ்வாறு இலங்கையில் அகழ்வாய்வியல் என்பது அதன் துறைசார் அறிவியல் ஒழுக்கத்திலிருந்து விலகிய 'இனவாத அகழ்வாய்வியலாகக்' (Racist archeology) காணப்படுகிறது என்பதையும், அது எப்படி மதத் தேசியவாதத்தின் சேவகனாயும் சிப்பாயுமாக மாறி அகழ்வாராய்ச்சி ஒழுக்கத்தை இலங்கையில் தொழிற்படுத்துகிறது என்பது பற்றியும் விவாதித்தார். இவ்வகைப்பட்ட ஆய்வு எழுத்துக்களில் எலிசபெத் நிசான்(1989), பிரதீப் ஜெகநாதன் (1995) ஆகியோரது அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட முன்னோடி வாசிப்புக்களும் பிரதானமானவை.
அண்மைக் காலத்தில் நீரா விக்கிரமசிங்கவால் எழுதப்பட்ட 'நிகழ் காலத்தை உருவாக்குதல்: போருக்குப் பிற்பட்ட இலங்கைத் தேசபக்தியில் வரலாறே மரபுரிமையாதல் '(2012) எனுங் கட்டுரையும் முக்கியமானவை.
நேற்றோ இன்றோ அல்ல, ஐரோப்பிய காலனிய ஆட்சியின் கீழிருந்து விடுதலை பெற்ற காலத்திலிருந்தே தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் அகழ்வாய்வு என்பது திட்டவட்டமாக ஒரு அரசியற் கருவியாகும் என்பதுடன், இரத்த ஆறுகளை தேசங்கள் தோறும் திறந்து விடும் கண்ணுக்குத் தெரியாத படைக்கலமும் ஆகும். இன்னும் திருத்தமாகச் சொன்னால், தேசத்தை நிர்மாணம் செய்யும் அதிகாரப் பொறிமுறைக்கான பெருங்கதையாடல்களைக் கட்டமைப்பதற்கான அறிவியலாடை தரித்த தந்திரோபாயமாகவே அகழ்வராய்ச்சி நடைமுறைகள் பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன.
இந்தப் பின்னணியில், பெரும்பாலும் இலங்கை போன்ற நாடுகளில் கடந்தகாலம், வரலாறு, அகழ்வாய்வு, மரபுரிமை போன்ற வேறுபட்ட விடயங்கள் அல்லது துறைசார் ஒழுக்கங்கள் ஒன்றுள் கலந்து குழப்பப்பட்டு பிரையோகிக்கப்படுகின்றன. இது அறியாமை அல்லது துறைசார் தெளிவின்மை காரணமாக நிகழும் குழப்பம் என்பதை விடவும், மேலாதிக்கம் செய்வதற்கான ஒரு பொறிமுறையாகவே நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதே அதிகபட்சம் சரியானது. இதனைத் தொடர்ச்சியாகச் செய்வதன் ஊடாக இச்செயற்பாடு அதிகாரபூர்வமானதாக்கப்படுகின்றது. இதனை இலங்கை இனவாத அரசியலின் விசேட படையணிகளில் ஒன்றாகவே இனங்காணவேண்டி இருக்கிறது. இந்த நிலவரங்களை மேலும் புரிந்துகொள்ள வரலாறு அகழ்வாய்வு - மரபுரிமை என்பன குறித்த அடிப்படைகளை மேலும் சற்று விரிவாகப் பார்ப்பது பயன்தரும்.



கன்னியா வெந்நீர் ஊற்று



இலங்காராமய - அனுராதபுரம் (1900)

**கன்னியா வெந்நீர் ஊற்று**
**இலங்காராமய - அனுராதபுரம் (1900)**

வரலாறு என்பது கடந்தகாலம் பற்றியதுதான் எனினும், நடைமுறையில் வரலாறானது கடந்தகாலத்தில் இருந்து நிகழ்காலம் தனது நிகழ்காலத் தேவைகளுக்க ஏற்ப தெரிவுசெய்து கொண்டவற்றின் தொகுப்பாகும். அதனால்தான் வரலாற்று அறிஞரான றோமிலா தாப்பர் 'அனைத்து வரலாறுகளுமே நிகழ்காலத்திற்குரியன' என்கிறார். அத்தகைய கடந்த காலத்தில் இருந்தான தெரிவுகள் கூட வரலாற்றாசிரியர்களது நோக்குநிலை வேறுபாடுகள் ஏற்ப மாறுபடுகின்றன. இதனால் வரலாற்றை ஒற்றைப்படையாக 'வரலாறு' எனக் கூறாமல் வரலாறுகள் என பன்மைப்பட அழைத்தலே சரியாகும் என வாதிடுவர். இத்தகைய பின்னணியில் வரலாற்றை அதிகாரபூர்வமான ஒற்றைப்படையாக்கம் செய்தல் என்பது அதிகாரம் செய்வதற்கான பொறிமுறையும் பன்மைத்துவம் வேறுபாடுகளை ஏற்றல் முதலிய ஜனநாயக நடைமுறைகளுக்கான மறுப்புமாகும். இதனை ஜனரஞ்சக வெளிகள் தொடக்கம், பாடப்புத்தகங்கள் வரை அடிப்படைவாத அரசுகள் செய்தலுடாக அவற்றை சட்டபூர்வமான தாக்குவதுடன் சமூக நினைவுகளில் இருந்து தமது சித்தாந்தத்துக்குப் போட்டியான தடயங்களை நீக்கி விட முற்படுகின்றன. அவ்வகையில் கடந்த காலம் பற்றிய உரையாடலின் ஒரு பாதை வரலாறு சார்ந்தது என்றால் அதனுடைய இன்னொரு பாதை மரபுரிமை ஆகும். ஆகவே வரலாறு போலவே கடந்த காலத்தைக் கைப்பற்றும் அதிகாரப் போட்டியில் மரபுரிமையையும் முக்கியமானதாகிறது. அது இலங்கையில் மரபுரிமையையும் மிகப்பெரிய அரசியற் சூதாட்டக் களமாக்குகின்றது.
அவ்வகையில், பேராசிரியை. நீரா விக்கிரமசிங்க போன்ற புலமையாளர்கள் இலங்கையில் மரபுரிமை,வரலாறு, அகழ்வாய்வியல் ஆகிய ஒழுக்கங்கள் எப்படி அவற்றின் துறைசார் தனியொழுக்கம் முறையியல் என்பனவற்றை முனைமழுங்கச் செய்து அரசியல் அபிலாசைகளுக்கான பொறிமுறையாக அவை மாற்றப்படுகின்றன என்பது பற்றிச் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வகையில், மரபுரிமை வரலாறு முதலானவற்றுக்கு இடையிலான பொதுமையான அம்சங்களை மேலும் கூராக்கி, ஒன்றுள் ஒன்றாக்குவதன் ஊடாகவும், அதனூடாக அவற்றுக்கிடையான அடிப்படையான வேறுபாடுகளை மறைத்து அல்லது பின்தள்ளி, அவ்விரண்டும் ஒன்றே போன்ற ஒரு தோற்றப்பாட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல் மூலமாக எவ்விதம் பேரினவாத சிங்கள் பௌத்த மைய அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது என்பது பற்றி அவர் தனது கட்டுரையில் விவாதிக்கிறார்.
வரலாறு என்பது கடந்த காலத்தின் தெரிவு செய்யப்பட்ட சம்பவங்களின் கூட்டுமொத்தமாயினும், அதே சமயம் அது வரலாற்றாசிரியர்களது கருத்துநிலைக்கேற்ப மாறுபடும். தெரிவுகளால் ஆனதாயினும் அவற்றுக்கான சான்றாதாரம் என்பது இன்றியமையாத ஒரு முன் நிபந்தனை ஆகும். அதுவே அதனை விஞ்ஞானபூர்வமானதாக்கும் முதல் அடிப்படையுமாகும். ஆனால், மரபுரிமை என்பது அதிலிருந்து அடிப்படையில் மாறுபட்ட ஒரு கருத்தாடலாகக் காணப்படுகிறது. மரபுரிமையானது, காலங்காலமாக குறிப்பிட்ட சமூகத்திடையே அவர்களது கடந்தகாலத்தில் இருந்து கைமாற்றப்பட்டு வருவதாயினும் அடிப்படையில் அது சமூக வழக்காறு மற்றும் நம்பிக்கை (Customs and belives) சார்பானது. அதனால் தான், டேவிட் லொவன்தால் 'மரபுரிமை என்பது சரிபார்க்கப்படக் கூடிய உண்மை அன்று: பதிலாக பற்றுறுதியடன்கூடிய நம்பிக்கை' (Heritage counts "not on checkable fact but credulous allegiance") என்கிறார். ஆனால், இலங்கையைப் பொறுத்த வரை வரலாற்றுத் தடயம் ஒன்றைப் போலவே மரபுரிமை அதன் அரசியற்தேவைகளை கருத்திற் கொண்டு நடமாட வைக்கப்படுகிறது. அதன் விளைவுகளாக சிறுபான்மை இனத்தவரது மரபுரிமைச் சின்னங்கள்ளை அழித்தல் கவனியாது விடுதல் கவனிப்பது போலப் பாசாங்கு செய்து சிறுகச்சிறுக அழியவிடுதல், சொந்தங் கொண்டாடுதல் அல்லது கைப்பற்றுதல் உட்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறு முன்னெடுக்கப்படுவது மட்டுமின்றி மரபுரிமைச் சின்னங்களுக்கு வரலாற்றுத் தடயப் பெறுமதியை எந்த வரலாற்று சான்றாதாரமும் இன்றி வழங்குதல் முதலியனவும் மேலாதிக்கத்துக்கான பரந்துபட்ட தேவைகள் கருதிச் செய்யப்படுகின்றன.
அடுத்தகட்டத்தில் அகழ்வாய்வு இத்தொடர் சங்கிலியில்; சிறப்பு முகவராக மாற்றப்படுகிறது . வரலாற்றைப் போலவே அகழ்வாய்வும் கடந்தகாலம் பற்றியதுதான் எனினும், அகழ்வாய்வு என்பது முழுக்க முழுக்க தான் கண்டுபிடித்த தொல் எச்சங்கள் சார்பானது. அதனது எடுத்துரைப்பானது முழுக்க அவற்றில் இருந்து முகிழ்ப்பதுதான். அதேசமயம் வரலாற்று எழுத்தைப் பொறுத்தவரை அகழ்வாய்வு எச்சங்கள் அதன் அடிப்படைத் தடயங்களில் ஒன்றாக அமையும் அதேவேளை வரலாற்றை உரைக்க வல்ல இன்னபிற தடயங்களும்; சேர்த்தே அதனைக் கட்டப்படுகின்றன. ஆனால், வரலாற்றுக்கான தடயங்களுள் ஒன்றென்ற தொல்பொருளியலது அடிப்படை தடம் மாறி இலங்கையில் வரலாறானது தொல்பொருளியல் மேலாதிக்கத்துக்கு உட்பட்டதும், அதற்கு சேவகம் செய்யும் ஒரு துறையாகவும் பின்தள்ளப்பட்டுள்ளது. இவ்விருதுறைகளுக்குள்ளும் காணப்படக்கூடிய நெருக்கமான பொது அம்சங்களது பின்னணியில் இந்தத் தடம் மாறுதல் கவனிக்கப்படாமல் விடப்படுகிறது. அது மட்டும் இன்றி இலங்கையிலுள்ள பெருமளவு அரும்பொருளகங்களும் தொல்பொருள் அரும்பொருளகங்களாகவே இருப்பதையும் கவனிக்க வேண்டும். ஒருவகையில் அது காலனிய கால நிலவரங்களது தொடர்ச்சியே எனினும் அதன் சமகாலப் பேணுகை, விரிவாக்கம் என்பதனுள் இலங்கையின் பேரினவாத அரசியல் தேவைகளைப் பேணுவதற்கான பலமான அடிப்படைகளும் காணப்படுகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது.
எவ்வாறு மரபுரிமைகளுக்கு வரலாற்று பெறுமானம் ஏற்றப்படுகிறதோ- அவ்வாறே மரபுரிமை இடங்களும் தொல்லியற் தலங்களாகவும், அகழ்வாய்வு இடங்களாகவும் மாற்றப்படுகின்ற சுவாரசியங்களும் இலங்கையிற் காணப்படுகின்றன. இது வெறும் துறைசார் குழப்பம் என்று மட்டும் கொள்ள முடியுமா? அல்லது இலங்கையின் பேரினவாத அரசியல் இயந்திரத்தின் மிகவும் திட்டமிடப்பட்ட செயற்பாடாகக் கொள்ளப்படவேண்டியதா?
இந்தச்செயற்பாட்டுப் பொறிமுறையின் உச்சம் வரலாறு - மரபுரிமை - அகழ்வாய்வு என்பனவற்றின் சிங்கள பௌத்தமயமாக்கம் ஆகும். அகழ்வாராய்ச்சிக்குரிய தொல்லியற் தலம் ஒருவேளை பண்டைய பௌத்த பயில்வுக்குரிய ஒரு இடமே ஆயினும், தற்போது அது விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளுக்கு உரிய மையமே ஒழிய பண்டைய சமய வழிபாட்டை ஆரம்பிப்பதற்கான ஓரிடமல்ல: அவ்வாறான சமய ரீதியான திருப்பம் மெய்யான வீஞ்ஞானபூர்வமான ஆய்வு நகர்வுகளுக்கான மத நம்பிக்கையின் பாற்பட்ட தடைகளை ஏற்படுத்துவதுடன், அவ்விடத்தை வரலாற்று ரீதியான காலக் குழப்பங்களை (Problems of periodization) உடைய இடமாக்கும் செயற்பாட்டையும் குறிப்பாக எதிர்காலத்துக்கு விட்டுச் செல்லும்
சுருக்கமாகச் சொன்னால் இலங்கையில் அறிவியல் அடிப்படைகளைக் கொண்ட வரலாறு - அகழ்வாய்வியல் மரபுரிமைகள் போன்ற துறைசார் ஒழுக்கங்கள் இனவாதத்தால் மாற்றியமைக்கப்பட்ட ஒரு அரசியற் புராணிகமாக மாற்றப்பட்டுள்ளதுடன், அவை யுத்த களத்தில் நிற்கும் சிப்பாய்க்கு நிகரான வலுவோடும், தேசபக்தியோடும் மரியாதை செய்யப்படும் ஒன்றாக்கப்பட்டுள்ளது. சிறுபான்மைச் சமூகங்களின் நோக்குநிலையில் இந்நடவடிக்கைகள் யாவும் அவர்களைத் மிக வேகமாகவும், ஆழமாகவும் தேசத்தின் பிறத்தியார்கள் ஆக்குகிறது

# வெரிக்கோஸ் நோயை குணப்படுத்த முடியுமா?

## நலம் அறிய...

**1** **வெரிக்கோஸ் நோயை குணப்படுத்த வழிகள் உள்ளனவா? அதைக் குணப்படுத்தினால் பக்க விளைவுகள் ஏற்படும் என்பது உண்மையா?**


*கலைச்செல்வி, இணுவில்.*



மருத்துவர்
ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா
மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

வெரிக்கோஸ் தமிழில் சுருள்சிரை நாளங்கள் என்று அழைக்கப்படும். இது கடுமையான வலியை ஏற்படுத்தாத நோய் என்பதால் ,பெரும்பாலும் இறுதிக் கட்டங்களிலேயே நோயாளி வைத்தியரை அணுகுவது வழமை. இருபாலாருக்கும் ஏற்படும் பிரச்சினையாயினும் , ஒப்பீட்டளவில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்!

- தொடைக்கு கீழ்/முழங்கால்களுக்கு பின்புறமாக நரம்புகள் முடிச்சுகள் போல தென்படும். புடைத்துக் கொண்டு காணப்படும். சிலவேளைகளில் கடும் நீலநிற நிறமாற்றம் கூட ஏற்படும்.
- பாதங்களில் இலேசான வீக்கம் உண்டாகும். (ஓய்வாக இருக்கையில் குறைவாக இருக்கும்)
- சிலவேளைகளில் அரிப்பு ஏற்பட்டு, சொறிவதால் கால்களில் புண் உண்டாகி நீண்டகாலம் மாறாத புண்களாகக் காணப்படும்.



Normal vein
Varicose vein

**1. வயோதிபம் (இரத்த நாளங்களின் வால்வு நலிவடைதல்)**
**2. பரம்பரை**
**3. உடற்பருமன் அதிகரித்தல்**
**4. நீண்டநேரம் நிற்கும் / இருக்கும் தொழிலாளர் (உதாரணம்: ஆசிரியர், கண்டக்டர்)**
**5. கர்ப்பகாலம்**
**6. மலச்சிக்கல் - நீண்டகாலத்துக்கு**

மேற்கூறியவை உங்களுக்கு வெரிக்கோஸ் ஏற்பட தூண்டுதலாக விளங்கும் காரணிகள். (Risk foctors) இங்கு அடிப்படைக்காரணம் இரத்த நாளங்களில் குருதியமுக்கம் அதிகரிப்பதேயாகும்.

எமது உடலின் அசுத்த இரத்தத்தை உடலின் அனைத்துப் பாகங்களிலுமிருந்து இதயத்துக்கு கொண்டு செல்வது நாளங்கள் (Veins) ஆகும்.
கட்டமைப்பில் ,இரத்தத்தை மேல்நோக்கி செலுத்துவதற்கும் , கீழ் நோக்கி வருவதை தடுப்பதற்குமான பொறிமுறை காணப்படுகிறது. இதற்கு வால்வு என்று பெயர். இவ்வால்வ்வின் பணியில் குறைபாடு ஏற்படும்போது உடலின் கீழ்ப் பகுதியிலுள்ள இரத்தம் இதயத்துக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டு ,தேக்கநிலை ஏற்பட்டு (Pooling of blood) இரத்த நாளங்கள் புடைத்து வீங்குவதை வெரிக்கோஸ் என்கின்றோம்.
'வெரிக்கோஸ் வெயின்' பிரச்சினைக்கு 'நிரந்தர' தீர்வு இல்லை என்பது ஒரு கசப்பான உண்மை. (Duplex Scan) -டுப்லெக்ஸ் ஸ்கான் செய்து பார்த்த, எந்த இடத்திலுள்ள இரத்த நாள வால்வு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் துல்லியமாக அறிந்து மேலதிக சிகிச்சை அளிப்போம். வெரிக்கோஸ் உள்ள இடங்களில் ஆறாத புண், கடுமையான நிறமாற்றத்துடன் கூடிய தோல்தடிப்பு ஏற்படுகையில், அறுவைசிகிச்சை செய்ய நேரிடலாம். தற்பொழுது லேசரினாலும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அறுவைச் சிகிச்சை செய்த பின்பும் உரிய வாழ்வியல் நடைமுறை மாற்றங்களை (Life style modification) வைத்தியரின் அறிவுரைப்படி மேற்கொள்ளாவிடின் மீண்டும் இந்நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

Compression Stockings : இறுக்கமான சொக்ஸ் (பிரத்தியேகமான, மருந்தகங்களில் கிடைக்கும்) அணிதல், தலையணையிலோ, ஓய்வாக இருக்கும்போதோ காலை உயர்த்தி வைத்திருத்தல் (Limb Elevation) போன்றவை வீட்டில் நீங்கள் வெரிக்கோஸ் நோயாளியாயின் செய்யக்கூடிய செயற்பாடுகள்.

### மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்

இது இரத்தஓட்டம் சம்பந்தப்பட்ட நோய். உங்கள் இரத்த ஓட்டத்தில் ஏற்படும் பாதிப்பு உங்கள் கால்களை செயலிழக்கச் செய்யும்வரை செல்லலாம். எனவே அலட்சியமின்றி, ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவரை நாடினால் அறுவைச் சிகிச்சையிலிருந்து தப்பிக்கலாம். !!!

**அடுத்த கேள்விக்கான பதில், வெரிக்கோஸ் நோயைக் குணப்படுத்துவதால் உங்களுக்கு எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படாது.**






**2** **குடிநீரை கல்சியம் நீக்கி குடிக்க சொல்கிறார்கள். ஆனால் சுத்திகரிக்கப்பட்ட நீரில் (மினரல் வோட்டரில்) இயல்பாக நீரில் இருக்கக்கூடிய சத்துக்கள் இருக்காது என்கிறார்கள். இது தொடர்பில் விளக்கமும் தீர்வும் தர முடியுமா?**

*துஸ்யந்தன், கரைதுறைப்பற்று.*

இந்தக் கேள்வியில் சில குழப்பங்கள் இருக்கின்றன.
முதலில், சுத்திகரிக்கப்பட்ட நீர் என்பது டிஸ்ட்ரில் வாட்டர் (**Distilled Water**) என்பதையே குறிக்கும். இதனை அருந்துவது பயனற்றது/ தேவையுமில்லை. இதில் எந்தவித சத்துக்களோ கனியுப்புக்களோ இல்லை. இது கார்களுக்கும், மீன்தொட்டிகளுக்கும்,ஸ்றீம் அயர்ன் பொக்ஸில்( Steam Irons) உடுப்பை அழுத்தும்போதும் பயன்படுத்தப்படும் ஒன்று.
அடுத்தது,மினரல் வாட்டர் (**Mineral Water**). இது சாதாரணமாக போத்தலில் அடைத்து விற்கப்படும் குடிநீர். இதில் சகல கனியுப்புக்களும் சேர்க்கப்படுகின்றன. இதில் கிருமி மட்டுமே நீக்கப்படுகிறது. (**Reverse Osmosis** பாவிக்கப்படுகிறது) வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் சுத்திகரிக்கப்பட்ட நீரில் (டிஸ்டில்) கனிமங்களை தேவையான அளவுகளில் கலந்து தயாரிக்கப்படுவதே மினரல் வாட்டர். (**Distilled water + minerals = Mineral water**)
இது உடம்புக்கு உகந்தது. ஆரோக்கியமானது.

● மௌனா

## மணிக் கதை



### கர்மயோகம்

பூஜை அறை,
பக்திப் பரவசத்துடன் ஆன்மா லயப்படுமளவுக்கு ரம்மியமான சூழல் . தெய்வங்களின் படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபச்சுடரில் அருள் முறுவல் காட்டிக் கொண்டிருந்தன.
சாம்பிராணிப் புகை மேகக்கோலம் போட்டது. ஊதுபத்தி எரிந்து உதிர்ந்தபடி சுகந்தம் வீசிக் கொண்டிருந்தது.
கற்பூர ஜோதியின் சுடரில் தெய்வீக அசைவு.
தீபம்...
சாம்பிராணி...
ஊதுபத்தி....
கற்பூரம்....
என அனைத்துமேதீக்குளித்துக் கொண்டு தெய்வார்ப்பணம் ஆகிக் கொண்டிருந்தன.
எரிந்தும், ஒளிர்ந்தும், புகைந்தும் நாங்கள் தியாக வேள்வி ஒன்றை நடத்திக் கொண்டிருப்பதாக அவைகளுக்குள் ஒருவகையிலான கர்வம்.
பக்தியோகமா, கர்ம யோகமா கிருத்தியாக வேள்வியின் மூலாதாரம்?
நேரம் காலமாகிக் கொண்டிருந்தது.
தீபம் எண்ணை தீய்ந்து கருகி மணத்தது.
ஊதுபத்தியின் உதிர் சாம்பலில் வாசமில்லை...
சாம்பிராணி புகைந்த இடத்தில் எஞ்சிக் கிடந்தது கரித்துண்டுகள் மட்டுமே!
கற்பூரம் ஒளிர்ந்து கொண்டிருந்த தட்டில் கரியும் மெழுகுமே மிஞ்சிக் கிடந்தன.
கர்வபங்கம் நடந்து முடிந்தது போல்....
பணி முடிந்ததா? முடிக்கப்பட்டதா?
தூரத்தே மூலையில் இவையனைத்தையும் தீக்குளிக்க வைத்து தெய்வார்ப்பணம் ஆக வைத்த தீக்குச்சிகள் சில கருகிக் கிடந்தன.

அனுப்ப வேண்டிய முகவரி!

**மாணவர்களே!**
நீங்களும்
அனுப்பலாம்
உங்கள்
கைவண்ணங்களை

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
என்ற எண்ணுக்கும் அனுப்பலாம்.






## பிஞ்சு தூரிகைகள்




யோ.தமிழரசன்,
தரம்-05
SOS சிறுவர் கிராமம்,
யாழ்ப்பாணம்.




கனிஷா வோல்டர் மயூரன்,
தரம்-10B
யா/ கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலயம்.



எஸ்.அனுஷியா,
தரம்-05
SOS சிறுவர் கிராமம்,
யாழ்ப்பாணம்.




எ.எப்சியா,
தரம்-09
யா/நல்லூர் ஸ்தான
சி.சி.த.படசாலை.
SOS சிறுவர் கிராமம்

# இயற்கையைக் காப்போம்!

முன்னொரு காலத்தில் ஒரு தேசத்தை இராஜ சேகர மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய ஆட்சி அந்தத் தேசத்தின் பொற்காலம் எனலாம். அந்த நாட்டு மக்கள் காடுகளை அழித்து தமது குடியேற்றத்துக்கு பயன்படுத்தியமை நாட்டுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக் காரணமாயிற்று. இராஜசேகர மன்னன் இதையறிந்து மிகவும் வேதனைப்பட்டான். ஒரு மன்னனின் கடமை மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்வதே என்பதை மக்கன் நன்கறிந்திருந்தன. ஆகவே மன்னன் இதைப் பற்றி மக்களிடம் தெளிவுபடுத்தினான்.

ஆனால் மக்கள் மன்னனது அறிவுரையைக் கேட்டு நடக்கவில்லை. ஒருவருக்கு சொல்லிப் புரிய வைப்பதைவிட அனுபவ ரீதியில் புரிந்து கொள்வதே நிலையானதும் சிறந்ததும் என மன்னன் நினைத்து அமைதியாக இருந்தான். மக்களின் இவ்வாறான நடத்தையைக் கண்டு இயற்கைத் தாய் சும்மா இருப்பாளா? கோடை காலம் நெருங்கியது. மக்கள் தமது உறையுளை விட்டு வெளியில் சென்றால் கால் கூட வைக்க முடியாத சூடு. அப்படி கதிரவன் வானில் சுட்டெரித்து கொண்டிருந்தான். நீர்நிலைகளில் நீர் குறைந்து வந்தது. குளிர்மைக்கு மரங்கள் இல்லை. அவ்வாறு மக்கள் பட்டபாட்டைச் சொல்லவே தேவையில்லை. இராஜசேகர மன்னன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காடுகளைப் பாதுகாப்பதன் அவசியத்தையும், நீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என மக்களிடம் விளக்கிக் கூறினான். இதைப் புரிந்து கொண்ட மக்கள் காடுகளை உருவாக்கினார்கள்.

வீதியோரம், பாதையோரம், வெட்டவெளியாக காணப்பட்ட அனைத்து இடங்களிலும் பயன்தரும் மரங்களை நட்டார்கள். தேசம் செழிப்பாக பூத்துக் குலுங்கியது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த இயற்கைத் தாயின் ஆனந்த கண்ணீர்த் துளிகள் மழையாய்ப் பொழிந்தது.

ஆகவே மாணவர்களாகிய நாம் இன்றிலிருந்து ஆளுக்கொரு மரம் நடுவோம். முன்னோரின் உழைப்பை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். எமது உழைப்பை எதிர் காலம் அனுபவிக்கட்டும்.

**மு.பிரியங்கா**
தரம்9 ,யா/இந்து மகளிர் கல்லூரி

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்



இயந்திரமயமாக ஓடிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு தடையாக அமையும் ஒன்று நோய். நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். எத்தனை செல்வங்கள் இருந்தாலும் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வதே பெருஞ்செல்வம். எவ்வளவு பணம் இருந்தாலும் ஒரு நோய் இருந்தால் அந்தப் பணத்தால் வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? அன்றைய மனிதர்கள் நூறு வயது வரை நோயின்றி வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களது உணவுப் பழக்கங்களும் உடலுழைப்பை பயன்படுத்தியமையும் ஆகும். அவர்கள் தமக்குத் தேவையான உணவைத் தாமே பயிரிட்டனர். அவற்றில் எந்தவொரு இரசாயனமும் இருக்கவில்லை. அவர்கள் தமது உடலையும் அவர்களைச் சார்ந்த சூழலையும் சுத்தமாக வைத்திருந்தனர். அதனால் அவர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இன்றோ மூன்று வேளையும் உணவைப்போல் மருந்தை உண்டுகொண்டு இருக்கிறார்கள் மனிதர்கள். ஒரே ஒருவருக்கே எவ்வளவு நோய்கள்? அதற்குக் காரணம் உண்ணும் உணவுகள், பயிர்களோடு கலந்த இரசாயனங்கள், மனஅழுத்தம் மற்றும் சூழல் மாசு என்பவையே இன்றைய உணவின் பெயர் துரித உணவு. இவ்வாறான உணவு வகைகளை உண்பதால் எமக்கு நோய்கள் ஏற்படும். இன்று பலர் உடற்பயிற்சி செய்யவும் மறந்து விட்டனர்.

நாம் எமது உடலை நோயில்லாமல் ஆரோக்கியமாகப் பேண இரசாயனம் அற்ற சிறந்த உணவுகளை உட்கொள்ளல், உடல் சுத்தத்தைப் பேணல், தினமும் உடற்பயிற்சி செய்தல், நல்ல தூக்கத்தையும் ஓய்வையும் பெறல், சுற்றுச் சூழலை தூய்மையாகப் பேணல் மற்றும் மனதை ஒரு நிலைப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். "மனமுண்டானால் இடம் உண்டு", விருப்பத்தோடு இவற்றைமேற்கொண்டால்நோயற்ற, ஆரோக்கியமான வாழ்வு வாழலாம். எனவே, "நோய்க்கு இடம் கொடேல்"

**லி.லக்சிகன்**, தரம்9,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
**அங்கத்துவ இலக்கம்: 012**

# மயில்

- மயில் அழகான பறவை.
- ஆண் மயில் தோகை விரித்தாடும்.
- மயில் இந்தியாவின் தேசியப்பறவை.
- மயில் மழைக் காலங்களில் அடிக் கடி ஒலி எழுப்பும்.
- மயில் முருகனின் வாகனம் ஆகும்.

**சு.அஸ்மிகா**, தரம்1
அங்கத்துவ இலக்கம்151
வவு/ நெளுங்குளம்
கலைமகள் மகா வித்தியாலயம்



# மாணவர் கழகம்



195

பெயர்: பிரகஷ்னி கணேசநாதன்,
முகவரி: 886, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
பி. திகதி: 07.12.2010
பாடசாலை: யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



196

பெயர்: பாஸ்கரன் பிரவீனா
முகவரி: 49/1, திருவையாறு, கிளிநொச்சி.
பி. திகதி: 04.06.2015
பாடசாலை: கிளிநொச்சி மகா வித்தியாலயம்.



197

பெயர்: சதானந்தம் அகப்பிரியன்,
முகவரி: 69/ அனிஞ்சியன்குளம், மல்லாவி.
பி. திகதி: 2011.08.20
பாடசாலை: மு/அனிஞ்சியன்குளம் த.க.வி.



198

பெயர்: பானுகோபன் வைஸ்ணவி
முகவரி: 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
பி. திகதி: 22.08.2012
பாடசாலை: சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்.



199

பெயர்: சரோஜன் அபிநாஷ்
முகவரி: குடத்தனை கிழக்கு, குடத்தனை.
பி. திகதி: 04.12.2012
பாடசாலை: குடத்தனை அ.த.க.பாடசாலை.



200

பெயர்: ச.மாயோன்,
முகவரி: வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.
பி. திகதி: 26.10.2011
பாடசாலை: யாழ்ப்பாணக் கல்லூரி.

சஞ்சீவி

## மாணவர் கழகம்


1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
sanjeevi@uthayan.com

# சொற்சிலம்பம் போட்டி 31



அனுப்புபவர் பெயர்: ..............................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................
கையொப்பம்: ..............................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.சூளுரை, 2.மனிதனை நன்னெறியில் நெறிப்படுத்த உருவானது, 6.இராசிகளில் ஒன்று, 7.உலகம், 8.வாழ்க்கை ஆரம்பம், 10.உண்ணுமாறான ஏவல், 12.மரம், 13.நட்நத்திரங்களுள் ஒன்று, 16.இந்தத் திதியில் நல்ல காரியங்களைச் செய்வதோ தொடங்குவதோ நல்லதல்ல, 18.கப்பல்களின் தரிப்பிடம், 20.வயோதிபம், 22.ஒன்றைப் பயிலுமாறான ஏவல், 24.உயரத்திலிருந்து கீழே பாய்தல், 25.ஒரு ஆபரண வகை, 26.யுகமொன்றின் பெயர்

## மேலிருந்து கீழ்

1.சேற்று நிலம், 2.முக்கனிகளில் ஒன்று, 3.இளைய சகோதரன், 4.வம்சம், 5.விளக்கின் திரியை அணைக்குமாறான ஏவல், 7.தவறு, 9.உலோபி, 11.பச்சிளம் குழந்தை, 12.யோகிகளுக்கு சிறப்புத் தருவது, 14.ஒரு மரவகை, 15.கப்பம், 16.பிரதி, 17.பாக்குத் தருவது, 19.உச்சி, 21.வணங்குமாறான ஏவல், 23.திறல் பராக்கிரமம்

### சொற்சிலம்பம் போட்டி 29 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.மாதாமாதம், 5.சாவி, 6.சித்தம், 7.பாய, 8.கதாப்பிரசங்கி, 11.காண், 12.துறவி, 14.மலடு, 15.கர்ப்பகாலம், 17.புத்தர், 19.திரு, 20.துணி, 21.தசை

**மேலிருந்து கீழ்**

1.மாசிகம், 2.தாத்தா, 3.மாதப்பிறப்பு, 4.தம்பி, 5.சாயங்காலம், 7.பாச, 9.ரதி, 10.கிண்டு, 12.துர், 13.விபத்து, 14.மலர், 15.கத்தி, 16.காதணி, 18.பசை

**சொற்சிலம்பம் போட்டி இல.29**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**30.01.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 29இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ச.ஜீவசோதி**
வைத்திய விடுதி, பிரதேச வைத்தியசாலை, வேலணை

**2 ஆம் பரிசு**
**திருமதி.ம. திருநாவுக்கரசு,**
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

**3 ஆம் பரிசு**
**க.ஜெயானந்தன்**
83/16 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**செல்வி ச.சோபிகா,**
இல.6 டாக்டர் எ.சுப்ரமணியம் வீதி,
கந்தரோடை..

**5 ஆம் பரிசு**
**ச.ஜசிந்தன்**
இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி

அபிவிருத்தி என்றொரு தரப்பும், அரசியல் உரிமை என்றொரு தரப்புமாக இரண்டு வழிகளில், இரண்டு வார்த்தைகளில் இரண்டு அடையாளப் படுத்தல்களில் தமிழ் மக்களுடைய அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. இரண்டு தரப்பும் ஒன்றை ஒன்று பழித்துக்கொண்டும் மறுத்துக் கொண்டும் மக்களிடம் வேலை செய்கின்றன. ஆனால் வேடிக்கை என்னவென்றால், இரண்டு தரப்புகளுக்கும் குறிப்பிட்டளவு தொகை மக்கள் ஆதரவளிக்கிறார்கள்.

# அரசியலும் அபிவிருத்தியும்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

ஒரு காலம் “விடுதலை அரசியலே வேதம். அதற்கான போராட்டமே முக்கியமானது” என்று உச்சத் தொனியில் முரசறைவ தைப்போல வாதிட்டுக் கொண்டிருந்த நண்பர் ஒருவர், அண்மைக்காலமாக “இனி அபிவிருத்தியே தேவை. அதுவே சரிப்படும். இல்லையென்றால் நாம் இன்னும் பலவீனப்படுத்தப்பட்டுத் தோற்கடிக்கப்படுவோம். நான் அரசியலைப் பற்றிக் கதைப்பதையும் விட அபிவிருத்தியைப் பற்றியே கதைக்க விரும்புகிறேன்” என்று சொல்லத் (பாடம் நடத்த) தொடங்கியிருக்கிறார்.

இது உங்களுக்கும் புதிதல்ல. எனக்கும் புதிதில்லை. இப்படி ஆயிரம் குரல்களைக் கேட்டிருப்பீர்கள். இந்த மாதிரிப் பலரைக் கண்டிருப்பீர்கள்.

ஆகவே, இதொன்றும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்காது. கவுண்டமணி சொல்வதைப்போல “அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா” என்று கடந்து சென்றுவிட வேண்டியது தான் என்று நீங்கள் யோசிக்கக்கூடும். ஆனால், அப்படிக் கடந்து சென்று விடக்கூடாது. செல்லவும் முடியாது.

அரசியலிலும் வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. அது தவிர்க்க முடியாத ஒன்றே. மாற்றம் நிகழாமல் எதுவுமேயில்லை. அப்படி நிகழவில்லை என்றால்தான் பிழை. அது தேக்கமாகி விடும். தேக்கம் வளர்ச்சியின்மையையே குறிக்கும். ஆகவே வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்றால், நாம் மாற்றத்தை உள்வாங்கியே ஆக வேண்டும்.

ஆனால், அந்த மாற்றம் சரியானதாக, நேர்மையானதாக, அடிப்படைகளை உடையதாக, நியாயமானதாக இருக்க வேண்டும். அதையே கால மாற்றம் என்கிறார்கள். கால, தேச வர்த்தமானங்களை உள்வாங்கிய மாற்றம் அது. பதிலாக சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரிக் குத்துக் கரணம் அடிக்கும் தலைகீழ் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. தனிப்பட்ட நலன்களுக்காக நியாயப்படுத்தல்கள் ஏற்புடையதல்ல. அப்படி இருக்குமானால் அது மாற்றமாக - வளர்ச்சியாக, முன்னேற்றமாக இருக்காமல், ஏமாற்றமாக - எதிர்மறையாக - வீழ்ச்சிக்குரியதாகவே அமையும்.

இதனால்தான் மாற்றம் என்ற சொல்லாடலைக் குறித்துக் குழப்பமும், அதனையிட்ட சந்தேகங்களும் மக்களுக்கு உண்டாவது. இதைப் போல தங்கள் நலனுக்காக மாற்றங்களையே விரும்பாமல் இருப்போரும் உண்டு. அவர்களும் மக்கள் விரோதிகளே. காலப் பகையாளிகளே. இதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேசலாம். பேசவேண்டும்.

இப்போது நம்முடைய நண்பர் சொன்ன அபிவிருத்தியைப் பற்றிக் கொஞ்சம் கவனிக்கலாம்.

“அபிவிருத்தி” என்றொரு தரப்பும் “அரசியல் உரிமை” என்றொரு தரப்புமாக இரண்டு வழிகளில் இரண்டு வார்த்தைகளில் - இரண்டு அடையாளப்படுத்தல்களில் தமிழ் மக்களுடைய அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. இரண்டு தரப்பும் ஒன்றை ஒன்று பழித்துக் கொண்டும் மறுத்துக் கொண்டும் மக்களிடம் வேலை செய்கின்றன. ஆனால் வேடிக்கை என்னவென்றால் இரண்டு தரப்புகளுக்கும் குறிப்பிட்டளவு தொகை மக்கள் ஆதரவளிக்கிறார்கள். அப்படியென்றால் இரண்டு கருத்து நிலைக்கும் பொதுவெளியில் இடமுண்டு. இது இரண்டும் தேவை அல்லது இரண்டையும் தேவை எனக் கொள்வோர் நம்முடைய சூழலில் உண்டு என்று அர்த்தமாகிறது.

ஆனால், இந்த இரண்டும் தனித்தனியான இரண்டாகும். இதற்கு அப்பால் இவை இரண்டையும் இணைத்துச் செல்லும் ஒரு அரசியல் தேவை. அதை முன்னெடுப்போர் வேண்டும். அவர்கள் பலமடைய வேண்டும். அவர்கள் அதற்காக அரசியலை முன்வைத்துச் செயற்படக்கூடிய பொறிமுறை ஒன்றை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். அதற்கான ஆதரவை மக்கள் நிச்சயமாக வழங்குவார்கள். ஏனென்றால், அதுதான் தமிழ்ச் சமூகத்துக்குத் தேவையே தவிர, தனியே அபிவிருத்தி என்ற ஒருமைப்படுத்தப்பட்ட அரசியல் அல்ல. அது தனியே ஒற்றை வழிப்பாதை மட்டுமல்ல, அடிப்படை உரிமைகள் தொடக்கம் வாழும் உரிமைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டதொரு சமூகத்துக்கு ஏற்புடையதல்ல. ஏறக்குறைய 2015 இல் இந்த வழிமுறையைப் பின்பற்ற முனைந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இதிலும் முழுமை நிலைத்தன்மை உருவாகவில்லை. அதற்கிடையில் பிறகு வந்த ஆட்சி மாற்றத்தால் இது தொடரவும் இல்லை. வளராமலும் போய்விட்டது.




இப்போதுள்ள அரசாங்கம் ‘அபிவிருத்தி’ என்ற சொல்லை மந்திரக் கயிறாக்கி எல்லாப் பிரச்சினைகளுக்கும் அந்தக் கயிற்றைக் கட்டித் தீர்வைக் கண்டு விடலாம் என்று கனவு காண்கிறது. ஆனால், அது சொல்வதைப்போல இலங்கையில் மேற்கொள்ளப்படுவது அபிவிருத்தி அல்ல. அபிவிருத்திக்கான ஆரம்பநிலை வேலைகள் மட்டுமே. உட்கட்டுமான விருத்திகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அவ்வளவுதான். அதைச் செய்யும் முறை கூடத் தவறானது. உண்மையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பதும் அபிவிருத்திச் சிந்தனை என்பதும் பன்முகப்படுத்தப்பட்டது. அனைவருக்கும் உரியது. அனைத்துத் தரப்பின் பங்கேற்பும் அனைவருக்கும் உரித்துடையதுமாகும். அதிலேயே விடுதலைக்கான அடிப்படைகளும் அதற்கான பண்புகளும் உண்டு. முக்கியமாக சமூக பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியோடு சூழல் பாதுகாப்பையும் உள்ளடக்கியதே அபிவிருத்தியாகும்.

இந்த அடிப்படையில் இங்கே அபிவிருத்திக்கான செயற்பாடுகளோ அல்லது முன்னோட்டங்களோ மேற்கொள்ளப்படுகிறதா? இல்லையே!

இங்கே நடப்பதெல்லாம் அதன் பேரிலான அரசியல். மக்களுடைய பணத்தில், மக்களுக்கான பணத்தில் தமக்கான அரசியலையே ஆளும் தரப்பினர் செய்கின்றனர். இதில் எந்த ஆளும் தரப்பும் விதிவிலக்கல்ல. எந்த அதிகாரத்தரப்பும் இதிலிருந்து விலகவுமில்லை. அதாவது சனங்களின் காசில் - சனங்களுக்கான காசில் தமது அரசியலை (அந்த அரசியலே தவறானதுதான்) செய்கிறார்கள்.

மீள் குடியேற்றத்திலிருந்து இப்போது வரையில் யாரோதான் நமக்கு என்ன வேணும் என்று யோசிக்கிறார்கள். அவர்களே நமக்கானதையெல்லாம் திட்டமிடுகிறார்கள்.

நம்மிடம் அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசுவதுமில்லை. கேட்பதுமில்லை. அங்கிருந்து திட்டங்கள் வரும். அதற்கான காசும் வருகிறது. அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது மட்டுமே இங்கே நம்முடைய வேலையாக உள்ளது. இது கூட ஒருவகையில் நம்முடைய சுயத்தையும் சுயாதீனத்தையும் அழிப்பதுதான்.





பசிக்கு உணவு வேண்டும் என்பது உண்மை. ஆனால் எதை எப்படிச் சாப்பிடுவது என்பது அவரவர் உரிமை. இதைத்தான் நீங்கள் உண்ண வேண்டும். இது தான் உங்களுக்கு உணவு. இதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்வது எந்த அளவுக்கு நியாயமானது?

இதைப்பற்றி நண்பரிடம் சொன்னேன். அவர் எழுந்து கதவைச் சாத்தி விட்டு உள்ளே சென்று விட்டார்.

சற்று நேரத்தின் பின் அவரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. “சுத்தி வளைச்சுப் பேசாமல் உங்களுக்கு என்ன தேவை எண்டு சொல்லுங்கோ. ஒன்றும் பிரச்சினையில்லை. செய்யலாம்” என்றார்.

இதை என்னவென்று சொல்வது?

■



# முக்கோண காதல்

# பறித்தது உயிரை!

**ஒரு பெண்ணுக்காக நிகழ்ந்த கொலை**

உளவாளி

**பல்லவராயன்கட்டில் பயங்கரம்**

**26.12.2020**

காலை.
பல்லவராயன்கட்டு, மாதிரிக் குடியிருப்பு.
இப்படியொரு விபரீதம் நிகழும் என்று எவருமே சற்றும் எதிர்பார்க்கவில்லை.

நெருங்கிய உறவினர்களான பிரதீபனும், ரவியும் வீதியென்றும் பாராமல் வெறிகொண்ட மிருகங்கள்போல மோதிக்கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் பக்கத்தில் முருகன் கோயிலில் ஷஷ்டி விரதத்துக்காக ஆள்கள் கூடி நின்றார்கள். ஆனால் ஒலிபெருக்கிச் சத்தம் காதை அடைக்கும் அளவுக்கு இருந்ததால், எவருக்கும் இந்தச் சண்டையின் சத்தம் கேட்கவில்லை.

சண்டை பிடித்த இருவரும் ஆளையாள் மாறி மாறி கழுத்தை நெரிக்க முனைகையில்,
திடீரென ரவி கையில் பளிச்சிடும் கத்தியொன்று, ஒரே விசுக்கு. பிரதீபனின் தொடைப்பகுதியில் ரத்தம் பீறிடத் தொடங்கியது.

தொடையின் தசைப் பகுதியைப் பிய்த்து, எலும்பையும் பிளக்கச் செய்திருந்தது அந்த ஒற்றை வெட்டு.

"ஐயோ ஓஓஓ..!"

வலியோடு இரண்டடி வைக்க முயன்று தோற்றுப்போன பிரதீபன், அப்படியே பக்கவாட்டாகச் சரிந்தான். ரத்தம் தோய்ந்த கத்தியோடு, ஆவேசமாக நின்ற ரவியின் கண்களுக்கு சற்றுத்தொலைவில் ஓடிவரும் பிரதீபனின் நண்பன் தெரிந்தான். அவனை நோக்கியும் " கத்தியைக் காட்ட, அவனோ ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டவனாக எதுவும் புரியாமல் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் கொண்டு சிட்டாகப் பறந்தான்.

கத்தியும், காட்டுக் கத்தலுமாக ரவி பொலிஸ் நிலையத்தை நோக்கிச் செல்ல, கீழே விழுந்த பிரதீபன் பேச்சு மூச்சற்று அப்படியே குருதி பெருக்கெடுக்க கிடந்தான். வீதியால் சென்றவர்கள் இரத்த வெள்ளத்தில் அசையாமலிருக்கும் பிரதீபனைக் கண்டுவிட்டு, பதறித் துடித்தபடி அவனது வீட்டுக்கு தகவல் சொன்னார்கள். பிரதீபனின் அண்ணன் ஓடி வந்தார். உயிர் இருந்தது.

அம்புலன்ஸுக்கு அறிவித்துவிட்டு, அவனைத் தூக்கி,மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார். இடைநடுவில் அம்புலன்ஸும் வந்துவிட்டது. உடனேயே அதில்ம் பிரதீபனை மாற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கும் போதே அவனது நாடித்துடிப்பு குறையத் தொடங்கியது. மருத்துவமனையில் பிரதீபனைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவன் உயிரிழந்து விட்டதை உறுதிப்படுத்தினார்கள்.

இப்படி நடுவீதியில் இருவரும் அடிபட்டுக் கொள்வதற்கும், அது கொலைவரை செல்வதற்கும் காரணம் என்ன?

**எல்லாம் ஒரு பெண்ணுக்காக.**

## 1 அவளின் காதல்

அவளுக்கு வயது 35 தான். பல்லவராயன்கட்டு, மாதிரிக் குடியிருப்புத்தான் அவளின் சொந்த இடம். ஆனால் அவளுக்கு வாழ்க்கை அவ்வளவு மகிழ்வாக இருக்கவில்லை. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவருடன் அவளுக்கு காதல் மலர்ந்து, பின்னர் திருமணத்தில் முடிந்தது. ஆனால் அதற்குப் பிறகுதான் அவளுக்கு பெரும் இடி விழுந்தது. தான் மணந்து கொண்டவனுக்கு ஏற்கனவே திருமணமாகி, குழந்தையும் இருக்கும் உண்மை தெரியவர, அவள் உடைந்து போனாள். சிலகாலங்களில், அவளை ஒரு பெண்குழந்தைக்கு தாயாக்கி விட்டு, அவன் பிரிந்தே போய்விட்டான். அவள் ஒற்றை மரமானாள். பிள்ளையும், அவளும் பெற்றோரின் வீட்டுக்கு அருகில் இன்னொரு தனி வீட்டில் வசிக்கத் தொடங்கினர். அப்போதுதான் அவள் வாழ்வில் குறுக்கிட்டான் பிரதீபன். அவனும் அதே ஊர் தான். ஆனால் அவளை விட 4 வயது குறைந்தவன். காதலுக்கு கண் மட்டுமல்ல, வயதும் தெரிவதில்லை போலும். மீண்டும் ஒரு காதல். இரவானதும் பிரதீபன் அவள் வீட்டுக்குச் சென்றுவரத் தொடங்கினான். ஊரெங்கும் அரசல் புரசலாக அவளுக்கும் பிரதீபனுக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கதைகள் எழத் தொடங்கின. இந்தக் கதைகள் அவளின் பெற்றோரின் காதுகளுக்கும் எட்டியது. அவ்வளவுதான். அவளைப் பிடித்து உலுப்பியெடுத்துவிட்டார்கள்.

## 2 பொறியில் சிக்கினான்

" ஏற்கனவே குடும்பத்துக்கு உன்னால கெட்ட பேர். இப்ப இன்னொருத்தனோட தொடர்போ?" என்று கேட்க, அவள் அப்படி ஏதுமில்லை என்று அடியோடு மறுத்துவிட்டாள். ஆனால் அதனை நம்ப அவர்கள் தயாரில்லை. சிலநாட்கள் போக, பொறி வைக்கப்பட்டது. பின்னிரவுப் பொழுதொன்றில் அவள் வீட்டில் யாருமறியா வண்ணம் அவளின் சகோதரர்கள் பதுங்கிக் கொண்டனர். இது பிரதீபனுக்கோ, அவளுக்கோ தெரியாது.

பிரதீபன் வழக்கம்போல வேலையெல்லாம் முடித்து, அவளின் வீட்டுக்குள் பூனைபோல புகுந்தபோது, அப்படியே எல்லோரும் பாய்ந்து 'அப்பினார்கள்'.

கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பிறகு , தங்களுக்குள் எவ்வித உறவுமில்லை என்று மறுப்பதில் பயனில்லை என்று பிரதீபன் உணர்ந்து கொண்டான். உண்மையை ஒத்துக்கொண்டு "இன்னும் 2 வருசத்தில நான் தாலி கட்டி மனுசியாக்கிறன்" என்று வாக்குறுதி கொடுத்தான். அவளைவிட அவனுக்கு வயது குறைவென்று சொன்னபோதும், தன்னால் அவள் இல்லாமல் வாழ முடியாது என்று பிரதீபன் அடம்பிடித்தான். "சரி, எக்கேடாவது கெட்டுப் போங்கள்" என்று அவள் வீட்டார் வேறுவழியின்றிச் சம்மதித்தனர்.

## 3 காதல் கசந்தது உறவு முறிந்தது

இந்தச் சம்மதத்தை ஒரு லைசென்ஸாக எடுத்துக்கொண்ட பிரதீபன், அவள் வீட்டுக்கு சுதந்திரமாக வந்து போகத் தொடங்கினான்.

ஆனால் அதன் பின்னர் மெல்ல மெல்ல இருவருக்கிடையிலும் உறவு கசக்கத் தொடங்கியது. அடிக்கடி முரண்பாடு எழுந்து, அடிதடி வரை சென்றது. ஒருமுறை சண்டையின் போது அவள் தனக்குத் தானே மண் ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்கவும் முயன்றாள். ஆனால் பிரதீபன் அதை அணைத்துவிட, கையில் மட்டும் எரிகாயம் ஏற்பட்டு, சிகிச்சை பெற்றாள் அவள். ஆனாலும் அவள் இதையெல்லாம் வீட்டாருக்குச் சொல்லாமல் மறைத்தாள்.ஆனால் அவளின் பெண் குழந்தை, பிரதீபன் தன் தாயோடு சண்டை பிடித்ததை அவளின் பெற்றோருக்கு( தன் தாத்தா, பாட்டிக்கு) சொல்லிவிட்டது.

உடனேயே அவளது பெற்றோர் இதைப் பற்றி பிரதீபனின் தமையனிடம் சொல்லி, " எங்கட பிள்ளையை இப்பிடிச் சித்திரவதை செய்யிறான். நாங்கள் பொலிஸுக்குத்தான் இனிப் போவம் " என்று முறையிட்டிருக்கிறார்கள். அதற்கு " அப்பிடியெல்லாம் செய்யாதீங்கோ . அவனுக்கு நாங்கள் புத்திமதி சொல்லுறம்" என்று பிரதீபனின் சகோதரன் ஆறுதல் சொல்லியிருக்கிறார்.இப்படியே சண்டையும், சச்சரவுமாக 7 வருடங்களாக நீடித்த அவளுக்கும், பிரதீபனுக்குமான உறவு கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக முற்றாக அறுந்து போனது. இருவருக்கும் இடையில் எந்தப் பேச்சுவார்த்தையும் இல்லை.





பிரதீபன் வெட்டப்பட்ட நிலையில்...

## 4

### மூன்றாவது காதலும் முற்றிய முரண்பாடும்



பிரதீபன்

இப்படிப்பட்ட நிலையில் தான் அந்த ஊருக்கு வந்தான் தம்பித்துரை புஸ்பநாதன் என்கிற ரவி(49 வயது). வெளிநாடொன்றில் இருந்தவன், ஏதோ ஒரு குற்றச் செயலோடு தொடர்புடையவன் என நிரூபிக்கப்பட்டதால், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தான். அவனுக்கும் சொந்த இடம் பல்லவராயன் கட்டுத்தான். ஆனால் பெற்றோர் வவுனியாவில் இருந்தனர். பல்லவராயன் கட்டில் ரவி குடும்பத்துக்குச் சொந்தமான முருகன் கோயில் ஒன்றுண்டு. இவர்கள் வவுனியாவில் வசித்ததால், கோயிலைப் பராமரிக்கும் பொறுப்பை அவளிடம் கொடுத்திருந்தார் ரவியின் தாயார்.
இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட ரவி, ஊரில் உள்ள தங்கள் வீட்டை திருத்திக் கட்ட பல்லவராயன் கட்டுக்கு வந்தான். வந்தவனின் கண்ணில் சிக்கினாள் அவள். மூன்றாம் காதல் மலர்ந்தது அவளுக்கும் ரவிக்கும் டைஇயே ஆனாலும் அந்த உறவும் இரகசியமாகவே இருந்தது. ஒருநாள் ரவியும், அவளும் ஆளில்லா வீடொன்றில் ஒன்றாக இருந்ததை அறிந்த அவ்வூர் இளைஞர்கள், அதனை இரகசியமாக வீடியோ எடுத்து, ஊர் முழுக்க தகவலைப் பரப்பிவிட்டார்கள். அந்த வீடியோவை செல்போனில் எடுத்தவர்கள் பிரதீபனின் நண்பர்கள் தான். அதனை அவனுக்கும் காட்டி, “ அவள் இப்பிடிப்பட்டவள் தான். இனியாவது அவளை மறந்திட்டு நடக்கிறதைப் பார்” என்று அறிவுரை சொன்னார்கள்.
அவ்வளவுதான் தாமதம். தன் நண்பர்கள் , பெற்றோரோடு அவளின் வீட்டுக்குச் சென்றான் பிரதீபன். அங்கு ரவியும் வந்திருந்தான். வீடியோவைக் காட்டி பிரதீபன் “ என்ன இது?” என்று கேட்டவாறு அவளை அடிக்கப் போனான். அப்போது குறுக்கிட்டான் ரவி.
“ அவளை அடிக்க நீ ஆர்? நான் அவளைக் கலியாணம் கட்டப் போறன். இனி அவள் இருக்கிற பக்கம் நீ வரக்கூடாது” என்று ரவி சொன்னான்.
இதைக் கேட்டு ஒருகணம் திகைத்த பிரதீபன்,
“சரி, அவளை நீ கண்கலங்காமல் வைச்சிருப்பியா?” என்று திருப்பிக் கேட்டான்.
“ஓம், அவளை நான் பாப்பன். அப்பான்ர திவசம் வருகுது, அது முடிய தாலி கட்டுவன்” என்று ரவியும் சொல்லியிருக்கிறான்.
உடனேயே பிரதீபன் ரவிக்கு கைலாகு கொடுத்துவிட்டு “சரி இனிமேல் எனக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் அவளுக்காக நான் 19 லட்சம் சிலவழிச்சிருக்கிறன். அதை என்னட்டைத் தந்திட்டு அவளைக் கட்டு” என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.
அதன் பின்னர் ரவியும், பிரதீபனும் கீரியும் பாம்பும் போல எங்கு கண்டாலும் அடிபடத் தொடங்கினர். ஆளையாள் சீண்டி, கோபமேற்றும் வேலைகளிலும் இறங்கினர். ரவியைக் கண்டுவிட்டால் தன்னுடைய உழவியந்திரத்தை ‘றேஸ் ‘ பண்ணி , சத்தத்தை கூட்டி தன் கோபத்தை வெளிப்படுத்துவதை பிரதீபன் வழக்கமாக்கிக் கொண்டான். பதிலுக்கு தூஷண வார்த்தைகள் ரவியிடமிருந்து பறக்கும். ஒருமுறை நண்பர் ஒருவரின் வீட்டில் இருவரும் அடிபட்டும் இருக்கிறார்கள்.
கடைசியில் கந்தஷஷ்டியன்று, கோயிலுக்கு அருகாமையில் அந்தப் பகை கொலையோடு முடிந்திருக்கிறது.

## 5

### “என்ர கண்ணுக்கு முன்னாலை தான் கொலை நடந்தது”

**- அவளின் வாக்குமூலம்**

“2012 ம் ஆண்டு பிரதீபன் என்னை விரும்புறதாச் சொன்னார். எனக்கும் பிடிச்சிருந்துது. ஆனால் எங்கட அம்மா அப்பாவுக்கு பிடிக்கேலை. அவை முழங்காவில் பொலிஸில முறைப்பாடு செய்திட்டினம். அங்க வந்து என்னைக் கலியாணம் கட்டுவன் எண்டு பிரதீபன் பொலிஸுக்கு முன்னால சொன்னார். ஆனால் அதுக்குப் பிறகு ஆள் மாறிட்டார். என்னில அவருக்குச் சந்தேகம். சிகரெட்டால சுடுறது, சந்தனக் குச்சியால சுடுறது, சாராயத்தைப் பருக்கிறது எண்டு எனக்கு ஒரே சித்திரவதை. அதோட என்னை விரும்பேக்க, வேற பெட்டையளையும் ஆள் லவ் பண்ணச் சொல்லிக் கேட்டிருக்கிறார். அவை வந்து என்னட்டைச் சொல்லுவினம். அதை அவனிட்ட கேட்டால் அடி, உதைதான். ஒருக்கா ஆய்க்கினை தாங்கேலாமல் மண்ணெண்ணெய் ஊத்தி எரியப்போனன். அவன் காப்பாதிட்டான்.
கடைசியா ‘உன்னோட என்னால வாழ ஏலாது. என்னை விட்டிட்டு போ’ எண்டு சொல்லிட்டன். அதுக்குப் பிறகு ஒரு வருசமா கதை, பேச்சில்லை. பிறகு ரவி வந்து என்னைக் கட்டப் போறதாச் சொன்னார். நானும் ஓமெண்டிட்டன். அவருக்கு சுவிஸில மனுசி, பிள்ளையள் இருக்கினம்,. ஆனா டிவோர்ஸ் எடுத்திட்டன் எண்டுதான் சொன்னவர். ரவி என்னைக் கட்டப் போறன் எண்டு சொன்ன பிறகு பிரதீபன் கடும் பிரச்சினை குடுத்தான். காணுற இடத்தில எல்லாம் தூசணத்தால பேசுறது, வீட்டு வளவுக்க உள்ளாடையைக் கொண்டந்து போடுறது, அறைக்கு மறைப்புக்குக் கட்டின தறப்பாளை வெட்டி ஒளிச்சிருந்து பாக்கிறது எண்டு ஒரே கரைச்சல்.
கொலை நடந்த அண்டைக்கு கந்த சஷ்டி விரதம். கோயில்ல அன்னதானம் குடுக்க இருந்தம். அதுக்காக காலைமை ஆறு மணிக்கே நானும் ரவியும் கோயிலுக்குப் போய், துப்பரவு செய்தம். எட்டு மணி போல, “ வீடு திருத்திறதைப் பாத்திட்டு வாறன்” எண்டிட்டு ரவி வெளிக்கிட்டார்.
கொஞ்ச நேரத்தில பிரதீபன்ரை சினேகிதன் ஒராள் ரக்ரரில கோயிலடிக்கு கிட்ட வந்தான். வந்தவன் ரக்ரர் அக்சிலேட்டரை வேணுமெண்டு முறுக்கி, றேஸ் பண்ணிக் கொண்டு நிண்டிட்டு பிறகு கோயிலுக்க வந்து விபூதி பூசிக்கொண்டு போட்டான். கொஞ்சத்திலை காணிக்க சல்லிக்கல்லைப் பறிச்சுப் போட்டு ரவி கோயிலுக்கு வந்தார். வந்தவரிட்ட பிரதீபன்ரை சினேகிதன் செய்த வேலையைச் சொன்னன். அவருக்கு கோபம் வந்திட்டுது.
“பொறு வாறன்” எண்டு வெளிக்கிட்டார். நான் பதறிப்போய் எட்டிப் பார்த்தன்,. கோயிலுக்குக் கிட்டத்தான் பத்மநாதன் எண்டவரின்ர வீடு. அங்க பிரதீபன் பத்மநாதனோட கதைச்சுக் கொண்டு நிண்டவன். அதில ரவி போக, பிரதீபன் இவரின்ர மோட்டர் பைக்கை எட்டி உதைஞ்சிட்டான். ரவி மோட்டர் பைக்கோட கீழ விழுந்திட்டார். பிறகு எழும்ப, பிரதீபன் ஓடிவந்து ரவியின்ர கழுத்தைத் திருகினான். அப்ப ரவி கையில இருந்த ஏதோ ஒண்டால ஒரு விசுக்கு விசுக்கினார். பிரதீபன் நொண்டி நொண்டி நடந்து பிறகு விழுந்திட்டான். ரவி மோட்டர் பைக்கை கஷ்டப்பட்டு ஸ்ராட் பண்ணிக்கொண்டு போட்டார். இவ்வளத்தையும் பாத்திட்டு நானும் கோயிலுக்கை வந்திட்டன். லவுட்ஸ்பீக்கர் சத்தத்துக்கு கோயில்ல நிண்ட ஆக்களுக்கு ஒண்டும் தெரியேல்லை.
அதுக்குப் பிறகு அங்க ரக்ரரில பிரதீபன்ர சினேகிதன் வந்தான். அவன் தான் கொஞ்சம் முதல் அக்சிலேற்றரை முறுக்கின ஆள். அவன் விழுந்து கிடந்த பிரதீபனை எட்டியும் பாக்காமல், ரக்ரரை வெட்டி எடுத்துக்கொண்டு போட்டான். பிறகு தான் ஆரோ பிரதீபனை வெட்டிப் போட்டிருக்கு எண்டு சொல்ல, கோயில் சனம் ஓடிப் போனவை .
அதுக்குப் பிறகு ரவி எனக்கு கோல் எடுத்தார்.
“நான் பிரதீபனை வெட்டி போட்டு வந்திட்டன். நீங்கள் பூசைய செய்யிறதெண்டா செய்யுங்கோ” எண்டு சொன்னார்.
“பிரதீபன் செத்திட்டான் என்று சனம் கத்துது “ எண்டு நான் சொன்னன். அதுக்கு அவர் “அப்படி இல்லை. கோயில் பூசையை செய்யுங்கோ. நான் இடுப்புக்கு கீழ காலில தான் ஒருக்கா விசுக்கினனான்” எண்டார். அவர் வெட்டின கத்தியை 350 ரூபாவ்க்கு 24 ஆம் திகதிதான் வேண்டினாங்கள். கோயில் மடப்பள்ளிக்கதான் கத்தி இருந்தது. அவர் போகேக்க கத்தி கொண்டு போனதை நான் காணேலை”
என்று சொல்கிறாள் அவள். பிரதீபன் கொலை செய்யப்பட்ட பின்னர் ஊரவர்களும், பிரதீபனின் நண்பர்களும் அவள் வீட்டுக்கு முன்னால் நின்று பெரும் களேபரம் செய்ததால் , தனக்கு அங்கிருப்பது பாதுகாப்பில்லை என நினைத்து அவள் இப்போது வேறொரு மாவட்டத்தில், உறவினர் வீடொன்றில் தஞ்சம் புகுந்துள்ளாள்.

## 6

### காசுக்காக உயிரையே எடுத்திட்டாங்கள்

“அவளின்ர தம்பி ஒருத்தன் டோகா, கட்டார் பக்கம் நிண்டிட்டு வந்து பெரிய நாட்டுக்கு போறதுக்காண்டி வெளிக்கிட்டு, இடைநடுவில நிக்கிறான்.
அவனுக்குப் போக காசு தேவையெண்டு, பிரதீபன் அவளிட்ட குடுத்தவன். தன்ர மாடு, நகை, அரிவு வெட்டுற மிசினை ஏத்தி இறக்கிற ‘டொக்’ எல்லாத்தையும் வித்து அவளுக்குத்தான் குடுத்தவன். உழைக்கிற காசைக்கூட தாய் தேப்பனுக்கு குடுக்காமல் அவளுக்குத்தான் அதையும் குடுத்தவன். அப்பிடி அவளுக்கு நகை, காசு குடுக்கிறதை அவன்ர சினேகிதர்கள் கண்டிருக்கிறாங்கள். ஒருக்கா அவளுக்கு காசெல்லாம் குடுத்து ஏமாந்திட்டன் எண்டு அவன் என்னட்டச் சொல்லி அழுதவன்,
ஆனால் காசு குடுத்தது எண்டதுக்கு ஒரு ஆதாரமுல்லை. அதால இப்ப காசு வாங்கேலை எண்டு அவள் சொல்லுறாள். குடுத்த காசைக் கேட்ட பிறகுதான் இப்பிடிச் சண்டை. கடைசியா எங்கட தம்பியின்ர உயிரையே எடுத்திட்டாங்கள்” என்று சொல்லி அழுகிறார் பிரதீபனின் அண்ணன்.

## 7

### “என்னையும் வெட்ட வந்தான்”

**- நண்பனின் வாக்குமூலம்**

“ஒரே கிராமம் என்பதால் பிரதீபனைச் சிறு வயதிலிருந்தே தெரியும். மிக நெருங்கிய பழக்கம். தம்பி போன்றவன்.
முதல் நாள் இரவும் வீட்டுக்கு வந்து கதைத்து விட்டு 10.30 மணியளவில் தான் சென்றான். பிள்ளையார் கோயிலில் அன்றைய பூசை எங்கடை தான். எனது உழவு இயந்திரத்தின் பற்றறி பழுது. தள்ளித்தான் ஸ்ராட் செய்ய வேண்டும். அதனால் “விடிய வேளைக்கே வா “எனச் சொல்லியிருந்தேன். மறு நாள் (கொலை நடந்த அன்று) காலை 5.30 மணியளவில் என் வீட்டுக்கு தனது உழவு இயந்திரத்தில் வந்திருந்தான். எனது உழவு இயந்திரத்தை கயிற்றால் கட்டி தனது உழவு இயந்திரத்தால் இழுத்து ஸ்ராட் செய்து விட்டு, எனது உழவு இயந்திரப் பெட்டியை கொழுவி என் மனைவி, பிள்ளைகள், பூசைக்கு தேவையான பொருள்களை ஏற்றிச் சென்றான். கோயிலடிக்கு எனது உழவியந்திரத்தைக் கொண்டு சென்றால் திரும்ப அவ்விடத்தில் தள்ளி ஸ்ராட் செய்வது கஷ்டம்.

(17ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி
24 ஜனவரி 2021



ஆசி.கந்தராஜா

சஞ்சீவி சிறுகதை



# கலியாண கெமிஸ்ரி

அ'து சரிவராது போலத் தான் இருக்கு' என்ற மனைவியின் பதிலால் பொன்னம்பலம் மனமுடைந்து போனார். இந்த அளவுக்கு விஷயம் சிக்கலாய் இருக்குமென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. அவர் சம்பாதித்துள்ள குடும்ப செல்வாக்குக்கும் கௌரவத்துக்கும், இது வெகு சுலபமாக நடக்க வேண்டியது. ஆனால் காலம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிட்டது!

பொன்னம்பலத்தார், வாழ்க்கையை எப்படியும் வாழலாமென்று வாழ்பவரல்ல. அவருடைய வாழ்க்கையில் எப்போதும் ஓர் ஒழுங்கு முறை இருக்கும். வளவிலுள்ள மரங்கள் தொடக்கம், வீட்டிலுள்ள மனிதர்கள் வரை ஒருவகைக் கட்டுப்பாட்டுக்குள் வளரவேண்டுமென்று எதிர்பார்ப்பார். தனது குடும்பத்தில் பத்து வருஷங்களுக்குப் பின்னர் நடக்கப் போகும் விஷயங்களையும் இப்போதே தீர்மானித்துத் திட்டமிட்டுக் கொள்வது அவரது சுபாவம். இதுதான் அவரது பலமும், பலவீனமும்! படுக்கையில் புரண்டுபடுத்தார் பொன்னம்பலம்.

'என்னப்பா, நித்திரை கொள்ளாமல், யோசிச்சுக் கொண்டிருந்தால், எல்லாம் நடந்திடுமே...? பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு படுங்கோ.' அவருடைய மனைவியோ அவருக்கு நேரெதிர். தலையே போனாலும் கவலைப்படமாட்டார். நடக்கிறது நடக்கும் என்பது அவரது போக்கு. எல்லாப் பாரத்தையும் கடவுளின்மீது போட்டுவிட்டு நிம்மதியாக இருப்பார்.

பொன்னம்பலம் அடிமட்டத்திலிருந்து தன்னுடைய சொந்த உழைப்பால் முன்னேறியவர். பல்கலைக் கழகத்திலிருந்து அவர் என்ஜினியராக வெளி வந்தபோது, பெரிய பெரிய இடங்களிலிருந்தெல்லாம், கொழுத்த சீதனத்துடன் பலர் போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுக்க முன்வந்தார்கள். அந்தக் காலத்தில் படிப்பும் அரசாங்க உத்தியோகமுமே புருஷ லட்சணங்களாகக் கொள்ளப்பட்டன. 'சம்பளம்' 'கிம்பளம்' பற்றிய சோடிப்புகள் கலியாணத் தரகரின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. பொம்பிளை பார்த்தபின், பெண்ணைப் பிடிக்கவில்லையென்று மாப்பிளை நிராகரிக்கலாம். அதையே ஒரு பொம்பிளை செய்தால், அவள் 'ஆட்டக்காரி' அல்லது 'சதிர்க்காரி' என ஊரில் பட்டம் கொடுத்துவிடுவார்கள். கலியாணச் சந்தையில் அப்போது முற்று முழுக்க ஆணாதிக்கமே கோலோச்சியது. ஊரிலே நடைமுறையிலிருந்த இத்தகைய கம்பசூத்திரத்தைப் பயன்படுத்தி பொன்னம்பலத்

தார் ஆஸ்திரேலியாவில் தன்னுடைய பிள்ளைகளை வளர்த்ததுதான், இப்போதைய அவரது கவலைகளுக்கு மூலகாரணம்.

இலங்கையில் அரச நிறுவன மொன்றின் பணிப்பாளராக சகல செல்வாக்குகளுடனும் வலம் வந்த பொன்னம்பலத்தை எண்பத்து மூன்றாம் ஆண்டின் இனக்கலவரம் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர வைத்தது. கொழும்பிலுள்ள சீதன வீடு காடையர்களால் அடித்து நொறுக்கி எரிக்கப்பட்ட பின், சகல தோட்டங்களையும் இழந்த நிலையில், நண்டும் சிண்டுமாய் இரண்டு வயதும் நான்கு வயதுமான இரண்டு பெடியன்களுடனும், இளம் மனைவியுடனும் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர், இங்கும் தனது உழைப்பையும் சிக்கனத்தையும் மூலதனமாக்கி முன்னேறினார். பிள்ளைகளும் பெற்றோரின் எதிர்பார்ப்பை ஏமாற்றாமல், நல்லவேலைகள் கிடைக்கும் துறைகளிலே பல்கலைக் கழகப் பட்டங்கள் பெற்று, கொழுத்த சம்பளத்துடன் வேலைகளிலும் சேர்ந்துவிட்டார்கள்.

இனியென்ன கலியாணம்தான். பிறகு நிம்மதியாய் பேரப்பிள்ளைகளுடன் காலம் கழிக்கலாம் என நிமிர்ந்தவருக்கு, அப்பொழுதுதான் அவுஸ்திரேலியாவிலே, சமகாலத்தில் நிலவும் கலியாணச் சந்தையின் முழுத் தாற்பரியங்களும் புரியலாயிற்று. நமது ஊரில் கலியாணமென்றால் என்ன? சாதகப் பொருத்தம் பார்ப்பார்கள். குலம், கோத்திரம், குடும்பப்பின்னணி என்பவற்றைப் பார்ப்பார்கள். மாப்பிள்ளையின் குணம், படிப்பு, உத்தியோகம் பற்றித் தெரிந்தவர்களிடம் விசாரிப்பார்கள். பின்பு பொம்பிளை பார்த்துக் கலியாணம் நடக்கும். இப்போது இன்னொன்றும் நடைமுறைக்கு வந்துள்ளது என மணியம் புதிதாகச் சொன்னார். பரந்த அனுபவமுள்ள பொன்னம்பலத்தாருக்கு இது தூக்கத்தைக் கலைத்தது.

> **'என்ன கோதாரி ஈர்ப்போ? இளவயதிலை எங்களை விட்டவை ஆர்...?, எண்ட கெப்பரிலை நிக்கிறது. முப்பது தாண்ட ஓடி முழிக்கிறது.**

தாங்களே 'சோடியளை' தேடிப்பிடிக்காத தமிழ்ப் பெடிபெட்டையளுக்கு, கலியாணங்கள் பொருத்தி விடுவதை, மணியத்தார் பொழுதுபோக்குக்காக அல்லாமல் ஒரு சேவையாகவே செய்கிறார். இதனால் அவர் பலதடவைகள், சிக்கல்களில் மாட்டுப்பட்டு மகனிடம் பேச்சு வாங்கியதுமுண்டு.

பொன்னம்பலத்தார் பெடியளின் கலியாண விஷயமாய் மணியத்தை அணுகியபோது, அவர்தான் சொன்னார், 'கலியாணத்தை முற்றாக்க 'கெமிஸ்றி' (Chemistry) வேலை செய்ய வேணும்' என்று!

தமிழ் மூத்தபிரஜைகள், புதன்கிழமை தோறும் விளையாடும் செஸ் விளையாட்டின்போது 'கெமிஸ்றி' என்கிற சொல்லின் பல்வேறு பரிமாணங்கள் அலசப்பட்டன.

'Organic chemistry, inorganic chemistry, physical chemistry என்று நான் பள்ளிக்கூடத்திலை படிச்சிருக்கிறன். அதென்னப்பா 'கலியாணக் கெமிஸ்றி'? என அண்மையில் அவுஸ்திரேலியா வந்து மூத்தபிரஜைகள் சங்கத்திலே உறுப்பினராகச் சேர்ந்துள்ள 'அப்போதிக்கரி' தம்பிராசா கேட்டார்.

'அதுதானப்பா சாத்திரத்திலை, வசியப்பொருத்தம் எண்டு சொல்லிறது' என அதற்கு விளக்கம் சொல்லி, கலியாணப் பொருத்தம் பார்ப்பதை, சைற் பிஸ்னஸ்ஸாகச் செய்யும் சிறாப்பர் கந்தையா உரையாடலிலே புகுந்துகொண்டார்.

'வசியப்பொருத்தம் உத்தமமாய் இருந்தாலும் பெடிபெட்டையள் கெமிஸ்றி சரிவரேல்லை எண்ணுதுகள்... அப்ப இதுகள் சொல்லுற 'கெமிஸ்றி' என்கிற கோதாரிதான் என்ன?'

'ஆணும் பெண்ணும் கூடிப் பேசும் பொழுது அவர்களுக்குள் ஒரு இரசாயன மாற்றம் நடக்கும். இந்த இரசாயன ஈர்ப்பே கெமிஸ்றி...!' என பரிமேலழகர் உரை வழங்கினார் பண்டிதர் மகாதேவா.

'என்ன கோதாரி ஈர்ப்போ? இளவயதிலை எங்களை விட்டவை ஆர்...?, எண்ட கெப்பரிலை நிக்கிறது. முப்பது தாண்ட ஓடி முழிக்கிறது. இப்பிடி கூழ்ப் பானைக்குள்ளை விழுந்தவை பல பேரை எனக்குத் தெரியும். என்னட்டை பெட்டையளின்ரை முப்பத்தைஞ்சு சாதகக் குறிப்புகள் கையிலை இருக்கு. இதுக்குத் தோதாய் பன்னிரண்டு பெடியங்களின்ரை சாதகங்கள் தான் இருக்கு. இப்பிடியேபோனால், மலேசியா, சிங்கப்பூர் மாதிரி முதிர் கன்னியளாய் இருக்கிற நிலமைதான் இஞ்சையும் வரும். பெடியங்களும் தங்களுக்குத் தகுதி இருக்கோ இல்லையோ, குஜராத்திப் 'பெட்டையள்' மாதிரி வெள்ளையாய் கொண்டுவா எண்டு நிக்கிறாங்கள். இது பெத்த வைக்கும் விளங்குதில்லை, பெடிபெட்டையளுக்கும் விளங்குதில்லை...' என மணி யம் தனது அனுபவத்தைச் சொல்லி நொந்து கொண்டார்.

'நாங்கள் கலியாணம் கட்டி இப்ப நாப்பது வருஷமாச்சு மணியம். நானும் மனுஷியும் ஒருதரை ஒருத்தர் இற்றைவரை சரியாய் தெரிஞ்சு கொள்ளேலாமல் கிடக்குது. இதுக்கிள்ளை பெடிபெட்டையள் மூண்டு மாதம் ஆறுமாதம் கூடித்திரிஞ்சு போட்டு என்னண்டு புரிஞ்சு கொள்ளப்போகுதுகள்; ...?' என்று மூலையிலிருந்த அதி மூத்த பிரஜை ஒன்று பெருமூச்சுவிட்டது.

'படிக்கேக்கையே, நல்ல பெடியனாய் பாத்து பிடிச்சுக்கொண்டுவாடி எண்டு தாய்மார் தூண்டிவிடுகிறதும், பெடியளை வளைச்சுப் பிடிக்கிறதும், இங்கை பரவலாய் நடக்குது. அதுக்கு வல்லமையும் கெட்டித்தனமும் வேணும்...' என உலாந்தா இராமலிங்கம் அங்கிருந்த ஆருக்கோ குத்தல் கதை சொன்னார். நிலமையைச் சமாளிக்க புது வருஷப்பிறப்புக் கொண்டாட்டம் பற்றிய தகவலைச் சொல்லி, கதையைத் திருப்பினார் வில்வரத்தினம். அவர்தான் மூத்தபிரைஜைகள் சங்கத்தின் நடப்பாண்டுச் செயலாளர். மணியத்தின் பினாமியாகத் தேர்தலில் வென்றவர். தன்னுடைய மகன்களுக்கு கலியாணம் பேசி பொன்னம்பலத்தார் வாய்வைக்காத இடமில்லை. அவங்களின்ரை வேலைக்கும் சம்பளத்துக்கும் பெட்டையள் கியூவிலை நிப்பாளவை எண்டுதான் ஆரம்பத்தில் மணியத்தார் சொன்னார். ஆனால் 'இவங்கள் பெட்டையளின்ரை 'வேவ்லெந்துக்கு '(Wave length), கதைக்கிறாங்களில்லையாம்' என்று இப்ப புதுக்கதை சொல்லுறார்.

கால ஓட்டத்தில் பொன்னம்பலத்தாரின்ரை பெடியங்களுக்கு அவுஸ்திரேலிய தமிழ்ப்பெட்டையள் வைச்ச பெயர், 'மம்மீஸ்போய்' (Mummy's boy) என்ற செய்தி சாடைமாடையாக வெளியே கசியவே, நிலமை சுமுகமா கட்டுமென மணியம் இந்தச் சம்பந்தத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்.

அன்று சித்திரை புதுவருஷப்பிறப்பு! மூத்த பிரஜைகள் சங்கம் அதை தடல்புடலாகக் கொண்டாடும். மணியத்தை சந்திப்பதற்காகவே கொழும்பு நாகலிங்கம் வருஷப்பிறப்பு விழாவுக்கு வந்திருந்தார். கொண்டாட்ட ஒழுங்குகளில் மணியம் ஓடியாடித் திரிந்ததால் கொண்டாட்டம் முடியட்டும் என்று, பட்டும் படமலும் நாகலிங்கம் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# சிறுமியின் கோழிக்குஞ்சு



ம.பா. மகாலிங்கசிவம்

கையே என் கண்ணைக் குத்தக் கண்டேனா? கல்லை நான் பூஜை செய்து நின்றேனா?" என்பது ரி.எம் சௌந்தரராஜனால் பாடப்பட்ட புகழ்பெற்ற திரைப்படப் பாடல் ஒன்றின் இரண்டு அடிகள் எதிர்பாராத இடத்திலிருந்து துரோகம் மேற்கொள்ளப்படுவதையும் மிக மதிப்புக்குரியதாகக் கருதப்பட்ட விடயம் ஒன்று தனது தவறான செயற்பாட்டினால் கீழிறங்கிப் போன நிலையையும் இவை வெளிப்படுத்துகின்றன. எப்போதோ எதற்காகவோ பாடப்பட்ட பாடலை இப்போது இதற்காகவும் பாடப்பட்டது போலத் தோன்றுமாறு பாடுவது சிறந்த கவிஞர்களுக்கான தனித்துவ வெளிப்பாடாகும். இவ்வகையில் 'கூ இஸ் த பிளக்சிப்' எனத் தொடங்கும் இப் பாடலை இயற்றிய கவிஞரும் தனித்துவமானவரே. காலம் கடந்தும் கருத்துரைக்கும் இன்னொரு கவிதை இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கின்றது.

## தேன் கூடு

சின்னஞ்சிறு வெண்சிறகிரண்டிலும்
புழுதி படியலாயிற்று
பஞ்சு போன்ற அதன் உடலம்
ஒடுங்கிச் சிறுத்திற்று
கூடி விளையாடிய அவளது பாதம்
தவறுதலாக குஞ்சின் தலை மீதேறியது
கால்களும் உடலும் நெடுநேரம் நடுங்கிச் சிறுமி
தனது பிரியம் துடிப்பதைப் பார்த்திருந்தாள்

கருமுகிலே! உன்துளிகள் தூவி
அதன் மேனிக்கு வலுவூட்டு
நீலவிசும்பே! உன் குரல் கொண்டு
மீளாத் துயிலிலிருந்து அதையெழுப்பு
வீசும் பவனமே! உனது மென்கரங்களால்
மூடிய இரு கண் மூடிகளைத் திறந்துவிடு
இனிய குஞ்சே! வலிகளைக் காலடியில் விட்டுக்
குணமடைந்து எழுந்துவிடு
முறையிட்டாள் சிறுமி ஆகாயம் நோக்கி

உயிர் பிழைத்த குஞ்சு
ஒரு கண் பார்வையிழந்து தவித்து
இடையில் தவறிய வழி தேடிக் கீச்சிட்டவாறு
எங்கோ எங்கோ பார்த்திருந்தது

மரணத்தின் நிழல் அதன் தலைக்கு மேலே
கவிந்திருந்த காலைப்பொழுதில்
கடும் பிரயத்தனத்துடன் ஒரு சொட்டுத் தண்ணீரை
அண்ணார்ந்து குடித்தது

உலகில் அதற்கென ஆண்டவன்
வைத்திருந்த கடைசி நீர்த்துளி அது

குஞ்சுடன் முன்னும் பின்னும் அலைந்து
சிறுமியின் பார்வைக்குத்
தப்பித்திரிந்த மரணம்
முதலில் அதன் சின்னஞ்சிறு
சிறகிரண்டிலும் வந்தமர்ந்து
சிறகுகள் கீழே தொங்கிட
மெல்ல மெல்ல நகர்ந்து குஞ்சு
அந்திப்பொழுதில் சாவு
அதன் கழுத்தின் மீதேறி நின்றது
ஒரு மூதாட்டி போலச் சிறகு போர்த்தி
அசைவற்றுப் படுத்தது குஞ்சு

இரவு நெடுநேரம் வரை காத்திருந்த
மரணத்தின் கரங்கள்
சிறுமி தூங்கிய பின்னர்
துண்டு நிலவும் மறைந்து வானம்
இருண்ட பொழுதில்
அந்தச் சிறுஉயிரைப் பறித்துப் போயிற்று.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள மெல் சிறிபுரத்திற் பிறந்தவர் பஹ்மா ஜவஹான். ஆசிரியப் பணியாற்றி வருபவர். அதற்கும் மேலதிகமாக இலக்கியத்துறையிலே தடம் பதித்து வரும் இவர், கவிதை, சிறுகதை, கட்டுரை விமர்சனம் முதலிய துறைகளில் ஆற்றலை வெளிக்காட்டி வருபவர். ஒரு கடல் நீரூற்றி, அபராதி, ஆதித்துயர் ஆகிய மூன்று கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டவர். உலகத் தமிழ் இலக்கிய சாகித்திய விருது உலகளாவிய ரீதியில் நடைபெற்ற "யாத்ரா" கவிதைப் போட்டியில் வெள்ளி ரோஜா விருது என்பவற்றைப் பெற்றவர். அவரது 'சிறுமியின் கோழிக்குஞ்சு' என்ற கவிதையே இங்கு தரப்பட்டுள்ளது. சிறுமி ஒருத்தி பிரியமாக வளர்த்த கோழிக்குஞ்சின் கதையைச் சொல்வதாகக் கவிதை அமைந்துள்ளது. தன்னைப் பாதுகாத்த சிறுமியே அதன் மீது தவறுதலாக மிதுத்துவிட்ட நிலையில் குஞ்சின் நிலையைச் சித்திரிப்பதாகக் கவிதை தொடங்குகிறது.

சின்னஞ்சிறு வெண்சிறகிரண்டிலும்
புழுதி படியலாயிற்று
பஞ்சு போன்ற அதன் உடலம்
ஒடுங்கிச் சிறுத்திற்று என அந்நிலை உணர்ந்தப்படுகின்றது.

"கால்களும் உடலும் நெடுநேரம் நடுங்கிடச் சிறுமி தனது பிரியம் துடிப்பதைப் பார்த்திருந்தாள்" எனச் சிறுமியின் நிலை அடுத்துச் சுட்டப்படுகின்றது. சிறுமி பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாலேதான், குஞ்சை மிதிக்க வேண்டி ஏற்பட்டது எனக் கூறாது அமைதியாக இருப்பது கவனத்துக்குரியது. பின்னர் சிறுமி தனது தவறுக்காக வருத்தியோ, சமூகத்தால் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்று பயந்தோ ஆகாயத்தை நோக்கி குஞ்சைக் காக்குமாறு தேவாரம் பாடுகிறாள்.

"கருமுகிலே! உன்துளிகள் தூவி
அதன் மேனிக்கு வலுவூட்டு
நீல விசும்பே! உன்குரல் கொண்டு
மீளாத் துயிலிலிருந்து அதையெழுப்பு
வீசும் பவனமே! உனது மென் கரங்களால்
மூடிய இரு கண்மூடிகளைத் திறந்துவிடு

என அவளது தெய்வங்களை நோக்கியே தேவாரம் அமைகிறது. ஆகாயத்தைப் பார்த்த அவளது பார்வை அடுத்துக் குஞ்சின் பக்கம் திரும்புகிறது. இனிய குஞ்சே! வலிகளைக் காலடியில் விட்டுக் குணமடைந்து எழுந்து விடு என குஞ்சு உயிர் பிழைத்து எழுவதற்கான அத்திவாரத்தை இடுவதையும், தனது தவறுக்காக வருந்தும் சிறுமியின் நற்குணத்தையும் கவிஞர் பஹ்மா ஜவஹான் சிறப்பாகப் படம் பிடிக்கின்றார். மிதிக்கப்பட்ட குஞ்சு உயிர்பிழைத்து மீண்டெழுந்தாலும் முன்னர் இருந்ததைப் போல கம்பீரமாக இருக்குமா? அதன் காயமுற்ற நிலை

"உயிர்பிழைத்த குஞ்சு
ஒரு கண்பார்வை இழந்து தவித்து
இடையில் தவறிய வழிதேடிக் கீச்சிட்டவாறு
எங்கோ எங்கோ பார்த்திருந்தது"

என வர்ணிக்கப்படுகிறது. உயிர்பிழைத்த குஞ்சு சிறுமியிடமிருந்து மீள்கட்டுமானம் பெற்றாலும், அதனைச் சொல்லுமாறு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்த மரணத்தின் நிழல் அதன் தலைக்கு மேலே கவிந்திருந்தது. சிறுமியின் செயற்பாடுகளை நிறைவு செய்த கவிஞர், அடுத்து சிறுமிக்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்த மரணத்தின் செயற்பாடுகளை விபரிக்கிறார். குஞ்சுடன் முன்னும் பின்னும் அலைந்து சிறுமியின் பார்வைக்குத் தப்பித்திரிந்த மரணம் இப்போது சிறுமியைத் தவிர்த்து விட்டு நேரடியாகக் களமிறங்கிச் செயற்படத் தொடங்குகிறது.

முதலிலே குஞ்சின் சிறகில் அமர்ந்து மெதுவாக முன்னேற மாலைப் பொழுதில் அதன் கழுத்து வரை வந்திருந்தது.

"ஒரு மூதாட்டி போலச் சிறகு போர்த்தி
அசைவற்றுப்படுத்தது குஞ்சு என அழகிய உவமை மூலம் குஞ்சின் நிலை சித்திரிக்கப்படுகிறது. கவிதையில் குஞ்சின் கதையின், இறுதிப் பகுதி ஆழமான, அர்த்த புஷ்டி யான பல விடயங்களை மனக் கண்முன் நிறுத்துவதாக அமைகிறது.

"இரவு நெடுநேரம் வரை காத்திருந்த மரணத்தின் கரங்கள்"
சிறுமி தூங்கிய பின்னர் துண்டு நிலவும் மறைந்து வானம் இருண்ட பொழுதில் அந்தச் சிறு உயிரைப் பறித்துப் போயிற்று"
எனக் கோழிக்குஞ்சின் மரணத்துடன் கவிதை நிறைவுக்கு வருகிறது. இப் பகுதியில் உலகெங்கும் பொதுவாக நடைபெறும் பல விடயங்கள் நினைவுக்கு வருகின்றன. கோழிக் குஞ்சின் உயிரைப் பறிப்பதற்காக மரணத்தின் கரங்கள் இரவு நேரம் வரை காத்திருந்து சிறுமி உறங்கிய பின்னரே தமது எண்ணத்தை நிறைவேற்றுகின்றன. அப்படியானால் மக்கள் மிகவும் நேசிக்கும் ஒரு விடயத்தை அழிப்பவர்கள், மக்கள் உறங்கும் நள்ளிரவுப் பொழுது வரை காத்திருக்கும் செயற்பாடு நம்நாடு உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் இடம்பெறுகிறதா? என்ற சிந்தனை கிளறப்படுகின்றதல்லவா?

எல்லாம் சரி, சிறுமி, தான் மிதித்த குஞ்சின் உயிர் மீண்டுவர அத்திவாரம் இட்டாள். ஆனால் மறுபடி மரணதேவனின் வலிய கொடுங்கரங்களிலிருந்து அந்தக் குஞ்சின் உயிரைக் காப்பாற்ற முடியுமா? குஞ்சை வளர்த்தெடுக்க முடியுமா? இனிய தேவாரம் போன்ற இசைப்பாடல்களுக்கு மரணதேவன் கட்டுப்படுவானா? மரணதேவன் உயிர் பறிக்க முனைந்தால் உண்ணாவிரதம், ஹர்த்தால் போன்ற போராட்டங்கள் எடுபடுமா? நான் முன்னர் இருந்தது போன்ற மரணதேவனாக மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா என்று கேட்டால், அஞ்சாமல் பதிலளிக்க முடியுமா? முதலிய பல கேள்விகளை பஹ்மா ஜவஹான் வாசகர் மனங்களில் விதைத்துச் செல்கிறார். விழித்திருங்கள் ! உறங்கும் போதும் ஒற்றைக் கண்ணைத் திறந்திருங்கள்! ஒற்றுமையாகச் செயற்படுவார்கள்! என்று கவிஞர் வலியுறுத்துகின்றார்.



## வித்துவான் பதில்கள்!



**பெண்களின் மனசு ஆழம் என்கிறார்களே! உண்மையா வித்தூ...?**

*தாமரைச்செல்வி, உடுவில்*

'ஆழம் பார்க்க வந்த செல்லையா. நான் நீளம் பார்க்க வந்த ஆளையா' என்ற திரைப்படப் பாடல் தான் நினைவுக்கு வருகிறது.



**வித்துவானே ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு, வேறு பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண்கள் குறித்து...?**

*சோபிகா, உடுப்பிட்டி*

சிலர் தாம் வளர்த்த கடா, சேவல் என்பவற்றைத் தாமே சாப்பிடமாட்டார்கள். வேறுயாருக்காவது விற்று விடுவார்கள். அந்த மரபின் தொடர்ச்சியோ?




**பெண்கள் பெரும்பாலும் ஆத்திரத்தை பாத்திரத்தில் காட்டுவது ஏன்?**

*தமிழ்ச்செல்வன், எழுதுமட்டுவாள்*

எனது வீட்டின் அருகில் வசிக்கும் நண்பர் தன்னுடன் சண்டை பிடித்த வரின் வீட்டிற்கு இரவில் சென்று வாசலில் சிறுநீர் கழித்து விடுவார் (போன பிறப்பு நாயாகவும் இருந்திருக்கலாம்) அவர் ஆண். அவர் ஆத்திரத்தை வெளிப்படுத்திய விதத்தில் பெண்களால் செய்ய முடியாததால் தான் பாத்திரத்தில் காட்டுகிறார்களோ?

# கையறுநிலை



தருமராசா அஜந்தகுமார்

இழுத்தல் என்பது ஏற்படுத்தக்கூடிய அவலத்தை, கையறுநிலை என்ற பதம் விளக்குகின்றது. செயலற்றநிலைக்கு இட்டுச் செல்வதே இதுவாகும். சங்ககாலப் புறநானூற் றுப் பாடல்களின் துறைகளில் ஒன்றாக இது விளங்குகின்றது.

"கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ ஒழிந்தோர்
புலம்பிய கையறுநிலையும்""
(தொல் . புறத் : 77)

என்று இதனைத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதற்கு இளம் பூரணர், செத்தோர் மாட்டுச் சாவாதார் வருத்தமுற்றுப் புலம்பிய கையறுநிலையும் எனக் கூறுகிறார். தொல்காப்பியத்தில் காஞ்சித்திணையில் கையறுநிலை எனும் இத்துறை உள்ளது. புறப்பொருள் வெண்பாமாலையிலும் கையறுநிலை எனும் துறை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

"வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற உரைத்தன்று"
(புறப்பொருள் : கரந்தை 10)

எனக் கரந்தைப் படலத்திலும்,

"செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையறவுரைத்துக் கை சோர்ந்தன்று"
(புறப்பொருள் : பொது 28)

எனப் பாடப்பட்டுள்ளது.

புறநானூற்றில் இத்துறையில் 41 பாடல்கள் உள்ளன. இதனோடு தொடர்புடைய ஆனந்தப்பையுள் என்ற துறையும் காணப்படுகின்றது. ஆனந்தம், பையுள் ஆகிய சொற்கள் வருத்தம் என்பதையே குறித்து நிற்கின்றன. தம்மைக்காத்து வாழ்வு தந்தவனின் வடக்கிருத்தலும், மரணமும் அக்காலப் புலவர்களுக்குள் எவ்வாறு துயரநினைவுகளின் தெறிப்புகளாக அமைந்தன என்பதைக் கையறுநிலைப்பாக்களில் காணலாம். புரவலனை, நண்பனை, தந்தையை, நாட்டை, ஊரை, இளமையை எனப் பல பிரிவுகளின் நீட்சி பாலையாகத் தகித்து கையறுநிலையை உருவாக்குவதை விரிந்த தளத்தில்துயரச் சித்திரங்களாக்குகின்றன புறநானூற்றுப் பாடல்கள். அவை உருவாக்கும் இன்மையும், அவலமும் இன்றைய கால வாசிப்புவரை நீண்டு அர்த்தம் கொள்கின்றன.

நாட்டையும் தந்தையையும் இழந்து பாரிமகளிர் அடைந்த வேதனையும் கையறுநிலையும் இன்றைய காலம்வரை எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன. அதனால்தான் பா.வெங்கடேசன் என்ற தமிழக எழுத்தாளர் வேள்பாரி என்ற பிரபலமான நாவலை எழுதிவெளியிட்டுள்ளார்.

"அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்,
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்,
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே! "
(புறநானூறு , 112)

கரிகாற்பெருவளத்தனோடு மோதி சேரமான் பெருஞ்சேரலாதன் புண்பட்டு வடக்கிருந்தபோது கையறுநிலையில் கழாஅத்தலையார் என்ற புலவர் பாடிய கையறுநிலைப்பாடல் முக்கியமானது. "நீ வடக்கிருந்தமையால் முழவுகள் ஒலியடங்கின: யாழ் இசை துறந்தது: தயிர்ப்பானைகள் வெறும் பானைகளாகக் கிடந்தன: சுற்றத்தினர் மதுவை மறந்தனர்: உழவர் ஓதையும் அடங்கின: ஊர் விழாவும் ஒழிந்தன "என்றெல்லாம் ஒரு வெறுமைக்குள் வீசப்படும் அவலத்தைச் சித்திரிக்கின்றார்.

**"மண் முழா மறப்ப, பண் யாழ் மறப்ப,**
**இருங் கண் குழிசி கவிழ்ந்து இழுது மறப்ப,**
**சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப,**
**உழவர் ஓதை மறப்ப, விழவும்**
**அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப" (புறநானூறு, 65)**

**கையறுநிலைப்பாடல்கள் சிலவற்றில் உள்ள அதீத கற்பனையும் வியக்கத்தக்கது. கூற்றுவனைப் பார்த்து அவர்கள் கேட்கின்ற கேள்விகள் புதுமையானவை. பாடுநர்கள் கைதொழுது ஏத்திப் பொருள் பெறுவது போலத்தான் அவனிடம் இரந்து நின்று அவன் உயிரைப் பெற்றாயோ? அவனை எதிர்த்து நின்று உயிரைக் கவர்ந்திருத்தல் சாத்தியமில்லை என்று பாடுகின்றார் ஒரு புலவர்.**

> ஈழத்தின் போர் வாழ்வு, போரின் பிந்திய வாழ்வும் கையறுநிலை என்பதன் அர்த்தத்தைத் தெளிவாக உணர்த்தின. இழத்தலின் வலியை ஓர் இனம் சுமக்கத் தொடங்கியிருந்தது. எல்லாவற்றையும் இழந்து நனவுலகில் நசியும் அவலம் கிடைத்தது.

"பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி,
இரந்தன்று ஆகல்வேண்டும்" (புறநானூறு, 226)

நனிபேதையே நயனில் கூற்றம் என்றெல்லாம் கூற்றுவனை வசை சொல்லும் பல கையறுநிலைப்பாடல்களைக் காணலாம். 1964 இல் நேரு இறந்தபோது, கவியரசு கண்ணதாசன், "சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ? " என்று பாடியதும் திலீபனின் மரணத்தின் போது, புதுவை இரத்தினதுரை, "கூற்றுவனா அவனைக் கொண்டு வந்து தூக்கிலிடு" என்று சொன்னதும் இவற்றின் நீட்சியாகும்.

ஈழத்தின் போர் வாழ்வு, போரின் பிந்திய வாழ்வும் கையறுநிலை என்பதன் அர்த்தத்தைத் தெளிவாக உணர்த்தின. இழத்தலின் வலியை ஓர் இனம் சுமக்கத்தொடங்கியிருந்தது. எல்லாவற்றையும் இழந்து நனவுலகில் நசியும் அவலம் கிடைத்தது. இதனால்தான் அதன் பிறகு வெளிவந்த கவிதைத்தொகுதிகளின் பெயர்களும் எமக்கு கையறுநிலையின் நீட்சியை உணர்த்துகின்றன.

சேரனின் காடாற்று, அஞர், பா.அகிலனின் சரமகவிகள், வ.ஐ.ச.ஜெயபால னின் தோற்றுப்போனவர்களின் பாடல், கற்பகம் யசோதரவின் நீத்தார் பாடல், மிதுனின் துயரக்கடல், சிந்துதாசனின் கடலின் கடைசி அலை போன்ற தலைப்புகளே கையறுநிலையை வெளிப்படுத்திவிடுகின்றன. சேரனின் மூன்றுவரிக்கவிதை ஒன்று இவ் விடத்தில் முக்கியமானது.

"நீரற்றது கடல்
நிலமற்றது தமிழ்
பேரற்றது உறவு"

இவ்வரிகள் உணர்த்தும் இன்மையும் வெறுமையும் முக்கியமானவை. தமக்கு நெருக்கமானவர்களின் மரணத்தை தாங்கமுடியாது பாடப்பட்ட கையறுநிலைப்பாக்களைப் போலவே கொல்லப்பட்ட கவிஞன் ஒருவனின் சோகத்தை கற்பகம் யசோதர பதிவுசெய்கின்றார். எட்டு வயது மகனின் முன்னிலையிலே அவன் செய்வது அறியாது துடிக்கத் துடிக்க கவிஞர் சந்திரபோஸ் சுதாகர் (29.04.2007அன்று) சுட்டுக்கொல்லப்பட்டார். யாம் எந்தையும் இலமே என்ற பாரிமகளிரின் அதே கையறுநிலைச் சோகக்குரல் இதயத்தில் ஓங்கி அடித்து ஒலிப்பதை கற்பகம் யசோதரவின் கவிதையில் காணலாம். அந்த மகனின் நிலையில் இருந்து அவர் குரல் ஒலிக்கின்றது.

நான் அங்குமிங்கும் ஓடினேன்
பீதியை முதன்முதலாய் உணர்ந்து.
அன்று கதவுகள் பூட்டப்பட்டுவிட்டன
அயலில் யன்னல்களோ மூடப்பட்டுவிட்டன
விடாது கொட்டிய இமைகளுள்
நான் மீண்டும் மீண்டும் கண்டேன்
அந்தக் கொடியவர்களின் முன்னால்
எனது தகப்பன் சிறுத்து விழுந்ததை
ஓ எனது அப்பா!

அவரைத் தாக்கிய அக்கொடிய ஆயுதங்களை
நான் அறிந்ததில்லை.
வீட்டுள் அடைபட்டுக்கிடந்த மான்குட்டிகளென
தப்பித்து ஓட
இந்தச் சுவர்கள் இடிந்து விழாதோ என்று.
இந்தக் கதவை உடைத்து அவரைக் காப்பாற்ற
யாரும் ஓடிவருவாரோ என்று,
அப்பா சொன்ன கதைகளில் வராத
பேரச்சத்துள் சுழன்றோடினேன்

சற்றும் அசையாது
சுவர்கள் அங்கேயே இருந்தன, விறைத்து.
கதவுகள் திறபடவே இல்லை, இல்லை.
பதறி என் பார்த்தசைகள் சுவரெங்கும் சிதற
நீங்கள் எனது தகப்பனைக் கொன்றீர்கள்!
தன் அருகாமையில் இருத்தி எனக்காய்ப் பாடிய
அவரது பாடல்களைக் கொன்றீர்கள்!
உள்ளே சிதறிப்போன
என்னையும் அடித்துக்கொல்வதை விடுத்து
சுவர்களில் ஒட்டிய தசைகளை வழித்தெடுத்து
காயங்களாற் பள்ளமான ஓட்டை உடலினுள்
போட்டுச் சென்றீர்கள்

ஓராயிரம் பாடல்கள் அழிந்த ஓர் இரவில்
நீங்கள் நம்பினீர்கள்
அந்த ஒரு இரவில் மரணம் நிகழ்ந்தது
ஒரே ஒருமுறை என்பதாய்!
ஆனால் நீங்கள் மீண்டும் மீண்டும்
என் கண்முன்
எனது தகப்பனைக் கொன்றீர்கள் (பக் 78 – 80)



பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள் 9



# 31 இற்கான கவிதைகள்

வாழ்க்கை யெனும் வானத்தில் நீ
இறக்கைகள் விரித்துப் பறந்திடவே
என் சிறகுகளை உனக்காய் தருவேன்
மகனே.வானவில் போன்ற
நிலையற்ற இன்பங்களை
நோக்கிப் பறக்காமல் சூரியன்
போல ஜொலித்திடும்
வெற்றியை நோக்கி
இறக்கைகளை விரித்திடு மகனே...

**வி.இராகவன்.**
சா[redacted]ம் வீதி,
தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

கையளவு இதயத்திலே
கடலளவு கருணை வைத்து
தன் மழலை மகிழ்ச்சியிலே
தான் மனம் நிறைந்து
சிந்தனையின் சிறகொடித்து
சேய் அதற்கும் சோர்ந்துத் தைத்து
வான் புகழ் முடி சூட
தாய் அணாங்கு தவிப்பு என்ன

**வி.சதாமதி**

பெற்றுக் கொண்ட இறகுகளோடு பறக்க
கற்றுக்கொள்ளுங்கள்.
சிறகை விரியுங்கள்.
சிகரம் அடையுங்கள்.
நாளை அன்பால் இந்த
உலகை ஆளுங்கள்.

**ரியா. ரட்ணராஜா**
திருநெல்வேலி.

வாழ்வின் நற்பண்புகளை
ஒவ்வொன்றாய் எடுத்து
பிள்ளைக்கு சிறகுகளாய் கட்டி
சிறப்பாகப் பறப்பதற்காய்
வரித்து வடிக்கும்
தாயின் எண்ணங்கள்
தாரக மந்திரங்கள்

**அம்பனூர் ஐங்கரன்**

இருந்தது போதும் எழுந்திடு மகனே
நவீன யுகத்தில் அஞ்சா வீரனாய்
செட்டை கட்டி பறந்து
நாட்டைப் பலமாக்கிடு
கண்டு பிடிப்புக்களும்
ஆராய்ச்சிகளும் எமது உயர்வுக்கு
வழிகாட்டிடும் அளவுகோல்கள்

**புவனேந்திரன் கோபிஷாந்**
1ஆம் வட்டாரம், நெடுந்தீவு

தாயவளின் தோள் உனக்கு
கொழு கொம்போ பூங்கொடியே
பற்றி படர்ந்து விடு பாதச் சுவடுகளை
மாற்றத்தினை நோக்கி நகரும் காலத்தில்
எம் பண்பாட்டு வேர்களை அறுத்து கருக்கும்
பொய்யான சிறகுக்கு பலமில்லை
அடுத்த தலைமுறைக்கு எழுந்து பறப்பதற்கு
எடுத்து பகிர்ந்திடு தாய் வழி சீதனமாய்

*ர.கார்த்திகாயினி, தரம் 10*

**பரிசு பெறும் கவிதை**

சிறகொடிந்து
உடல் தளர்ந்த போதும்
மனம் தளர்ந்து போகாது தன்
மைந்தன் சிறகடித்துப்
பறப்பதற்காய் தன்
சிறகொடித்து பிள்ளை வளர
உயிர் கொடுக்கும் கண்கண்ட
தெய்வமே உனக்கு
நிகராக சொல்வதற்கு
எதுவும் இல்லை

**மோ.மேனகா**
153/கே.கே.எஸ் வீதி, கொக்குவில்


அடைகாத்து பொரித்த
குஞ்சு தாயிடம் விடைபெற்று
விண்ணில் பறக்க விரைய
தடையேதும் இல்லாது
நூலிடை கோர்த்து
வீரநடை போட
விழித்து விளப்புகிறாள்
வீரத்தாய்

**சி.தருண்**
அராலி சரஸ்வதி
வித்தியாலயம்

என் சிறகுகளை ஒடித்து
உன் சிறகுகள் வளர்ப்பேன்
என் கனவுகளை மறந்து
உன் கனவுகளை நேசிப்பேன்
உன் கனவுகள் கைகூடவே
என் உயிரையும்
தியாகம் செய்வேன்
இதுவல்லவோ! தாயன்பு

**வி.மேனகா**
கரவெட்டி

# மௌன மொழி 32



இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**30.01.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*
0773165555

# முக்கோண...



*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அதனால் தான் அவனது மிசினைக் கேட்டேன். பின்னர் நானும் கோயிலுக்குப் போனேன். “கோயில் பூசைக்கு வெற்றிலை காணாது. வேண்ட முடியும் என்றால் வேண்டி வா” என பூசகர் சொன்னார். வெற்றிலை வேண்ட நானும், பிரதீபனும் போனோம். அப்போது செ[illegible] ஒருவரது வீட்டுக்கு சென்று காற்போத்தல் சாராயம் வாங்கி இருவரும் [illegible]டித்தோம். அதன் பின்னர் ஒருவரிடம் காசு வேண்டச் சென்றோம். அவர் அங்கு இல்லாததால்” பத்மநாதன் வீட்டுக்கு போவோம்” பிரதீபன் சொன்னான்.

அதன்படி அவனை பத்மநாதன் வீட்டுக்கு சென்று அவனை இறக்கிவி[illegible] நான் முருகன் கோயிலுக்கு சென்றேன். கோயிலில் இருந்து வெற்றிலை போடுவதற்காக உறவினர் வீடொன்றுக்குச் சென்றேன். அப்போது அந்த வீட்டுக்கு இடக்கையில் இரத்தம் தோய்ந்த கத்தியோடு ரவி என்னைத் தேடி வந்தான். “என்ன கேமா?” என சத்தமிட்ட வாறு பாய்ந்து வந்தார். அங்கு நின்றவர்கள் அவரைத் தடுத்துப் பிடித்தனர். இரத்தம் தோய்ந்திருந்த கத்தியோடு வந்து ரவி என்னை நோக்கி பாய்ந்தால் எனக்கு என்ன ஏது என்று யோசிக்க முடியவில்லை. காலையில் சாராயம் குடித்ததாலும், பயத்தாலும் அங்கிருந்து எப்படி ஓடினேன் என்று இன்னும் எனக்கு நினைவில்லை.”

என்று சொல்கிறார் பிரதீபனை கடைசியாக அழைத்துச் சென்ற அவரது நண்பர்.

## கொலைக்குப் பின்....

கொல்லப்பட்ட பிரதீபனின் உறவினர்கள் கொலை நடந்த பின்னர்,அவளின் பெற்றோரின் வீட்டுக்குன் வந்து, சத்தமிட்டதுடன் கற்களையும் வீட்டின் மீது எறிந்து தாக்கினர்.அவளின் தந்தைஅணிந்திருந்த சேட்டும் இழுத்துக் கிழிக்கப்பட்டது. மிக மோசமான தூசண வார்த்தைகளால் ஏசியவாறு அவளின் தந்தையை ஒருவர் எட்டி உதைந்துமுள்ளார். பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அவளையும், அவளின் பெண் பிள்ளையையும், பெற்றோரையும் தமது வாகனத்தில் பாதுகாப்பாக ஏற்றி ஜெயபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, . பின்னர் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இரண்டு நாள்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தனர்.

ஒரு வாரம் அங்கே தங்கியிருத பின்னர், முழங்காவில் பொலிஸ் நிலையம் சென்று அறிவித்து விட்டு அவளின் பெற்றோர் தம் வீட்டுக்கு வந்தனர்.

அங்கே-

வீட்டு வேலியும், அவளது பெற்றோரின் வாழ்வாதாரமாக இருந்த கோழிக்கூடும் எரிக்கப்பட்டிருந்தன. கோழிகளும் காணாமல் போயிருந்தன. அவர்கள் வீட்டுக்கு வந்து சிறிது நேரத்தில் 25 பேரளவில் ஆண்கள் ,பெண்கள் எனத் திரண்டு வந்தவர்கள் மீண்டும் மோசமான வார்த்தைகளால் பேசியவாறு, வீட்டின் மீது கல்வீசத் தொடங்கினர். பின்னர் பொலிஸ் வந்து ஊரவர்களை கலைந்து போகச் செய்தனர்,. பின்னர் மீண்டும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர்களின் வேலி எரிக்கப்பட்டுள்ளது. கொலை தொடர்பாக முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கொலைக்குறிப்பு - 1

பிரதீபனை முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சடலத்தை பார்வையிட்ட மருத்துவர் வெட்டுக் காயமும் கழுத்தும் நெரிக்கப்பட்ட அடையாளமும் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். பிரேத பரிசோதனை கிளிநொச்சி மருத்துவமனையில் செய்யப்பட்டது, அங்கு “ ஒரு பக்க கன்னம் நிலத்தில் பட்டவாறே வீழ்ந்ததால், வாயின் ஓரத்தில் மண் ஒட்டியிருந்தது. மண் வாய், மூக்கு என்பவற்றுக்குள் போய் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது” என பிரேதபரிசோதனை செய்த மருத்துவர் கூறியுள்ளார். இப்படி மாறுபட்ட தகவல்களால் பிரதீபனின் உறவினர்கள் குழப்பமடைந்துள்ளனர். சடலத்தின் கழுத்தில் காயம் இருந்ததாக அடித்துக் கூறுகின்றார் பிரதீபனின் சகோதரன்.

### கொலைக்குறிப்பு - 2

முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் உள்ள போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இக் கொலைச் சம்பவத்தை விசாரிக்கின்றார். அவர் நியாயமான விசாரணை மேற்கொள்வாரா எனும் சந்தேகம் இருப்பதாகவும், கொலை செய்தவர் வசதியானவர் என்பதால் எல்லோரும் சேர்ந்து விசாரணையை மாற்றிவிடுவார்களோ எனும் சந்தேகம் உள்ளதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

### கொலைக்குறிப்பு - 3


சம்பவ இடத்தில் பத்மநாதன் என்பவர் தனது வீட்டு வாசலில் நின்று கொலைசெய்யப்பட்ட பிரதீபனோடு கதைத்துக்கொண்டு நின்றுள்ளார். அவர் எதிரில் தான் இருவரும் சண்டை பிடித்துள்ளனர். அவர் ஏன் இருவரையும் விலக்கி விட முயற்சிக்கவில்லை . சம்பவம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது எனவும் சத்தம் கேட்டே வெளியில் வந்து பார்த்ததாகவும் அவர் உண்மைக்கு மாறாகச் சொல்கிறார். ஆனால் பத்மநாதன் நின்றார் என்பதை ‘அவளும்’தனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாள்.

### கொலைக்குறிப்பு - 4

உழவியந்திரத்தில் பிரதீபனோடு சென்ற நண்பர் ,வீழ்ந்து கிடந்த பிரதீபனைத் தூக்காது தனது உழவுஇயந்திரத்தை எடுத்துக்கொண்டு கடந்து சென்றுவிட்டார். உழவு இயந்திரத்தை கொண்டு போய், வீட்டில் நிறுத்திவிட்டே பின்னர் சம்பவ இடத்துக்கு வந்தார். ஆயினும் பொலிஸார் அங்கு வர நண்பர் அங்கிருந்து மாட்டை மேய்ச்சலுக்கு விடச் சென்றுவிட்டாராம். பின்னர் பொலிஸார் போய் அவரை அழைத்து வந்துள்ளனர்.

# யானை வேண்டாம்

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள்மீது அக்கட்சியின் முக்கிய சில உறுப்பினர்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். நவீன் திஸாநாயக்க, தயா கமகே, ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோரே இவ்வாறு அதிருப்தியில் இருக்கின்றனர். புதிய நிர்வாகக்குழு பதவியேற்கும் நிகழ்வைக்கூட இவர்கள் புறக்கணித்திருந்தனர்.
ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் நோக்கிலேயே இவர்கள் ஐ.தே.கவுடனான உறவை புறக்கணித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.
நவீன் திஸாநாயக்கவை இணைத்துக்கொள்வதற்கான பேச்சுகள் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியில் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## பாணியும் 'பெயில்'



உலக நாடுகளையே உலுக்கிய கொரோனா வைரஸ் தொற்று இலங்கையிலும் கோரத்தாண்டவமாடி வருகின்றது. கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது அலையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் சிறப்பாகக் கட்டுப்படுத்தியது. சுகாதார, பாதுகாப்பு மற்றும் அரச நிர்வாகப் பொறிமுறைகள் உரிய வகையில் செயற்பட்டன. இதற்கு தேசிய ரீதியில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் பாராட்டுகள் குவிந்தன.
ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் முழுமையாகப் பின்பற்றப் படவில்லை. அவசர அவசரமாக வெளிநாட்டவர்களும் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டனர். அரச பொறிமுறை என்பது பொறுப்பை மறந்து செயற்பட்டது. இதன்விளைவாக கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2ஆவது அலையும் இலங்கையைத் தாக்கியது. அதன் தாக்கம் இன்னும் குறையவில்லை. தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் கொரோனா தடுப்பூசியை தருவிப்பதற்கு முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நேரத்தில் சுகாதார அமைச்சு, பாணிகளுக்கு முன்னுரிமையளித்தது.
இலங்கைக்கே உரித்தான பாரம்பரிய ஆயுள்வேத மருத்துவ முறைமையை நாம் கொச்சைப் படுத்தவில்லை. அதற்கென பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள் இருக்கின்றனர். அவர்கள்கூட 'பாணி'யை ஏற்கவில்லை. ஆனால் காளியம்மன் வந்து கனவில் கூறினார் எனவும், ராவணன் பாணியெனவும் பிரசாரம் செய்யப்படும் பாணிகளுக்கு பொறுப்புமிக்க அமைச்சர் முக்கியத்துவம் வழங்கியமைதான் வேதனைக்குரிய விடயமாகும்.
நாளை எவராவது நஞ்சு வழங்கினால்கூட அதனையும் சுகாதார அமைச்சர் பருகுவார் என அநுரகுமார திஸாநாயக்க கடந்தவாரம்கூட விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
எனவே, சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தாடல் எதிரணி மட்டத்தில் இடம்பெற்றுவருகின்றது. சுகாதார அமைச்சர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த அரசாங்கமும் 'பெயில்' என்பதால் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் எனவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எந்தப் பாணியை உட்கொண்டால் கொரோனா கிட்டவும் அண்டாது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னிராய்ச்சி சான்றிதழ் வழங்கியிருந்தாரோ அதேபாணியைக் குடித்த பவித்ராவுக்கே கொரோனா வந்ததுதான் ஆகப்பெரிய அபத்தம். ஆக மொத்தத்தில் கோத்தாவும் பெயில், பவித்ராவும் பெயில், பாணியும் பெயில்!

## சிவப்பும் கறுப்பும்



சிவப்புச் சால்வை அணிவதென்பது ராஜபக்சக்களின் அரசியல் ஸ்டைல்களில் ஒன்றாகும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைத் தவிர அரசியலில் ஈடுபட்டுள்ள ஏனைய அனைத்து ராஜபக்சக்களும் சிவப்புச் சால்வை அணிந்தே சபை அமர்வில்கூட பங்கேற்பார்கள். எனவே, சிவப்புச் சால்வை என்பது ராஜபக்சக்களின் குடும்ப அடையாளமாக மாறியுள்ளது.
இந்நிலையில் ராஜபக்சக்களின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துவரும் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் விசேட அறிவிப்பொன்றையும் விடுத்திருந்தார்.
" சிலர் குடும்ப பலத்தைக் காட்டுவதற்கு சிவப்புச் சால்வை அணிகின்றனர். ஆனால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்கும்வரை நாடாளுமன்றத்தில் நான் இனி கறுப்புச் சால்வை அணிவேன். இது குடும்பத்துக்காக அல்ல, நீதிக்காக" என்பதே மேற்படி அறிவிப்பின் சுருக்கமாகும்.
அதாவது ரஞ்சனுக்காகவும், ராஜபக்சக்களின் குடும்ப ஆட்சிக்கு எதிராகவுமே இவ்வாறானதொரு நடவடிக்கையில் ஹரின் இறங்கியுள்ளார்.
அதேவேளை, ராஜபக்சக்களை அவர் அண்மைக்காலமாக கடுமையாக விளாசித்தள்ளி வருகின்றார்.
'கோத்தா பெயில்' என்ற எண்ணக்கருவை உருவாக்கியதால் ஜனாதிபதிகூட ஹரின்மீது கடும் சீற்றத்துடனேயே இருக்கிறார். அம்பாறையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதுகூட ஹரினின் பெயரை குறிப்பிட்டு, காட்டமாக கோத்தாபய உரைநிகழ்த்திருந்தார். அந்த உரை தெற்கு அரசியலில் பெரும் பூகம்பத்தை உருவாக்கியமைய[illegible]ப்பிடத்தக்க[illegible]

## மங்களவின் கழுகுப்பார்வை



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் நகர்வுகள் தொடர்பில் அரசாங்கமும், அரச சார்பு அமைப்புகளும் கழுகுப்பா[illegible] செலுத்தி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தெற்கு அரசியலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கிய புள்ளிகளில் ஒருவராக மங்கள சமரவீ[illegible]த்தார். சர்வதேச மட்டத்தில் அவருக்கு பெரியதொரு வலைப்பின்னல் இருக்கீன்றது. பௌத்த தேரர்கள் சிலரின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்ததாலும், அவர் பௌத்த மதத்துக்கு எதிரானவர் என்ற தொனியில் மொட்டுக் கட்சியினர் பரப்புரைகளை முன்னெடுத்தாலும் பௌத்தர்கள் மத்தியில் மங்களவுக்கான செல்வாக்கு சரிந்துள்ளது. நாடாளுமன்ற அரசியலுக்கு மங்கள விடைகொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.
ஆனாலும் சர்வதேச மட்டத்தில் மங்களவுக்கான செல்வாக்கு குறையவே இல்லை. அவரை ஜனநாயகப் போராளியாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பார்க்கின்றனர்.
அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார். முக்கிய பதவிகளுக்கு இராஜதந்திரத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்து வருகின்றார். சமந்தா பவர் உட்பட இலங்கைக்கு நெருக்கடி கொடுத்த பலர் முக்கிய பதவிகளுக்கு தெரிவாகியுள்ளனர். அமெரிக்காவின் ஜனநாயகக்கட்சி ஆட்சியானது, கொழும்புக்கு தலையிடியையும், நெருக்கடியையும் கொடுக்கும் ஆட்சியாகும். ஜெனிவாவில் பிரேரணைகள் நிறைவேறுவதற்குகூட ஜனநாயகக் கட்சியின் ஆட்சியே காரணமாக அமைந்தது. மங்களவுக்கு நெருக்கமான பலர் ஜனநாயக கட்சியில் இருக்கின்றனர். மறுபுறத்தில் மங்கள பலமானதொரு சிவில் அமைப்பை உருவாக்கி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மங்களவின் நகர்வுகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.




○ சனத்




# இலவு காத்த கிளிகளும் தொழிற்சங்க முதலைகளும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரத்தில் இம்முறையும் திட்டமிட்ட அடிப்படையில் இழுத்தடிப்பு தொடர்கின்றது. அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது என தோட்டக் கம்பனிகள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டன.

அரசியல் மற்றும் தொழிற்சங்க பலத்தை பயன்படுத்தி ஆயிரம் ரூபா என்ற இலக்கை அடைவதற்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டாலும், கம்பனிகளின் உடும்புப் பிடியை அவற்றால் தகர்க்க முடியவில்லை.

அதேபோல, பெருந்தோட்டங்களின் காணி உரிமை தம்வசம் இருந்தும், அவற்றை குத்தகைக்கு எடுத்துள்ள தனியார் கம்பனிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்காவிட்டால் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்க நேரிடும் என்பதால் 'தந்திரோபாயப் பின்வாங்கலில்' ஈடுபட தொழிற்சங்கங்கள் உத்தேசித்துள்ளன. இதற்கான ஆரம்பமாகவே 'ஆயிரம் இல்லையேல் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவோம்' - என்ற அறிவிப்பு தொழிற்சங்கங்கள் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது. காலத்தை கடத்தும் வகையில் சம்பள உயர்வுப் பேச்சும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆனால் கடந்த தைகளைப் போல இந்தத் தையிலும் தொழிலாளர்கள் 'வலி'களை சுமந்து கொண்டே வாழவேண்டிய அவலநிலை தொடர்கின்றது.

**கூட்டு ஒப்பந்தம் என்றால் என்ன?**

வெள்ளையர்களிடமிருந்து 1972 இல் தேசியமயப் படுத்தப்பட்ட பெருந்தோட்டங்கள் 1990 காலப் பகுதியில் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன. அதன்பின்னரே 1992 முதல் கூட்டு ஒப்பந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அரச - தனியார் துறையினருக்கான சம்பளமானது சம்பள நிர்ணயச்சபையினூடாகவே நிர்ணயிக்கப்பட்டாலும், மலையகத் தொழிலாளர்கள் விவகாரத்தில் மேற்படி சபை தலையிடாது. கூட்டு ஒப்பந்தம் ஊடாகவே சம்பளம் நிர்ணயிக்கப்படும். இதன்படி பெருந்தோட்டக் கம்பனிகளும், தொழிற்சங்கங்களும் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் சம்பளத்தை தீர்மானிக்கும் முறைமையே கூட்டு ஒப்பந்தம் எனப்படுகின்றது.

பொருளாதாரம் - வாழ்க்கைச்செலவு ஆகியவற்றுக்கேற்ப சம்பளம் வழங்கப்படவேண்டும் என்பதாலேயே இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படுகின்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளம் மட்டுமல்ல தொழிலாளர்களின் நலன்சார் விடயங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. இருந்தும் அந்த சரத்துகளை தோட்டக்கம்பனிகள் கடந்த காலங்களில் பின்பற்றவில்லை. இதனால், ஒப்பந்தத்தின் முழுமையான நன்மையை தொழிலாளர்களால் நுகரமுடியாமலுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன தொழிலாளர்கள் சார்பிலும், சுமார் 23 கம்பனிகள் நிர்வாகத்தின் சார்பிலும் பேச்சுகளில் பங்கேற்கும். இதில் இரு அரச நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

**2013 முதல் 2019வரை 'சம்பள உயர்வு' பேச்சு கடந்துவந்த பாதை.......**

ஆரம்பகாலகட்டத்தில் பெருந்தோட்டத்துறையில் தொழில் புரியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான முறையிலேயே சம்பளம் வழங்கப்பட்டது. காலப்போக்கிலேயே இருபாலாருக்கும் ஒரே தொகை நிர்ணயிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் ஆயுள்காலம் 2015 மார்ச் 31 ஆம் திகதியுடன் காலாவதியானது. ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்குரிய பேச்சுக்கள் முன்கூட்டியே ஆரம்பமாகியிருந்தாலும், பொதுத்தேர்தல் நெருங்கியதால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் ஆயிரம் ரூபா சம்பளம் அவசியமென்ற கோரிக்கை தேர்தல் குண்டாக வீசப்பட்டது.

அதன்பின்னர் ஏனைய தொழிற்சங்கங்களும் ஆயிரம் ரூபாவுக்காக குரல் கொடுத்தன. எனினும், கம்பனிகள் இணங்கவில்லை. அப்போதும் ஆயிரம் ரூபா வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சம்பள உயர்வை வலியுறுத்தியும் மலையகத்தில் எட்டுத்திக்கிலும் வெடித்த தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு வடக்கிலும், கிழக்கிலும், தலைநகரிலும், புலம்பெயர் நாடுகளில்வாழும் பாட்டாளிவர்க்கத்தினரும் நேசக்கரம் நீட்டினர்.

இவ்வாறு 18 மாதங்களாகப் போராட்டங்கள் தொடர்ந்ததால் தொழிலாளர்களின் பொருளாதாரமும் ஆட்டம் காணத் தொடங்கியது. ஆரம்பத்தில் தொடர், அதன்பின்னர் சுழற்றி முறையென போராட்ட வடிவங்கள் உருமாறியதாலும், தொழிலாளர்களின் வறுமையைப் பயன்படுத்தியும் இறுதியில் ஏனோதானோவென ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை. 2013 காலப்பகுதியில் பெருந்தோட்டத்தொழிலாளர்கள், அடிப்படை நாட் சம்பளமாக 450 ரூபா உட்பட நாளாந்த சம்பளமாக 630 ரூபாவை பெற்றனர்.

2016 இல் அடிப்படை நாள் சம்பளமாக 500 ரூபாவும், வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவாக 60 ரூபாவும், நிலையான கொடுப்பனவாக 30 ரூபாவும், உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 140 ரூபாவுமாக நாளொன்றுக்கு 730 ரூபா வழங்கப்பட்டது. எனினும், 2019 இல் புதிதாக கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 500 ரூபாவிலிருந்து 700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. விலைக்கேற்ற கொடுப்பனவாக 50 ரூபா வழங்கப்பட்டது. விலைக்கொடுப்பனவு, வரவுக்கான கொடுப்பனவு என்பவை நீக்கப்பட்டன. இதன்படி நாளொன்றுக்கான சம்பளமாக 750 ரூபாவை தொழிலாளர்கள் பெற்றனர். கூட்டிக்கழித்து பார்த்தால் ஆயிரம் ரூபாவை எதிர்பார்த்த தொழிலாளர்களுக்கு வெறும் 20 ரூபாவே சம்பள உயர்வாக கிடைத்தது என்பது கசப்பான உண்மையாகும்.

தற்போது அடிப்படை நாள் சம்பளமாக 700 ரூபாவை பெறும் தொழிலாளர்கள் புதிய ஒப்பந்தத்தின் ஊடாக மேலும் 300 ரூபா அதிகரிக்கப்பட்டு ஆயிரம் ரூபாவை அடிப்படை நாள் சம்பளமாக எதிர்பார்க்கின்றனர். இதற்காக 5 வருடங்களுக்கு மேல் காத்திருக்கின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களின் கோரிக்கையும் இதுவாகவே இருக்கின்றது.

இந்நிலையில் 'அடிப்படை' என்ற பதத்தைநீக்கிவிட்டு, தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாள் சம்பளம் (அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி) 2020 மார்ச் முதல் ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என 2020 ஜனவரியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்திருந்தார். ஆனால் ஜனாதிபதியின் அறிவிப்பைக்கூட கம்பனிகள் மதிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் ஆயிரம் ரூபா தொடர்பான யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. இதனை வழங்க மறுக்கும் கம்பனிகளின் முகாமைத்துவம் மறுசீரமைக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கும் கம்பனிகள் பணிவதாகத் தெரியவில்லை. தம்மால் முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டமே நடைமுறைக்கு வரவேண்டும் என்பதில் முதலாளிமார் சம்மேளனத்தினர் உறுதியாக நிற்கின்றனர். அதாவது அடிப்படை நாள் சம்பளத்தை 50 ரூபாவால் மட்டும் உயர்த்துவதே சம்பனிகளின் நோக்கம் என மலையக சிவில் அமைப்புகள் குற்றஞ்சாட்டு கின்றன. இப்படி, தாம் கொண்ட பிடியில் முதலாளித்துவ முதலைகள் உறுதியாக நிற்பதால், இலவுகாத்த கிளிகளாக தொழிலாளர்கள் கனவு கண்டுகொண்டிருக்க, ஆயிரம் ரூபா சம்பளம் எட்டாக்கனியாகிக் கொண்டே போகிறது. ■



> **'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆனால் கடந்த தைகளைப் போல தொழிலாளர்கள் 'வலி'களை சுமந்து கொண்டே வாழவேண்டிய அவலநிலை இந்தத் தையிலும் தொடர்கின்றது.**

# பெண்ணுடல் மீதான சவால்கள்






## பெண்ணுறுப்பு குறும்படத்தை முன்வைத்து சில குறிப்புகள்

○ ஆரதி

அருண் மிஜோ எழுதி இயக்கியுள்ள குறும்படம் "பெண்ணுறுப்பு". பிரதான பாத்திரத்தில் நடித்திருப்பது பூஜா. இந்தப்படத்தை இப்பொழுது நீங்கள் இணையத்தளத்திலும் பார்க்கலாம். இதை, ஹிந்தியில் புகழ்பெற்றிருக்கும் நடிகை கீர்த்தி சுரேஷ் தன்னுடைய சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். மிகப் பரவலான கவனத்தைப் பெற்றிருக்கும் இந்தப்படம், ஏராளமான மதிப்புரைகள், விமர்சனங்களையும் கண்டு வருகிறது.

அந்த அளவுக்கு பார்வையாளர்களை ஈர்க்கிறது பெண்ணுறுப்பில் பேசப்படும் விவாதப் பொருள்.

வாய் பேசமுடியாத இளம் பெண்ணொருவரின் உள்ளுணர்தலே படத்தில் பேசப்படுகிறது. குறிப்பாக பெண்களைப் பொதுவாக ஆண்கள் நோக்கும் விதமே இங்கே மையம்.

எல்லா இடங்களிலும் தான் சந்திக்கும் ஒவ்வொரு ஆணும் தன்னை எப்படி நோக்குகிறார்கள், எப்படி உணர்கிறார்கள் என்பதைக் கண்டுணரும்போது அவர்கள் மீது அவளுக்கு வெறுப்பேற்படுகிறது. யாரையும் நேசிக்கவோ நம்பவோ முடியாது என்ற நிலை. அவளுடைய தந்தையே இதில் விலக்கல்ல என்றாகிறது. இதனால் அடையும் உளப் பாதிப்பு, உளச் சிக்கல் குறித்த பார்வையை முன்வைக்கிறது படம்.

சந்திக்கும் அத்தனை ஆண்களும் தப்பானவர்களா? என்று நீங்கள் கேட்கலாம். அத்தனை பேரும் தப்பானவர்களாக இல்லாதிருக்கலாம். ஆனால், பெண்ணின் அனுபவம் அல்லது பெண்களின் நிலை என்பது எல்லோரிடத்திலும் (ஆண்களிடம்) எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை எவராவது மறுக்க முடியுமா? அதிகம் ஏன் நீங்கள் பெண்களாக இருந்தால் இதை உங்களால் மறுக்க முடியுமா? அல்லது உங்களுக்கு மகளோ, சகோதரிகளோ இருந்தால் இந்த எச்சரிக்கை உணர்வு உங்களுக்குள் தொழிற்படுமா? இல்லையா?

எனவே பொதுவெளியில் பெண் எப்போதும் எந்தவொரு ஆணைக் குறித்தும் முதல் நிலையில் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க முயற்சிக்கிறாள், இருக்க வேண்டியவளாகிறாள்.

நன்றாகப் பழகிய பின்னர் அவளுக்குக் குறித்த நபர் அல்லது சம்பந்தப்பட்ட நபர்கள் மீதும், அந்தச் சூழலின் மீதும் தெளிவும் நம்பிக்கையும் ஏற்படலாம். ஆனாலும் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்தப் பாம்பு தன்னுடைய வேலையைக் காட்டும் என்று அவளால் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அதனால் ஒரு குறைநிலை நம்பிக்கையோடு அல்லது உள்மறைந்திருக்கும் ஒரு எச்சரிக்கை உணர்வோடுதான் எப்போதும் அவள் இருக்கிறாள். இதுதான் யதார்த்தம். இது யாராலும் மறுக்க முடியாத உண்மை. பெண்ணுறுப்பு இந்த உண்மையை ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்கள் என்ற அதிகார மையத்திலிருந்து பெண்கள் எப்படித் தம்மைக் காத்துக்கொள்ளவும் கட்டமைத்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது என்பதை இது பெண்ணுடல் எதிர்கொள்ளும் நெருக்கடி என்பதால் இந்தப் படம் அந்த அரசியலைப் பேச முயற்சிக்கிறது. அதில் அது கணிசமான எல்லையைத் தொட்டுமுள்ளது. ஆண்களுக்குள்ளிருக்கும் பால்நிலை சார்ந்த உணர்வென்பது நாகரீகமற்றது, இன்னும் அது விலங்கு நிலையில் - நாகரீகமடையாத நிலையில்தான் உள்ளது என்பதை நிறுவுவதன் மூலம் இது நிரூபிக்கப்படுகிறது.

இன்னும் அந்தப் பலவீனமான வன்மத்தை - உடலிச்சையின் கட்டுப்பாடற்ற நிலையை, மன இச்சையாக பரிமாற்றம் செய்வதை இயக்குநர் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். குறும்படம் என்ற எல்லையைக் கடந்து, அடையாளத்தைக் கடந்து, மிகப் பெரிய தாக்கத்தை - ஒரு முழுச் சினிமா அளிக்கக் கூடிய நிறைவை பெண் உறுப்பு குறும்படம் தருகிறது.

கண் பார்வையற்ற ஒருவர் இந்தக் கதையைச் சொல்வதாக படம் ஆரம்பமாகிறது. மகிழ்ச்சியாக ஒரு நாளைத் தொடங்கும் பதின் பருவத்துப் பெண்ணின் குதூகலத்தோடு எல்லையற்ற பெரு வெளியில் தன்னுடைய சிறகுகளை விரித்து அவள் பறக்கத் துடிக்கிறாள். இந்த உலகத்தை அவள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத் தயாராக இருக்கிறாள். ஒரு உயிரி என்ற வகையில் இது இயல்பு. இது அதனுடைய உரிமையும் கூட என்பது அழகாகக் காண்பிக்கப்படுகிறது.

மிக அருமையாக இந்தக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. மகிழ்ச்சி கொப்பளிக்கும் ஆரம்பக் காட்சி அவளைக் குறித்து நமக்கு அறிமுகம் செய்யும் விதம் வேறு. ஆனால், படம் நகரத் தொடங்கும்போது அந்த நாள் எப்படிச் சிதைகிறது? அதில் நாமெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ எப்படிப் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். நாமறிந்தும் அறியாமலும் நமக்குள் தொழிற்படும் மிருக நிலை அல்லது வன்ம உணர்வுகள் எப்படியானவை என்பதை அடுத்தடுத்த காட்சிகள் சொல்லிக்கொண்டு செல்லும் போது நாம் அடைகின்ற உணர்வு வேறு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திலும் பால் நிலை சார்ந்தும், அதன் காரணமாகவும் பெண்கள் சந்திக்கின்ற நெருக்கடிகள் எப்படி? எவ்வளவாக உள்ளன என்று தெரியும்போது நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக பாலியல் .

படம் நகர நமக்குள் (ஆண்களாக இருந்தால்) கேள்விகளும் குற்றவுணர்ச்சியும் மேலெழத் தொடங்குகின்றன. இந்த உள் விசாரணைகளை நமக்குள் உருவாக்குவதே படத்தின் நோக்கம். அதில் வெற்றி கிட்டுகிறது என்றே உணர்கிறேன்.


பெண்ணுடல் எதிர்கொள்ளும் சவால்கள், பெண் உளம்கொள்ளும் நெருக்கடிகள் என்ற வகையில் பெண்ணுடல், உள அரசியலை முன்னிறுத்துப் பேசும் பெண் உறுப்பு குறும்படம், நம் பார்வைக்கும் உரையாடலுக்குமானது. இதைக் குறித்த நேர்நிலைப் பார்வைகள் அவசியம். அது நம்முடைய சமூகத்தை வளப்படுத்தும். பார்க்கவும் உரையாடவுமான தொழிற்படுதலுக்காகப் பெண் உறுப்பு குறும்படத்தைப் பார்ப்போம். ■

# 'கலைச்செல்வனின் பிரதிகள்'

## ஒரு பார்வை சில வார்த்தைகள்

○ இராகவன்

இந்தப்பிரதி காலங்கடந்து வெளிவந்திருக்குமொன்றுதான். புலம்பெயர் வாழ்வியலின் பன்முகப் பரிமாணத்தின் அச்சொட்டான வெட்டுமுகத்தை இந்தப் பிரதி தந்திருக்கிறது. தந்தையின் தோளில் ஏறிநின்று தேருலாவினைப் பார்க்கும் சிறுவனைப் போலவே நாங்களும் கலைச்செல்வனின் தோளில் ஏறிநின்றுதான் புலம்பெயர் வாழ்வியலைப் பார்க்கவேண்டியிருப்பது இந்தப் பிரதியின் வழியே சாத்தியமாகிறது. அது தவிர்க்கமுடியாததாகவும் இருக்கிறது. புலம்பெயர் இலக்கிய உருவாக்கத்தின் ஒரு முன்னோடியாக கலைச்செல்வனை அடையாளப்படுத்துவதில் மாற்றுக் கருத்துக்கு இடமளிக்காத வகையில் இந்தப்பிரதியானது முக்கிய பங்காற்றுகிறது. இந்தப்பிரதியின் பல்வகைத் தன்மையினூடே வியாபகம் கொள்ளும் அரசியல்தான் கவனிப்புக்குரியதாகின்றது. இது காலாவதியாகிப் போனதொன்றாக மட்டுமன்றி நிகழ் காலத்துக்குரியதையும் எதிர்காலத்துக்குரியதையும் நுணுக்கமாகக் கோடிடுவதையும் குறிப்பிட்டாக வேண்டும். ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் நேர்ந்திருக்கக்கூடிய தவறுகள், அத்தவறுகளின் தோற்றுவாய், அந்தத்தவறுகள் நேர்ந்துவிடாமல் தடுத்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள், நேர்ந்த தவறுகளைச் சீர்செய்யக்கூடிய வாய்ப்புக்களிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள், திரும்பவும் தவறிழைத்த சந்தர்ப்பங்கள், மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கத் தவறிய சந்தர்ப்பங்கள், உலக அரசியல் வரலாற்றிலிருந்து பாடங்கற்றுக் கொள்வதைத் தவிர்த்துக்கொண்ட சந்தர்ப்பங்கள், சுயநலன் சார்ந்த அரசியல், ஒருபோதும் விட்டு விலகி வந்து சுயவிமர்சனம் செய்துகொள்ள முடியாத ஆயுதக் கலாசாரம் என சகலதையும் சீர்தூக்கிப் பார்த்துச் சுய விமர்சனம் செய்து கொள்வதற்கும் இந்தப்பிரதி எமக்கு இடமளிக்கின்றது. இந்தப் பிரதியைத் தொகுத்த லக்ஷ்மிக்கும் புத்தகமாகக் கொண்டுவந்த காலச்சுவடு பதிப்பகத்துக்கும் பாராட்டும் நன்றியும். ■





# குழைக்காட்டு கதைகள்

○ கோகுலராகவன்

மனித நாகரிகத்தின் முதல் தொழில் வேட்டைதான். அதற்கு அடுத்தது தான் விவசாயம். வேட்டையே மனிதனுக்கு உணவைக் கொடுத்த- மனித குலத்தைப் பிழைக்க வைத்த கைங்கரியம். மனிதன் ஆயுதங்களை உருவாக்கவும் வேட்டையே பிரதான காரணியாக இருந்தது. மனித வேட்டைக்கும் இவ்வாயுதங்களே உதவின.

காலம் போகப்போக விவசாயம் வேட்டையைப் பின்தள்ளியது. வேட்டை பாவத் தொழிலாகவும், பின்நாளில் அது ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவும் மாறி விட்டது. இப்பொழுதும் காடு சார்ந்த பிரதேசங்களில் வேட்டை பொழுது போக்கு அம்சமாக இருந்து வருகின்றது. சிலவேளை பகுதி நேரத் தொழிலாகவும் இருக்கின்றது. 'இடியன்' என்ற கட்டுத்துவக்கைக் கண்டுபிடிக்க வேட்டையே காரணமாகி இருந்தது. இதற்கான வெடி மருந்தை முன் குழாயால் இடித்து நிரப்புவதால் அது 'இடியன்' எனும் காரண இடுகுறிப் பெயரைப் பெற்றுவிட்டது.

எங்கள் ஊரில் வேட்டை சிறு அளவிலேயே இருக்கின்றது. காடுகள் அழிக்கப்பட்டு தென்னந்தோப்புக்கள் உருவாக்கப்பட்ட பின்னர், மிருகங்களின் நடமாட்டம் குறைவடைய, வேட்டையும் அருகி விட்டது. சில காலங்களுக்கு முன் 'கலைப்பு வேட்டை' எனும் வகையில் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

பகல் பொழுதில் பத்துப் பதினைந்து பேர் சேர்ந்து ஒரு சிறு காட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்து கூக்குரல் இட்டு, பற்றைகளை அடித்து,அங்கு ஒளிந்திருக்கும் பன்றியை எழுப்பி ஒரு இறக்கத்துக்கு கலைப்பார்கள். அந்த இறக்கத்தில் துப்பாக்கியுடன் வேட்டைக்காரர் உருமறைப்பில் இருப்பார். ஓடி வரும் பன்றியைக் குறி பார்த்துச் சுடவேண்டும். கனகப்பா இந்தக் கதையை அலாதியாகச் சொல்லுவார். ஒவ்வொரு திசைக்கும் யார் யார் போனார்கள்,எவ்வாறு கலைத்தார்கள் என்றெல்லாம் சொல்லிக் கதையை முடிக்கும்போது,

"தீர்ந்தது வெடி

விழுந்தது பண்டி"

என்று குரலை உயர்த்திச் சொல்வார்.

இத்தகைய பற்றைசார்ந்த, பொட்டல் காட்டில் இந்தியன் ஆமியின் அடி, ஆய்க்கினை தாங்க முடியாமல் ஒரு சுற்றி வளைப்புக்கு தப்பி நாங்கள் பத்துப் பன்னிரண்டு பேர் ஒளிந்திருந்தோம். இந்தியன் ஆமி கண்ணிவெடி ஒன்றைக் கைப்பற்றி வெடிக்க வைத்தார்கள். இந்தச் சத்தத்தில் திடுக்கிட்டது நாம் மட்டுமல்ல பக்கத்துப் பற்றைக்குள் ஒளிந்திருந்த பன்றியும் தான். தன்பாட்டில் படுத்திருந்த பன்றி வெடிச் சத்தம் கேட்க, 'சராரென்று' பிய்த்துக் கொண்டு ஓடியது. நல்லகாலம் அது புலி இல்லை.

பன்றி வேட்டை சில சமயம் ஆபத்தாகவும் அமைந்துவிடும். வெடிபட்ட பன்றியின் 'துவாலையை' பின்பற்றிச் சென்று பன்றியின் உடலைக் கைப்பற்றிக் கொள்வர். இப்படித் தேடிப் போய் அரைகுறை உயிருடன்இருக்கும்பன்றியிடம்மாட்டுப்பட்டுக் காயப்பட்டவர்களும் உண்டு. காயப்பட்ட பன்றி மூர்க்கமாகவே தாக்கும் தன்மை கொண்டது. 'ஏறால்' கிழித்துவிடும். எனக்கு நெருங்கிய நண்பர் ஒருவர் இவ்வாறு தாக்கப்பட்டு தவழ்ந்து தவழ்ந்து வீடு வந்து சேர்ந்தார். கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் சிகிச்சையும் பெற்றார்.

இப்படித்தான் ஒருவர் தனியாளாகவே வேட்டைக்குப் போவார். இடியன் துவக்கை களவாக வைத்திருந்தார். இரவு வேட்டைக்கு போனார். ஒளிப்பில் காத்திருந்தவர்,பெரிய பன்றி ஒன்று வருவதைக் கண்டார். இதனை 'மைந்தன்' பன்றி எனவும் அழைப்பர். பன்றி முதல் சுற்றில் பன்னிரண்டு குட்டிகளை ஈனும். இது படிப்படியாக குறைந்து கடைசி ஈற்றில் ஒரே ஒரு குட்டியை ஈனும். அது ஒரேயொரு குட்டி என்பதால் தாயில் நிறையப் பால் குடித்து 'மதாளிப்பாக' வளரும்.

இந்த வகைப் பன்றிக்கே வெடி வைத்தார். பன்றி விழவில்லை. காயப்பட்டு தப்பிவிட்டது. இவர் துவாலையைப் பின் தொடர்ந்து சென்றிருக்கிறார். ஒரு கட்டத்தில் வீழ்ந்து கிடந்த பன்றியைக் கண்டுபிடித்து விட்டார். பன்றி குறை உயிர். இவர் இறந்து விட்டது என்று நினைத்து தூக்கினார். பன்றி தன் கடைசி மூச்சுப் பிரியும் வேளை தன் ஆக்ரோசத்தைக் காட்டிவிட்டது. தலையை ஒரு சிலுப்பு சிலுப்பியது. இவரின் தொடையில் பன்றியின் 'ஏறு' வேட்டைப்பல் பதினைந்து இழை போடக் கூடிய காயத்தை உண்டு பண்ணியது.


ஒருவாறு தப்பி வந்து ஆஸ்பத்திரியில் மருந்து கட்டிக்கொண்டு நொண்டி நொண்டி கடையடிக்கு வந்தார்.

"என்னடாப்பா காலில?"

யாரோ ஒருவர் கேட்டார்.

"ஆருக்குத் தெரியும், பண்டியின் வாயுக்கை கிறிஸ் கத்தி இருக்குதெண்டு"

பாவம் மனிதர். அதன் பிறகு வேட்டைக்குப் போவதில்லை. ■




(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 'கலியாண கெமிஸ்றி'


சாதாரணமாக அவர் இந்தச் சில்லறை விழாக்களுக்கெல்லாம் போகமாட்டார். அந்த அளவுக்கு மூக்கு நீண்ட மனுஷன். இப்போது மணியத்தைத் தேடிவந்ததின் காரணம் பொன்னம்பலத்தாரின் மூத்த பெடியனுக்கு அவர் மூலமாக தன்னுடைய மகளுக்கு சம்பந்தம் கேட்க! நாகலிங்கம் இலங்கை கஸ்டம்ஸில் கொடிகட்டிப் பறந்ததால் அவரை 'கஸ்டம்ஸ்' நாகலிங்கம் என்றால்தான் கொழும்பில் தெரியும். கஸ்டம்ஸில் சம்பாதித்த பணத்தில் அவர் கொழும்பில் பல இடங்களிலும் வீடுகளை வாங்கி வாடைக்கு விட்டதால், அதைப் பராமரிக்கவென அடிக்கடி கொழும்புக்குச் சென்றுவருவார். இதனால் சிட்னியில் அவர் கொழும்பு நாகலிங்கமாகிவிட்டார். ஆம்பிளை வாரிசு வேணுமென்ற முயற்சியில் தோற்றுப்போனதால் நாகலிங்கத்தாருக்கு நான்கும் பொம்பிளைப்பிள்ளையள். தான் கறுப்பாக இருந்தாலும் தனக்கு வாற பெம்பிளை சிவப்பாய், வடிவாய் இருக்கவேணுமெண்டு அந்தக்காலத்தில் சல்லடைபோட்டுத் தேடி கலியாணம் கட்டினவராம். தனக்குப் பேசிவந்த சம்பந்தங்களில், ஒவ்வொரு நொட்டை சொல்லி மற்றவர்களின் வயித்தெரிச்சலைக் கட்டிக் கொண்ட பாவமோ என்னவோ, அவரது பொம்பிளைப் பிள்ளையள் நான்கும் அச்சொட்டாக அவரைப்போலவே பிறந்தன. 'சீதனத்தை விசுக்கி எறிந்தால் எல்லாம் தானாய் வரும்' என்றிருந்தவர், கெமிஸ்றியின் புதிய விளையாட்டைக் கண்டு நிலைகுலைந்து போனார். மணியத்தாரும் கொழும்பு நாகலிங்கத்தின் ஆய்க்கினை தாங்கமாட்டாமல், சந்து பொந்தெல்லாம் புகுந்து தேடியும் சோடி சேர்ப்பு முயற்சி சரிவரவில்லை. நாளடைவில் மணியத்தின் மகனுக்கு அடலெயிட்டில் நல்ல வேலையொன்று கிடைக்கவே, மகன் குடும்பத்துடன் அவர் அடலெயிட்டுக்கு போய் இரண்டு வருடமாச்சு. 'இங்கையும் கலியாணங்கள் பேச வெளிக்கிட்டு, வந்த இடத்திலும் பிரச்சினையளை விலைக்கு வாங்காமல் இருங்கோ...' என மகன் கட்டுப்பாடுகள் போட்டுள்ளதால், மணியத்தார் இப்போ கலியாணங்கள் பேசுவதில்லை. அங்குள்ள இந்துக் கோயிலுடன் அவரது பொழுது போகிறதாம்.

சில வருடங்களின் பின்னர், திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்ளவென, அடலெயிட்டிலிருந்து சிட்னிக்கு மனைவியுடன் வந்திருந்த மணியம், எதிர்பாராத விதமாக அங்கு பொன்னம்பலத்தாரின் மூத்த மகனைச் சந்தித்தார். அவன் யப்பானியப் பெண்ணுடன் வந்திருந்தான். அவர்கள் இருந்த மேசையிலேயே, மணியம் தம்பதிகளுக்கும் இடம் ஒதுக்கியிருந்தார்கள். கூடவந்த யப்பானியப் பெண், தனது மனைவி என்றும், பெயர் கைக்கோ, தன்னுடன் வேலை செய்கிறாள் என்றும், பொன்னம்பலத்தாரின் மகன் அறிமுகம் செய்தான். கைக்கோ இருக்கையிலிருந்து எழுந்து தலையைக்குனிந்து பணிவாகக் கைகூப்பி வணக்கம் சொன்னாள். கைக்கோவின் இந்தப் பணிவையும் பண்பையும் கண்டு, மணியத்தாரின் மனைவி மலைத்துப் போனார். 'எங்கடை இந்தக்காலத்துப் பிள்ளையள் இப்பிடிச் செய்யுங்களே...?' என மணியத்தின் காதுக்குள் குசுகுசுத்தார்'. கைக்கோவை மணியத்தின் மனைவிக்கு நன்கு பிடித்துக்கொண்டது. இருவரும் ஓயாது பேசிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே இந்துசமய திருமணங்கள் பற்றியும் பேச்சு வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடாது, 'உன்னுடைய தமிழ்க் கணவனில் உனக்குப் பிடித்த விஷயம் என்ன...?' என்று நோண்டினார் மணியம். கைக்கோ, கணவனை காதல் பொங்கப் பார்த்து முறுவலித்தபடியே, 'அவர்களது குடும்பத்திலுள்ள பெற்றோர் பிள்ளைகள் உறவும், பெற்றோர்மீது பிள்ளைகள் கொண்டுள்ள அன்பும் எனக்குப்பிடித்துக் கொண்டது. யப்பானிய குடும்ப அமைப்பில், இதற்கு நாம் மிகவும் முக்கியத்துவம் கொடுப்போம்' எனச்சொல்லி யப்பானிய குடும்ப உறவுமுறை பற்றி விபரமாகச் சொன்னாள். இவர்களுடைய கதைகள் ஒருபுறத்தே தொடர மற்றப்பக்கத்தில் தாலிகட்டு முடிந்தது. 'மணமக்களை ஆசீர்வதிக்கலாம்' என ஐயர் அறிவிக்கவே, மணவறையை நோக்கி கியூ நீண்டது. கியூவிலே மணியம் தம்பதிகளுக்கு முன்னே கொழும்பு நாகலிங்கத்தின் மகள் தனது வெள்ளைக்கார கணவனை அணைத்தபடி நின்றாள்.

நாகலிங்கத்தின் மகளது 'மாநிறமும்' அவுஸ்திரேலிய கணவனின் 'கடும்வெள்ளை'யும் மணியத்தாரின் கண்களுக்கு அழகாகத் தெரிந்தன.

கெமிஸ்றி விளையாட வந்துவிட்டால், கல்யாண பந்தங்களிலே இனமொழி வேறுபாடுகள் மறைந்துபோய்விடும் போல அவருக்குத் தோன்றியது. இந்த வேதிவிளையாட்டுக்கு பிரத்தியேக 'கெமிஸ்றி' ரியூஷன் தேவையில்லை என்கிற உண்மை மணியத்தாருக்கு உறைத்தது. ■

சர்மிலா வினோதினி






# இழக்கப்போகிறோமா இன்னுமொரு நிலத்தை?

நாம் வாழும் இந்தப் பூமியின் நிலமும் நீரும் பல வழிகளில் தம்மை மீளமைத்துக் கொள்கின்றன. அதன் காரணமாக பூமியின் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. இப்படி மீளமைக்கப்படும் வளங்களின் செறிவும் அதன் நிலைத்திருப்புமே வளமான ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. இந்நிலையில் ஒரு நாடு, தான் கொண்டிருக்கிற வளங்களில் சரிவுகளைச் சந்தித்தால் அது அந்த நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார நிலைமைகளில் தாக்கங்களைச் செலுத்தும்.

இலங்கையின் சுற்றுச்சூழல் கட்டமைப்பில் தாக்கங்களை நிகழ்த்தக்கூடிய பல விடயங்கள் நாளுக்கு நாள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானது மண் கனியவள அகழ்வாகும். இலங்கையின் அனேகமான தாழ் நில கரையோரப் பிரதேசங்களில் மண் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

இவற்றில் அண்மைக்காலத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்த விடயமாக மன்னாரின் இல்மனைற் உட்பட்ட கனிய வளங்களை அகழ்வதற்கான பரிசோதனை முயற்சிகள் காணப்படுகின்றன.

**மன்னார்த் தீவும் கனிய வளங்களும்**

பெருநிலப் பரப்பு, தீவகம் என்று இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டிருக்கிற மன்னார் மாவட்டத்தின் தீவக நிலப்பரப்பானது, ஒப்பீட்டளவில் அதிக சனத்தொகையைப் பதிவு செய்கிறது. சுமார் 30 கிலோமீற்றர் நீளமும், 6 கிலோ மீற்றர் அகலமும் கொண்டு சுமார் 140 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பல்லுருவத் தன்மையான கடற்கரைகளையும் கொண்டது. இங்கிருக்கக்கூடிய காணிப்பயன்பாட்டு கோலங்களில் குடியிருப்புக்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற நிலங்கள் தவிர ஏனைய நிலப்பயன்பாட்டில் இங்குள்ள மணற்குன்றுகளும் கரையோர மணல் வளங்களும், பனை வளமும், கண்டற்தாவரப் பரம்பலும் முக்கியம் பெறுகிறன. இவற்றில் இங்குள்ள மணல் குன்றுகள் சுமார் 8000 வருடங்களுக்கு முற்பட்ட புவியியல் வரலாற்றுக் காலம் தொட்டு இயற்கைக் காரணிகளால் இப்பிரதேசத்தின் கரையோரங்களில் படிய விடப்பட்டுள்ளன என்பதை புவிச்சரிதவியல் ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அத்துடன் இந்தக் கனிய வளங்களின் படிவுக்கு செல்வாக்கு செலுத்திய காரணிகளில் மன்னார் தீவின் புவியியல் அமைவிடமும் பிரதான பங்கு வகிக்கிறது. வரலாற்றுக் காலம் தொடக்கம் மெல்ல மெல்ல நிகழ்ந்த இக் கனிய மணற் படிவுகள் தீவின் கரையோர பாதுகாப்பில் முதன்மை வகிக்கின்றன.

திரளான இந்தக் கனிய மணற் படிவுகளை மன்னார் தீவின் வடக்கு மற்றும் வட கிழக்கு கரையோரங்களிலும் பேசாலை மற்றும் தலைமன்னாரை அண்டியுள்ள பல பிரதேசங்களிலும் அவதானிக்க முடிகிறது.

**கனியவள அகழ்வு முயற்சிகள்**

2013, 2014 ஆம் ஆண்டுகளில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் நிலம் சார்ந்த வளங்களை பிணக்குகளற்று உரிய முறையில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட காணிப்பயன்பாட்டு வரைபடங்கள் பிரதேச ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் தயாரிக்கப்பட்டன. இந்த நிலையில் 2010 மற்றும் 2014ம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவின் பேர்த் பகுதியை தலைமை அலுவலகமாக கொண்டுள்ள ரைற்றானியம் சான்ட் நிறுவனத்தின் ஈடுபாட்டுடன், புவிச்சரித வியல் அளவை சுரங்கப் பணியகத்தின் அனுமதியுடன் தீவிலுள்ள கனிய மணல் தொடர்பான துளையிடல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் தொடர் ஆய்வு நடவடிக்கைகள் 2016, 2017 ஆம் ஆண்டுகளிலும் நிகழ்த்தப்பட்டு இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மண் மாதிரிகள் தென்ஆபிரிக்காவின் விசேட கனியவள ஆய்வுகூடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 2018 இல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆய்வின் முடிவில் தடித்த படை அமைப்பில் இல்மனைட் உட்பட்ட முக்கிய கனிய வளங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றை அகழ்ந்து எடுப்பதற்கான முன் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகழ்வு தொடர்பான அரசின் நியாயப்படுத்தல்கள் போருக்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்க ளில் முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருகின்றது எனவும், மன்னார்த் தீவின் கனிய வளங்களுக்கான சர்வதேசச் சந்தையை சீனா உட்பட்ட நாடுகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடுகிறது. அதே நேரம் சுரங்க மற்றும் கனிய வள அகழ்வின் மூலம் சுமார் 2.9 வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி பெறப்படுகின்றது. இதனால் மன்னாரில் மேற்கொள்ளப்பட இருக்கும் கனியவள அகழ்வின் மூலம்மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீத ததில் அதிகரிப்பை ஏற்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்தலாம் எனவும் நியாயப்படுத்தப் படுகிறது.



**சுற்றுச்சூழல் நிலைமைகள்**

காலநிலை மாற்றத்தால் அழிவுகளைச் சந்திக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலையில் இருக்கிறது. பொருளாதாரம் பணம் என்பதற்கு அப்பால் ஒரு பிரதேசத்தின் புவியியல் அமைவிடம் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த காரணிகளின் இருப்புத் தொடர்பாக அதீத கவனத்தைக் குவித்தலே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தடுத்து நிலையான வாழ்வியலை பேணிக்கொள்வதற்கான வழியாகும். இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தின் தீவகப் பிரதேசத்தில் காணப்படும் மண்படைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டால், கடற்கரைப் பிரதேசத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும். கடலரிப்பு துரிதப்படுத்தப்படும், மண்ணரிப்பு மற்றும் இயற்கையான காற்றுத் தடைகளாக விளங்குகின்ற கண்டல்களும் பனைமரங்களும் வலுவிழப்பதோடு அவற்றின் அழிவுக்கும் வழிகோலும். இந்துமா சமுத்திரத்தில் இலங்கைக்கு அண்மையில் காணப்படுகின்ற சமுத்திரத் தகடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால், புவிநடுக்கம் மற்றும் சுனாமி அனர்த்தங்களும் எழுவதற்கான சாத்தியங்கள் உள்ளன, இவ்வாறான ஒரு அனர்த்தம் நிகழ்ந்தால் மன்னார்த் தீவின் இருப்பு என்பது கேள்விக்குறியாகும்.

தவிர, கடல் மட்டத்தோடு ஒப்பிடுகிறபோது இயல்பிலேயே தாழ்நிலமாக காணப்படுகின்ற தீவகத்தின் வெள்ள அனர்த்த நிலைமைகள் துரிதப்படுத்தப்படுவதோடு தரைக்கீழ் நீர்வளத்தின் இருப்பிலும் தாக்கங்களைச் செலுத்தும். அத்துடன் தீவகத்தின் தரைக்கீழ் நீர்ப்படுக்கைகள், மண் படைகளுக்கு கீழ் சேமிக்கப்பட்டிருப்பவை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களின் நீர்ப்படுக்கை களோடு ஒப்பிடுகிறபோது மன்னார் நீர்ப்படுக்கைகள் முற்றிலும் வித்தியாசமானவை. எனவே இந்தக்கனிய மணல் அகழ்வானது, கடல்நீர், ஊடுருவலுக்குத் துணைபுரிவதோடு, தரைக்கீழ் நீர் உவர் அடைவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும். வைகாசி, ஆனி உட்பட்ட கோடைகாலங்களில் தீவின் நீர்வளம் குறைந்து செல்வதும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

**மக்களின் விழிப்புணர்வும் எதிர்வினையும்**

கோடையிலும் மாரியிலும் இயற்கை அனர்த்தங்களைச் சந்தித்து வாழ்கின்ற மன்னார் மக்களை இந்தக் கனிய வள அகழ்வானது மேலும் பாதிக்கும் என்பதை அறிந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நிகழ்த்திய கவன ஈர்ப்புப் போராட்டத்தின் விளைவாக, இந்தக் கனிய வள அகழ்வு முயற்சிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

**எதிர்காலமும் இருப்பும்**

ஈழத் தமிழர்கள் சார்ந்து இருக்கக்கூடிய ஒவ்வொரு அடையாளங்களும் உருக்குலைக்கப்பட்டு கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்ற இந்தக் காலத்தில் வரலாற்றுக் காலத்துடன் தொடர்புபடுகின்ற நிலத்தையும் இந்த நிலத்தின் இயற்கை வளங்களது இருப்பினையும், உறுதிப்படுத்த வேண்டும். ஒரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் அந்தப் பிரதேச மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்குமெனில் அவை தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மன்னார்த்தீவின் கனியவள அகழ்வு தொடர்பாக மீள் பரிசீலனை செய்து மக்களின் இயல்பான வாழ்வை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் குறித்த பிரதேச மக்கள் பிரதிநிதி களும் அரச அதிகாரிகளும் கவனம் எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களினதும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களினதும் வேண்டுகோள்.

○ வடகோவை வரதராஜன்

# சிங்கம் திருந்திய கதையும் தென்னை நாற்று தெரிவும்



நாத்து மேடையில் தென்னம்நாத்து குறைஞ் சது பத்து மாதமாவது இருந்திருக்க வேணும். நாத்து மேடையில் முதலில் முளைச்ச பிள்ளைகளாக இருக்க வேணும். இவைதான் கெதியா வளரும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பது நினைவில் வர செல்லையா அண்ணரின் ஞாபகம் வந்தது.
பாவம், கிடங்குகளை கிண்டிவிட்டு, தென்னம்பிள்ளை களை நடாமல் எனக்காகக் காத்தி ருப்பார் . இன்றும் முக்கிய ஒரு கூட் டம் இருக்கிறது .
அதற்கிடையில் செல்லையா அண் ணையைப் பார்த்துவர, அவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளை விரட்டினேன் .
செல்லையா அண்ணர் வீட்டு அரி நெல்லி மரத்தின் கீழ் சிறுவர் கூட்டம் ஒன்று கும்மா ளம் இட்டுக்கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் சிறுவர்களோடு சிறுமியாக பர்வதம் மாமியும் , உப்பும் மிளகாய் தூளும் கலந்த கலவையில் நெல் லிக்காயை பிரட்டி தானும் தின்று, சிறுவர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருத்தார் .
என்னைக்கண்டதும் தனது சிறுவர் விளையாட்டை நினைத்தோ என்னவோ ஒரு வெட்கச் சிரிப்புடன் உள்ளே சென்று விட்டார் .
செல்லையா அண்ணையும் பறியாப் பரமுவும் மாம ரத்தின் கீழ் கதைத்து கொண்டிருந்தார்கள்.
சிங்கம், தான் வெட்டிய குழிகளில் இரண்டுபடை பொச்சுகளை அடுக்கி கொண்டிருந்தார்.
நான் மோட்டார் சைக்கிளை நேரே மாமரத்தடிக்கே விட்டேன் .
பறியாப் பரமு , "என்ன விதானையார், பேப்பரை நாம்பன் உன்னி இழுத்தமாதிரி நேரை மாமமரத்த டிக்கே வந்திட்டாய்" என்றவாறு சுருக்கட்டையைத் தூர எறிந்தார்.
சிரித்துக்கொண்டு சைக்கிளில் இருந்து இறங்கிய நான் பரமரைப் பார்த்து
"பரமண்ணை இண்டைக்கெண்டாலும் அந்த பேப் பரரை நாம்பன் கதையைச் சொல்லுங்கோ" என் றேன் .
"நீயும் விடுகிறேல்லை எண்டுதான் நிக்கிறாய்" என்று குரலை செருமி தயார்படுத்தினார்.
நானும் ஆவலுடன் கதை கேட்கத் தயாரானேன் .
சுற்றுமுற்றும் பார்த்த பரமர்,
"அங்காலை பெடி பெட்டையள் நிக்குதுகள். பேந்து ஒரு நாளைக்கு சொல்லுறன்" என்று சொல்ல, நான் காற்று இறங்கிய பலூனானேன் .
உடனே செல்லையர் ,
"நீ சொல்லு மோனை, நானும் கேட்பம்" என்றார்.
"அண்ணை தென்னம்பிள்ளைகளை தெரிவுசெய் யேக்க நாங்கள் அவதானமாக இருக்கவேணும். தரமான பிள்ளைகள்தான் சிறப்பா வளர்ந்து ,எங்க ளுக்கு கெதியாகவும், நிறையவும் பலன் தரும்"
"தரமான பிள்ளையளை என்னண்டு கண்டுபிடிக்கி றது ?"
"ஒவ்வொண்டாச் சொல்லுறன் கேளுங்கோ,
1) நாத்து மேடையில் முதலில் முளைச்ச பிள்ளைக ளாக இருக்க வேணும். இவைதான் கெதியா வளரும்.
2 ) அடிப்பகுதி நல்லாப் பெருத்திருக்க வேணும். இதுகள் உறுதியா வளரும் .
3) கெதியா கீற்றிலைகள் வந்திருக்கவேணும். இதுகள் கெதியா காய்ப்புக்கு வரும் ."
"கீற்றிலை எண்டு நீ எதைச் சொல்லுறாய்?" என்றார் செல்லையர்
"இளம் தென்னம்பிள்ளைகளின் இலைகள் எல்லாம் பிரியாமல் , சேர்ந்து வாழையிலை போல இருக்கும். கெதியா வளருற பிள்ளைகளுக்கு இந்தக் கீற்றிலைகள் வேளைக்கு வந்திடும்.
4 ) நடப்போகிற பிள்ளைக்கு குறைந்தது மூண்டு இலைகளாவது இருக்கவேணும். இதில ஒண்டு கீற்றுப் பிரிந்த இலையாக இருக்கவேணும்.
5 ) இலைகள் வெளிறி இருக்காமல் கடும் பச்சை யாக இருக்க வேணும்.
6 ) இலையின் அடித்தண்டு ஒடுங்கி இருக்காமல் அகலமாக இருக்கவேணும் . இப்படியான இலைத் தண்டு உள்ள மரங்கள்தான் அகலமான ஓலை களை உற்பத்தியாக்கி நிறைய ஒளித்தொகுப்பைச் செய்து அதிகளவு உணவைத் தயாரிச்சு தேங்காய்க் குக் கடத்தும் .
7 ) நிறைய வேர் இருக்க வேண்டும் . அப்பதான் வேர் கள் பரந்து வளர்ந்து மரத்தை தாங்கி வளர்க்கும். அதோட நாலா பக்கமும் போய் நீரையும் கனியுப் புக்களையும் உறிஞ்சும் .
8 ) நாத்து மேடையில் தென்னம்நாத்து குறைஞ்சது பத்துமாதமாவது இருந்திருக்க வேணும்
" உப்பிடி எல்லாம் பாத்து வாங்க, தென்னம் பிள்ளை விக்கிறவன் ஓமாமே? அவன் பிடுங்கித் தாறத்தைத் தானே நாங்கள் வாங்கிக் கொண்டந்து நடுகிறது"
"அத்துக்குத்தான் நல்ல தாய்மரத்தில் இருந்து எடுத்த நெத்துக்களை நாங்கள் நாத்துமேடையாய்ப் போட வேணும்"
"உதென்ன தாய்மரம், தேப்பன்மரம் எண்டு பூராயம் பறையிறாய். நல்ல தாய்மரத்தை எப்படிக் கண்டு பிடிக்கிறது ?"
"அதுக்கும் முறையள் இருக்கண்ணை . முதலிலை தாய்மரம் 25 வயதுக்கு கூடிய மரமாய் இருக்க வேணும்"
"உதென்ன சிலம்பாய்க் கதை . தென்னை மரத்துக்கு பிறப்பு சேட்டிப்பிக்கற் ஆரும் வைச்சிருக்கிறவையே"
"தென்னமரத்தின்ரை வயதைக் கண்டுபிடிக்க முறை யொண்டு இருக்கண்ணை"
"உதென்ன , புது வியளம் பறையிறாய்? மாட்டுக்குப் பல்லைப் பாத்து வயதைச் சொல்லலாம். தென்னை மரத்துக்கு என்ன மசிரைப் பாத்து வயது சொல்லுறது ?."
"மாட்டுக்கு பல்லுப் பாக்கிறமாதிரித்தான் , தென்னை மரத்தில் ஓலை விழுந்த தழும்பை எண்ண வேணும் .இந்த எண்ணிக்கையை 13 ஆல பிரிச்சு , வாற தொகையோட 7 ஐக் கூட்டினால் தென்னையின் வயது அண்ணளவாக வரும் ."
"எட கோதாரி, உப்பிடியும் ஒரு முறை இருக்கே ? சரி, நீ தாய்மரத் தெரிவைப் பற்றி சொல்லு" என்றார் செல்லையர் . இதற்கிடையில் சிங்கம் வந்து ,
"பொச்செல்லாம் அடுக்கிப் போட்டன் . இனி என்ன செய்ய" என்று செல்லையரைக் கேட்டார்.
"எருவை அள்ளிப் போடு சிங்கம், தம்பியோடை கதைச்சுப் போட்டு வாறன்" என்று செல்லையர் சிங்கத்தை அனுப்பினார் .
"சிங்கம் இப்ப ஒழுங்காய் இருக்கிறானோ அண்ணை" என்று நான் செல்லையரைக் கேட்டேன்.
"இப்ப வலு திருத்தமடா தம்பி , பெண்சாதியோடை ஒழுங்காய் இருக்கிறான்"
"அதுதான் இப்ப சிங்கத்திரை வீட்டிலை இரவு, சத்தம் சாவடி இல்லை . எப்படித் திருந்தினவன்?"
"அந்தக் கூறுகெட்ட கதையை உனக்குச் சொல்ல வேணும்" என்றபடி புகையிலையை நெட்டிகிழித்து, சுருட்டு ஒன்றைச் சுற்றிய பரமர்,
"உனக்குத் தெரியும்தானே சனிக்கிழமைகளில் சிங் கம் கண்மண் தெரியாமல் தண்ணியைப் போட் டுட்டு வீட்டை போய், பெண்டிலை மட்டு மரியாதை இல்லாமல் நாயே, பேயே எண்டு பேசிற விசயம்"
"ஓமண்ணை, உந்தப் பிரச்சினை என்னட்டையும் வந்தது
ம் போகக் கூடாது' என்று சிங்கத்தை பேசிக் கலைச் சனான்."
"அட குறுக்காலை போவானே நீயே அந்த இளம் குடும்பத்தை பிரிச்சு வைச்சது ? அதுக்கு பிறகு தண்ணி யடிச்சால் சிங்கம் வீட்டை போறேல்லை. தாய் வீட் டைதான் போய்ப் படுப்பான் " பரமர் சுருட்டை மூட்டி பொக்கு பொக்கு என்று புகை விட்டபடி தொடர்ந்தார்.
"ஒருநாள் சிங்கத்துக்கு காசு கனமாய் கிடைக்கேல்லை. அளவாய் குடிச்சுப் போட்டு நிதானத்தோடு , தாய் வீட்டை படுக்கப் போயிருக்கிறான் . தாய்க்காறி வற்றாப்பளை அம்மன்கோவிலுக்கு வீட்டைப் பூட் டிக்கொண்டு போயிட்டாள். சிங்கத்துக்கு என்ன செய்யிறது எண்டு தெரியாமல் போச்சு . ஒருமாதிரி மசிஞ்சு மசிஞ்சு மனிசி வீட்டை போட்டான் .
அண்டைக்கு இரவு எந்தச் சத்தம் சாவடி யும் இல்லை . அடுத்தநாள் சிங்கத்தின்ரை பெண்டில் வலு சந்தோசமாய் கரிச்சுப் பொரிச்சு திறமான சாப்பாடு குடுத்திருக்கிறாள். பின்னேரம் சிங் கத்தின்ரை மனிசி 'நேற்று எவ ளவு காசுக்கு குடிச்சனி'?
எண்டு சிரிச்சுக்கொண்டு கேட்டிருக் கிறாள். இவனும் பயந்து பயந்து '200ரூபாய்க்கு' எண்டிருக்கிறான். மனிச்சிக்காரி ஒரு 200 ரூபா யைக் குடுத்து "இந்தா நேற்றுக் குடிச்ச அள வுக்கு குடிச்சிட்டு வா" எண்டதோடை, இன் னும் ஒரு 20 ரூபாயை கொடுத்து "வரேக்கை வாச பீடாவும் போட்டுக்கொண்டு வா" என்றிருக்கிறாள் . கிழமைக்கொரு நாள் குடிச்ச சிங்கம் இப்ப பெண்சாதியின்ரை காசிலை ஒண்டவிட்ட ஒருநாள் குடிக்கி றான் .
அவளும் மாசமாய் இருக்கிறாள்.
"பரமர் முகத்தை அப்பாவி யாக வைத்தவாறு சொல் லிக் கொண்டிருந்தார்.
நளினச் செல்லையரோ மறுபக்கம் திரும்பி வாயைப் பொத்திய படி வயிறு குலுங்கச்சிரித்துக் கொண்டிருந்தார். ■



# ஆஸ்திரேலியாவை வதைத்தது எது?

ஆர்.லயனல்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்துள்ளது ஆஸ்திரேலிய அணி. ஏகப்பட்ட விமர்சனங்கள், கேலிப் பேச்சுக்கள், நக்கல்கள், குத்தல்கள் என நாலாபக்க மும் ஆஸ்திரேலியாவைச் சூழ்ந்துள்ளன. உண்மையில் ஆஸ் திரேலிய அணிக்கு இதுவொரு வரலாற்றுத் தோல்விதான். இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு எதிராக டெஸ்ட் தொடர்களை இழந்த போதி லும், இந்தியாவுக்கு எதிராக இந்த வருடம் முடிந்த தொடர்தான் ஆஸ் திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் மோசமான தோல்வியாகப் பார்க்கப்படுகின்றது என்பதென்னமோ உண்மைதான்.

தொடர் ஆரம்பிக்கும் முன்னதாக ஆஸ்திரேலியா 4:0 என்ற அடிப்ப டையில் தொடரைக் கைப்பற்றும் என்று சொல்லப்பட்டது. வேகப் பந்து வீச்சுக்குச் சாதகமான ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான இசாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார் இருவரும் காயமடைந்தமையும் இந்திய அணியின் தலைவரான கோலி முதலாவது ஆட்டத்துடன் நாடு திரும்பியமையும் இந்திய அணிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்பட்டது. இந்தக் குறைத்து மதிப்பிடல்கள்தான் ஆஸ்திரேலியாவை முதலாவதாக வதைத்தது. அத்துடன் நின்றுவிடவில்லை. இந்திய அணியை இந்தத் தொடர் முழு வதும் காயம் விடாது விரட்டியது. சமி, ஜடேயா, பும்ரா, விஹாரி, அஸ்வின் என்று ஒருவர் பின்னால் ஒருவராகத் தொடர்ந்து காயங்களுக் கும் உபாதைகளுக்கும் உட்பட்டனர். இறுதியில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து இந்திய ஏ அணி களமிறங்குகின்றது என்று நகையாடப்பட் டது. ஆனால் அந்த ஏ அணியே ஆஸ்திரேலியாவைப் போட்டு புரட் டியெடுத்தது என்பதுதான் வரலாறு.

இரு அணிகளுக்கும் இடையில் பிரிஸ்பெய்னில் நடைபெற்ற இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் இதுவரை 1,013 இலக்குகளை வீழ்த்திய ஆஸ்தி ரேலியாவின் ஸ்ராக், ஹேசில்வூட், கம்மின்ஸ், லையன் கூட்டணியை எதிர்த்து ஒட்டுமொத்தமாக 13 இலக்குகளை வீழ்த்திய நடராஜன், சைனி, தாக்கூர், சிராஜ் கூட்டணி களமிறங்கியது. வெற்றிக்காக ஓடுபவனை விட சாவைத் தவிர்க்க ஓடுபவனின் வேகம் அதிகம் என்பார்கள். இந்திய அணி வீரர்களின் ஓட்டம் இந்த இரண்டாவது வகையானது. அதாவது இப்போதும் இல்லாவிட்டால் வேறு எப்போதும் தமக்கு வாய்ப்பு இல்லை என்ற நிலையில் தம்மை நிரூபிக்க வேண்டும் என்ற கட்டாயத் தில் இந்திய வீரர்கள் களமிறங்கினார்கள். அவர்களின் வினைத்திறனுக்கு ஆஸ்திரேலிய வீரர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. அத்துடன் இந் திய அணியிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை. ஆனால் ஆஸ் திரேலியாவிடமோ அது எக்கச்சக்கம். இந்த அளவுக்கு அதிகமான அழுத் தமும்தான் இந்திய அணி ஆஸ்திரேலியாவை அதன் மண்ணில் வைத்து வதைத்தெறியக் காரணமானது. உண்மையில் இந்திய அணியின் இந்த வெற்றி ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பெரும் கறை. காலத்துக்கும் நின்றுநிலைக்கப்போகும் துர்க்கனவு. அத்துடன் தன் தந் தையின் இறப்பு வீட்டுக்குச் செல்லாது அணியுடன் தங்கிநின்று இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்ட சிராஜ், தன் மனைவியின் பிரச வத்துக் குக்கூட வீடு திரும்பாமல் ஆஸ்திரேலியாவில் தங்கிநின்று தன்னை நிரூ பித்த நடராஜன் ஆகியோர் நிச்சயம் போற்றப்பட வேண்டியவர்கள்.

**" தப்புக்கணக்கைப் போட்டுத் தவிச்சாய் தங்கமே ஞானத்தங்கமே**
**ஆட்டம் முடிஞ்சு ஓட்டமெடுத்தாய் தங்கமே ஞானத்தங்கமே"**



## புதிர் 27






மாயன்

மூன்று கண்ணாடிகளும் ஒரே மாதிரியே இருந்தன. அவற்றுக்கிடையில் எவ்வித வேறுபாட்டையும் அவர்களால் முதலில் காணமுடியவில்லை. தீபவர்மன் எத்தனையோ போர்க்களங்களை சம்யோசிதமான வியூகங்களால் வென்றிருந்தாலும், இப்படியான நுண்ணிய விடயங்களில் புகுந்துவிளையாடு மளவுக்கு ஆற்றல் பெற்றவனில்லை. எனவே கொஞ்சம் நிதானமாக யோசித்தே, மூன்று கண்ணாடிகளில் எது சரியான கண்ணாடி என்று கண்டுபிடிக்க முடிவெடுத்தான்.

ஆனால் பவளராணியோ அவசரப்பட்டாள். " தீபவர்மரே, அதிகநேரம் இங்கே நிற்பது இன்னும் ஆபத்தையே கொண்டுவரும். விரைவாக கண்டு பிடிப்போம்" என்றவளாக மூன்று கண்ணாடிகளையும் பரிசோதிக்கத் தொடங்கினாள். பின்னர் சட்டென ஒரு கண்ணாடி முன்னால் நின்றாள்.

"இதுதான் உண்மையான கண்ணாடி" என்று உறுதியான குரலில் சொல்லி விட்டு, தன்னைப் பின் தொடருமாறு தீபவர்மனுக்கு சைகை செய்தாள். ஆனால் தீபவர்மனுக்கு குழப்பம்.

" எப்படி இதுதான் சரியான கண்ணாடி என்று கண்டுபிடித்தீர்கள்?" என்று அவன் கேட்டான். " மாயங்களில் வல்லவளான எனக்குத் தெரியாதா இதில் எது உண்மையானது என்று. நம்பினால் வாருங்கள் தாமதிக்காமல்" என்று விட்டு, கண்ணாடிக்குள் இறங்கி அடுத்த நொடியே அவள் காணாமல் போனாள். தீபவர்மனுக்கு இன்னும் குழப்பம் அதிகரித்தது.

அத்தோடு தனியாக அந்த அத்துவானத் தீவிலே யாருமில்லாமல் நிற்பது உள்ளூர ஒரு கிலேசத்தை உண்டுபண்ணியது. ஆனாலும், பவளராணி சென்ற கண்ணாடி உண்மையான கண்ணாடியாக இருக்கும் என்று அவன் நம்பவில்லை. மீண்டும் அந்த மூன்றையும் உற்று நோக்கினான். அவனால் அப்போதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

" சரி வருவது வரட்டும்" என்று நினைத்தவனாக பவளராணி புகுந்த கண்ணாடிக்குள்ளேயே அவனும் காலடி வைத்தான். அவனை முழுதாக அந்தக் கண்ணாடிக்குள் இறங்கிய மறுநொடியே, அது பயங்கரமாகச் சுற்றியது. ஏதேதோ விநோத ஒலிகளெல்லாம் எழத் தொடங்கின. பின்னர் இடி இடிப் பதைப் போல ஒரு சிரிப்பொலியோடு மர்மக் குரல் ஒன்று ஒலித்தது.

"தீபவர்மா, உன் தலைவிதி இப்படியாகி விட்டதே? பவளராணியால் உன் வாழ்வையும் தொலைத்து விட்டாயே?" என்று அந்தக் குரல் சொல்லவும் தீபவர்மனுக்கு தூக்கி வாரிப்போட்டது. தான் தவறான கண்ணாடிக்குள் நுழைந்துவிட்டோம் என்று அவன் உணர்வதற்குள்ளாக, அந்தக் கண்ணாடியில் இருந்து தீபவர்மன் வெளியே எங்கோ தூக்கி எறியப்பட்டான். ஆனால் அவன் வந்து விழுந்த இடம் அற்புதத்தீவல்ல, அது புதிர்மலை!

(புதிர்கள் தொடரும்)